வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 12

ரசிகர்களின் இதயதெய்வம் எம்.ஜி.ஆர்.

[The Unique Nature of MGR Fans]

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்

3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 12

இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.

(The Unique Nature of MGR Fans)

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 12
நூலின் பெயர்	:	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
அட்டை வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (ஜூன் 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	162
விலை	:	Rs.200/-

\- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 12*
Title	:	*Irasikarkalin ithayatheyvam MGR* *[The unique nature of MGR fans]*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/462 First floor, Kambar 2nd Street* *Kambar Salai, Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publish	:	*June 2019*
Pages	:	*162*
Price	:	*Rs.200/-*

அண்ணாதிமுக உருவாகக் காரணமாக இருந்த எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தின் தற்கொலைப் படையைச் சேர்ந்த சைதையார் அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்.



அன்புக் காணிக்கை

எம்.ஜி.ஆருக்காகத் தமது இன்னுயிரை
ஈந்த உடுமலைப்பேட்டை இஸ்மாயில்
சமயநல்லூர் சுகுமாரன் போன்ற
எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு
இந்நூல் காணிக்கை.



நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பல துறை சார்ந்த பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல்

ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றிய போது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சிபெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100 என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் *www.tamilauthors.com* என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வருகிறார்.

எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். தற்போது ஒன்பது நூல்கள் வெளியிட்டுள்ளார். தற்போது எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை:

1. வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும், 2.எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3. சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்), 4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட, 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்., 6. எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி, 7. எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி, 8. ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்., 9. வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I, 10. நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I], 11. பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II].

பனிரெண்டாவதாக இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். *என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் 'பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள் மற்றும் உன்னொடு உரையாடுதல்' திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் "Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You" Language of Love, A Lady at the little gate, என்று மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதிய சிறுகதைகள் 'அமராவதியின் காதல்' என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய "என்னோட ராசி நல்ல ராசி" என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் 'மரங்களே திருக்கோயில் களின் முன்னோடி' முதலான கட்டுரைகள் வருகின்றன.

என்னுரை

எம்.ஜி.ஆர். ஆய்வு பொருளானது ஏன்?

எம்.ஜி.ஆர். ரசிகர்களின் தனித்தன்மை என்ற இந்நூல் எம்.ஜி.ஆர். பற்றி நான் எழுதி வெளியிடும் பன்னிரண்டாவது நூலாகும். வெற்றித் திருமகன் என்ற பெயரில் வரிசையாக இது வரை பதினோரு நூல்கள் வந்துள்ளன. அவை, 1. வெற்றித்திருமகன், 2. எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3. சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்), 4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட, 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்., 6. எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி, 7. எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி, 8. ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்., 9. வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I, 10. நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப்பாடல்கள் ஆய்வு-1] 11. பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -II]

இதுவரை வெளிவந்த எந்த நூலுக்கும் நான் என்னுரை எழுத வில்லை. பத்து நூல்கள் எழுதி முடித்த பின்னரே என்னுரை எழுத வேண்டும் என்ற முடிவோடு இருந்தேன்.. எம்.ஜி.ஆரை பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது என்னுடைய எண்ணம், அவா, நோக்கம், இலட்சியம்.. அவரைப் பற்றி நூறு நூல்களுக்கும் அதிகமாக எழுதுவதற்கு விஷயம் உண்டு. சமூகவியல், இலக்கியம், திரைப்படத்துறை என 3 துறைகளிலும் அவரைப் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்வதற்கு தேவையான ஆய்வுப் பொருள் அவரது படங்களிலும், வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் உண்டு. ஆய்வாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், எம்.ஜி.ஆரை ஆய்வுப் பொருளாகக் கொண்டு பல துறைகளிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாராய்ச்சி நம்முடைய வருங்கால சந்ததியினருக்கு, தமிழ்க் கலைகள் தமிழ்ப்

பண்பாட்டோடு இரண்டறக் கலந்திருப்பதைத் தெளிவாக உணர்த்தும்.

ஒரு கலை வடிவம் என்பதில் அந்த மொழி பேசும் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் பொதிந்திருப்பது பின்வரும் சந்ததியினருக்கான கருத்துக் கருவூலமாகும்.

எம்.ஜி.ஆர். தமிழ்ப் பண்பாட்டு பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக திகழ்கிறார். அவருடைய படங்கள் சங்க காலம் முதல் தற்காலம் வரையிலான தமிழ் பண்பாட்டின் பலவகைக் கூறுகளை உள்ளடக்கிய தொடர்ச்சியாக விளங்குகின்றன. சங்க இலக்கியத்தை *The Heroic poetry* என்பர். எம்.ஜி.ஆர். படங்களும் *heroic art films* தான். பழங்கால இலக்கியத்தில் அகம், [காதல்] புறம் [வீரம்] என்று வகைப்படுத்தப்பட்ட காதலும், வீரமும் உலகளாவிய இலக்கியத்தின் பாடுபொருள்கள் ஆகும். எம்.ஜி.ஆரின் படங்களும் இவ்விரு பாடுபொருள்களைத் தமது உள்ளடக்கமாகக் கொண்டு திகழ்கின்றன. அவர் படத்தை தற்காலத்தின் வீரக்கலை வடிவம் *[heroic representation of contemporary period]* என்று கூறலாம்.

சங்க இலக்கியத்தின் கருப்பொருளான அகம் புறம் என்பன எம்.ஜி.ஆரின் படங்களில் இன்னும் மேலும் மேம்படுத்தப்பட்ட நிலையில் தற்காலத்திற்கும் பொருந்தும் வகையில் சமுக நலம் அல்லது பொது நலச் சிந்தனைகள் சேர்க்கப்பட்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன.. காதல், வீரம் ஆகியவற்றுடன் தாய்ப்பாசம், பொது மக்கள் நன்மை , நீதிக்காகப் போராடுதல் ஆகிய மூன்றும் முப்பெரும் வாழ்வியல் உண்மைகளாக எம்.ஜி.ஆர். படங்களில் சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தன்னலச் சிந்தனை பெருகி வரும் இந்நாளில் எம்.ஜி.ஆரைப் பற்றி நம் இளைய தலைமுறைக்கு கற்பிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அது மூத்தவர்களின் கடமையும் ஆகிறது. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சுயநலத்தை விட பொது நலத்தில் தான் அதிக அக்கறை கொள்ள வேண்டும் என்ற சமூக அக்கறையுடன் கூடிய மெய்யியல் உண்மையை எம்.ஜி.ஆர். படங்கள் வெளிப்படுத்துகின்றன.அவரது வாழ்வும் படங்களும் இக்கருத்தை அதிகமாக வலியுறுத்துவதால் இவற்றை நாம் நம்

சந்ததியினருக்குப் பாடமாகக் கற்றுத்தரக் கடமைப்பட்டுள்ளோம்.

எம்.ஜி.ஆர். படங்களை ஆய்வு செய்யும்போது படத்தின் ஒவ்வொரு சட்டகமும் [ஃபிரேமும்], ஒவ்வொரு காட்சியும், ஆய்வுப் பொருளாகிறது அவை முதன்மை தரவுகள் [primary data] ஆகின்றன. இவற்றுடன் தொடர்புடைய அவரது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள், இந்த ஆய்வுக்கு துணைத் தரவுகள் [secondary data] விளங்குகின்றன. இரண்டு வகையான தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு [analaytic study] செய்து ஆய்வு முடிவுகளைப் பெறலாம்.

எம்.ஜி.ஆருடைய சண்டைக் காட்சிகள் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அல்லது ஒவ்வொரு ஆணுக்கும் சமுதாயத்தில் அநியாயங்கள் நடைபெறும்போது அவற்றை எதிர்கொள்வது எப்படி என்ற பாடத்தை கற்றுக் கொடுக்கின்றன. உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம், உடல் வலிமை மற்றும் மனத்துணிவு ஆகியவற்றின் பயன்களையும் அறிவுறுத்துகின்றன. .

எம்.ஜி.ஆர். எதிரிகளையும் எதிர்கொள்ளும் பாங்கில் ஒரு படிப்பினை உண்டு. அநியாயம் செய்பவரிடம் முதலில் அவர் செய்யும் அநியாயத்தை எடுத்துக் கூற வேண்டும், அதனுடைய மோசமான விளைவுகளை அவருக்கு விளக்கிச் சொல்ல வேண்டும், அவற்றுக்கு அவர் செவி கொடுக்காமல் மீண்டும் அதே அநியாயங்களைச் செய்யும் முயற்சியில் இறங்கினால் அதனைத் தட்டிக் கேட்க வேண்டும், தடுத்து நிறுத்த வேண்டும். இந்த முயற்சியில் எதிரியால தாக்கப்பட்டாலும் பொறுமையோடு அவரிடம் அவ்வாறு தாக்குதல் நடத்தக் கூடாது என்பதை முதலில் எடுத்துச் சொல்ல வேண்டும் நிதானம் என்பது கோழைத்தனம அல்ல என்பதை எம்.ஜி.ஆர். இக்கட்டத்தில் உறுதி செய்வார். . மீண்டும் எதிரி தாக்கினால் அவருடைய தாக்குதல்களை தடுத்து முயற்சியில் இறங்க வேண்டுமே தவிர அவசரப்பட்டு அவரைப் பதிலுக்குத் தாக்கிக் காயப்படுத்தக் கூடாது. அவருடைய தாக்குதல்களை தடுத்து அவரை இயங்கவிடாமல் செய்து காவல் துறையினரிடம் அல்லது சட்டத்தின் கைகளில் அவரை ஒப்படைக்க வேண்டும். இதுவே ஒரு தனிமனிதன் சமூக அநியாயத்திற்கு எதிராக நிகழ்த்த வேண்டிய

எதிர்வினையாகும். இதுபோன்ற ஒரு நல்ல பாடத்தை தனிமனிதர்களுக்கு கற்றுத்தரும் வாழ்வியல் நூலாக எம்.ஜி.ஆரின் சண்டைக்காட்சிகள் விளங்குகின்றன. எம்.ஜி.ஆர். படத்தின் ஒவ்வொரு காட்சியும் ஒரு பாடம் ஆகும். எதுவும் படத்தில் வீணாக இடம் பெறுவதில்லை.

எம்.ஜி.ஆர். படத்தில் காதல் காட்சியை ஆராய்ந்தால் காதல் என்பது வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்க வேண்டுமே தவிர அதுவே வாழ்க்கையாக அமைந்து விடக்கூடாது. காதலுக்காக வாழ்க்கையை இழக்கக்கூடாது; வாழ்க்கைக்காக காதலை இழக்கலாம் என்ற வாழ்வியல் தத்துவத்தை எதார்த்தத்தை எம்.ஜி.ஆர். படத்தில் வரும் காதல் காட்சிகள் கற்றுக்கொடுக்கின்றன.

ஒரு ஆண் தன்னை விரும்பும் பெண்ணை நேசிப்பதும் நல்லது. அதே சமயம் அந்தப் பெண் தன்னுடைய நேசத்துக்குரியவளாகவும் இருக்க வேண்டும். காதல் என்பது இருவழிப்பாதையாக இருக்க வேண்டுமே தவிர ஒருதலைக் காதலாக இருக்கக் கூடாது. ஒரு தலைக் காதலை சங்க இலக்கியம் 'கைக்களை' [சிறுமைப்பட்ட உறவு] என்று சொல்வதை கருத்தில் கொண்டு எம்.ஜி.ஆர். தனது படங்களில் ஒருதலைக் காதலுக்கு இடமளிக்காமல் 'காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்ற ஔவையாரின் கருத்துக்கு மதிப்பளித்துள்ளார்.

ஒருதலைக் காதல் பற்றிய நிகழ்ச்சிகளில் எம்.ஜி.ஆர். அளிக்கும் விளக்கம் காலாகாலத்துக்கும் பயன் அளிப்பதாகும். ஒருவர் தனது வாழ்வில் காதலை இழக்கலாம் ஆனால் மனிதர்களை இழந்துவிடக் கூடாது; மனித உறவுகளைப் போற்ற வேண்டும், என்ற கருத்து வலியுறுத்தப்படும்.

காதலுக்காக தாடி வளர்த்து மது அருந்தி உலம்பைக் கெடுத்துக் கொள்வதையும் உயிரை இழக்கும் முடிவுகளையும் எம்.ஜி.ஆர். தனது படத்தில் ஆதரிப்பதில்லை. தற்கொலை ஒரு தீர்வாகாது என்பது எம்.ஜி.ஆர். படங்களில் காணப்படும் ஒரு கருத்தாக இருப்பதால் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் பெரும்பாலும் தற்கொலையை நாடுவது கிடையாது. எம்.ஜி.ஆரைப் போலவே வாழ்வில் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்து வருவது இயற்கை. இன்பம் வரும்போது மகிழ்வதும் துன்பம் வரும்போது சோர்ந்து போவதும் மனித இயல்பு. ஆனால் உடலை கெடுத்துக் கொள்ளும் அளவுக்கு துன்பத்திற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என்பது எம்.ஜி.ஆருடைய தனிப்பட்ட கருத்தாக இருந்தால் அதனைத் தன் படங்களிலும் வெளிப்படுத்தினார். அவர் இந்த வாசகத்தை அறிவுரையாகவும் பலருக்கு சொல்லியிருக்கிறார். இழந்த காதலுக்காக, இழந்த சொத்துக்களுக்காக இழந்த வெற்றிக்காக தாடி வளர்த்து குடித்து உடம்பை கெடுத்துக் கொள்வது கூடாது என்பது அவருடைய திட்டவட்டமான கொள்கை ஆகும். எனவே இழப்புக்காக தன் உயிரையும் உடலையும் அழிக்காமல் மீண்டும் புதிய நம்பிக்கையோடு வாழ முயல வேண்டும். இது சற்று சிரமமான காரியமாக முதலில் தோன்றினாலும் வாழ்ந்தாக வேண்டும் என்ற முயற்சியுடன் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். நோக்கத்துடன் முயற்சி செய்யும் போது வானமும் வசப்படும்; வாழ்க்கையும் சிறப்பாகும்.

எம்.ஜி.ஆர். படங்களில் மேலும் ஒரு முக்கியமான கருத்து பெண்களிடம் அன்பும், பண்பும், மரியாதையும் உள்ளவர்களாக ஆண்கள் விளங்க வேண்டும் என்பதாகும். அவர் நிஜ வாழ்க்கையில் தன் தாயைத் தெய்வமாக மதித்தது போல சினிமாவிலும் தன் தாயைத் தெய்வமாக மதித்தார். இதனை அவருடைய ரசிகர்களும் சொல்லிப் பெருமைப்படுகின்றனர். ‘நான் என் அம்மாவைத் தெய்வமாக நினைக்கிறேன். ஏனென்றால் என் தலைவர் எனக்கு சொல்லிக்கொடுத்த பாடம் அது’ என்று அவர்கள் சொல்வதைப் பேட்டிகளில் கேட்கலாம்.

எம்.ஜி.ஆர். தன் படத்தில் தன் தங்கை, காதலி, மனைவி, வேலைக்காரி, தோழியை என எவரையும் போடி வாடி என்று பேசியது கிடையாதுநாய் பேய் கழுதை என்று திட்டியதும் கிடையாது. எனவே நிஜ வாழ்க்கையிலும், திரைப்படங்களிலும் அவர் பெண்களை மிகவும் மதித்த காரணத்தினால் அவருக்கு பெண் ரசிகைகளும் வாக்காளர்களும் ஏராளமாகக் கிடைத்தனர். நிஜ வாழ்விலும் அவருடைய வீட்டில் வேலைக்காரர்களை, பள்ளிக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லும் ரிக்க்ஷாக்காரரை, சமையலறை, சலவைக்காரரை அண்ணன், அக்கா என்று தான்

அழைக்க வேண்டும் பெயர் சொல்லியோ டிரைவர் என்றோ அழைக்கக் கூடாது என அவர் அனைவரையும் பழக்கியிருந்தார், மீறினால் அடித்துவிடுவார்.

எம்.ஜி.ஆர். படங்களில் பல வாழ்வியல் உண்மைகளை காண முடியும் என்பதனால் எம்.ஜி.ஆர். படங்கள் ஒவ்வொன்றும் தனியொரு இலக்கியமாக ஒரு நீதி நூலாக, ஒரு காதல் காவியமாக, வீர காவியமாகப் பல்சுவைப் படைப்பாக எல்லாக் காலத்துக்கும் பொருந்துவதாக, உலகப் பொது கலைப் படைப்பாக உள்ளது. உள்ளன.

எம்.ஜி.ஆரின் திரைப்படங்கள் இனம், மொழி, மதம் கடந்த மனிதம் சார்ந்த பொதுப் படைப்புகளாக விளங்குகின்றன, எம்.ஜி.ஆர். படங்களில் நடத்தப்படும் ஆய்வு மனித சமுதாயத்திற்கு நன்மை செய்யும் நோக்கத்தில் நடத்தப்படும் ஆய்வாகும். எம்.ஜி.ஆர். பட ஆய்வுகள் உலகின் எல்லா மூலைகளிலும் வாழும் அனைத்து வகையான மனிதருக்கும் பயன்படக்கூடிய பாடமாக அமைவது உறுதி, இந்த முயற்சியில் மெல்ல மெல்ல அடி எடுத்து ஒவ்வொரு தலைப்பாக நான் நூல்களை எழுதிக் கொண்டு வருகின்றேன், இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. பயணத்தைத் தொடங்கி இருக்கிறோம் என்ற மகிழ்ச்சி மனதை நிரப்பியுள்ளது.

உள்ளடக்கம்

1. எம்.ஜி.ஆர் இரசிகர்கள் தோற்றுவித்த அண்ணாதிமுக கட்சி

மதுரையில் எம்.ஜி.ஆர் இரசிகர் மன்ற மாநாடு நடந்த போது, இன்றைக்கு எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்கள் செயல்படுவதில் வியப்பொன்றுமில்லை. நான் இறந்த பிறகும் இம்மன்றங்கள் சமூக நல ஆர்வத்துடன் செயல்பட வேண்டும் என்றார். அவரது வாக்கு உண்மையாயிற்று. அவர் மறைந்து 32 ஆண்டுகளுக்குப் பிறகும் இரசிகர் மன்றங்கள் முன்பிருந்த அதே உற்சாகத்துடனும் முனைப்புடனும் பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டி செயல்படுகின்றன. இதுவே அவரது இரசிகர் மன்றத்தின் தனித்தன்மை ஆகும். எம்.ஜி.ஆர். இரசிகர் மன்றங்கள் சாகா வரம் பெற்றவையாக செயல்படுவதற்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆர். சாகா வரம் பெற்றவராக இரசிகர்கள் போற்றும் தெய்வமாக விளங்குவதே ஆகும். இன்று எம்.ஜி.ஆர். இரசிகர்கள் பலர் எம்.ஜி.ஆரை தமது தெய்வமாகப் போற்றி வணங்குகின்றனர். அவர் பெயரைக் கூட உச்சரிக்காமல் ‘தெய்வம்’ என்ற பெயரில் அழைக்கும் இரசிகர்கள் உள்ளனர்.

இரசிக துரோகம் செய்வதில்லை

எம்.ஜி.ஆரின் சகல வெற்றிகளுக்கும் அவருடைய இரசிகர்கள் உறுதுணையாக இருந்துள்ளனர். எம்.ஜி.ஆர் நடித்த படத்தை வெற்றி பெற செய்வதை தமது கடமையாகக் கருதினர். அவரது கட்சியை வெற்றி பெறச் செய்வதை



இன்றும் தமது கடமையாகக கருதி வாழ்ந்து வருகின்றனர். இரட்டை இலைச் சின்னம் இருக்கும் வரை அதை தவிர வேறு எதற்கும் வாக்களிக்க மாட்டேன் என்று வைராக்கியமாக வாழ்ந்து வருவோர் பலர். எம்.ஜி.ஆர் படத்தைத் தவிர வேறு படங்களை குறிப்பாக சிவாஜி படங்களைப் பார்க்க மாட்டேன் அது இரசிக துரோகம் எனக் கருதினர். இரசிகத் தன்மையை கற்பை போல போற்றியவர்கள் எம்.ஜி.ஆர் இரசிகர்கள்.

சிவாஜி இரசிகர்களாக இருந்து பிற்காலத்தில் எம்.ஜி.ஆர் இரசிகர்களாக மாறியவர்கள் உண்டு. ஆனால் எம்.ஜி.ஆர் இரசிகர் என்று சொல்வதை அவமானம் எனத் தங்களைத் தாங்களே ஏமாற்றி வாழ்ந்தவர்கள் பிற்காலத்தில் நான் சிறு வயது முதல் எம்.ஜி.ஆர் இரசிகன் என்ற உண்மையை ஒத்துக்கொண்டு வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

கட்சிக்கான உடனடி காரணம்

திரைப்படங்களில் எம்.ஜி.ஆருடைய ஹீரோ இமேஜை உயர்த்திக் காட்டவும் அரசியலில் அவரை ஒரு உலகப் புகழ்பெற்ற தலைவராக்கவும் இரசிகர்கள் அவர் மீது வைத்திருந்த அன்பும் மதிப்பும் அடிப்படைக் காரணங்களாக இருந்தன. அண்ணா திமுக என்ற கட்சியை எம்.ஜி.ஆர் தொடங்குவதற்கும் இரசிகர்களே முக்கிய காரணமாக இருந்தனர். எம்.ஜி.ஆருக்கு 1940 முதல் அரசியலில் ஈடுபாடு


இருந்த போதிலும் கூட அவர் தனிக்கட்சி தொடங்க வேண்டும் என்ற ஒரு கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது இரசிகர்களின் அன்பு கட்டளை அல்லது தூண்டுதல் எனலாம். வேறு பல காரணங்கள் அண்ணா திமுகவின் தோற்றத்துக்கு இருந்தாலும் உடனடி காரணம் என்பது இரசிகர்களும் இரசிகர் மன்றங்களும் என்பது மறுக்க இயலா உண்மை ஆகும்.

காங்கிரஸ்காரரான எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் 1940களில் நாடகங்களில் நடித்துக் கொண்டிருக்கும்போதே காங்கிரஸ்காரராக இருந்து வந்தார். அவருக்கு காந்தியடிகள் மீது அவருடைய சத்யாகிரக கொள்கைகளின் மீதும் மிகுந்த பற்று இருந்தது. இதனால் அந்நியத் துணி பகிஷ்கரிப்பு, ரயில் மறியல் போன்ற போராட்டங்களில் அவர் ஈடுபட்டதாக அவரது அண்ணன்



தன்னுடைய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ்காரராக இருந்த போது எம்.ஜி.ஆர் கதர் உடை உடுத்து, கழுத்தில் தாமரை மணி மாலை அணிந்து தீவிர காங்கிரஸ் பற்றாளராக வாழ்ந்து வந்தார். அப்போது அவர் கதர் பக்தி என்ற நாடகத்தில் நடித்து வந்தார். அந்த நாடகத்தையே முதன்முதலில் திரைப்படமாக்க முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால் எதிர்பாராத வகையில் எம்.ஜி.ஆர் சதிலீலாவதியில் அறிமுகமானார்.





அண்ணா அறிமுகம்

1952இல் டிவி நாராயணசாமி மூலமாக எம்.ஜி.ஆருக்கு அண்ணாவின் அறிமுகம் கிடைத்தது. அப்போது அண்ணாவின் கொள்கைகளாலும் அண்ணாவின் மேடைப் பேச்சாலும் எம்.ஜி.ஆர் மிகவும் கவரப்பட்டு அண்ணாவின் திமுக கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் தேர்தல் பிரச்சாரங்களில் பங்கு பெறத் தொடங்கினார். எம்.ஜி.ஆரும் வெற்றியும் இரு கரம் கோர்த்து திமுகவுக்குள் நுழைந்தது. எம்.ஜி.ஆர் திமுகவில் சேர்ந்த பிறகுதான் திமுகவுக்கு வெற்றி கிட்டியது. அதுவரை அவர்கள் தேர்தலில் வெற்றி பெறவில்லை.

படங்களில் கட்சிக் கொள்கை

1952க்குப் பிறகு எம்.ஜி.ஆர் தன்னை திமுககாரர் என்று அறிவித்துக் கொண்டார். அதன் பின்னர் வெளிவந்த மலைக்கள்ளன், குலேபகாவலி, மதுரை வீரன் போன்ற படங்களில் அவர் திமுகவின் கொள்கைகளை பாடல்களிலும் வசனங்களிலும் புகுத்தினார். ஜனாதிபதி விருது பெற்ற முதல் தமிழ்ப் படமான மலைக்கள்ளனில் ''எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே'' என்று அவர்

காங்கிரஸ்காரர்களைப் பற்றி பாடிய பாடல் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று அவரை உச்சத்துக்குக் கொண்டு சென்றது. அவர் சொற்களை மக்கள் நம்பினார். அவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக்க அவரும் நடந்து கொண்டார். அவரது திரை வாழ்க்கையும் நிஜ வாழ்க்கையும் ஒன்று போல இருக்கும்படி கவனத்துடன் செயல்பட்டார். மக்களின் நம்பிக்கையை அவர் பொய்யாக்க விரும்பவில்லை. இதனால் அவருக்கு இரசிகர்கள் பெருகினர். வேறு எவருக்கும் இத்தனை இரசிகர்களும் தமிழகத்தில் கிடையாது. இரசிகர் மன்றங்களும் உலகில் கிடையாது.



தயார்படுத்திக்கொண்ட எம்.ஜி.ஆர்

ஆரம்பம் முதலே எம்.ஜி.ஆர் தன் மீதிருந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வந்தார். அதற்கேற்ப தனது படத்தின் கதை தந்து கதாபாத்திரம், பாடல்கள், வசனம் என அனைத்திலும் கவனம் செலுத்தினார். வீரம் மிக்க வெற்றித் தமிழனின் அடையாளமாக தன்னை உருவாக்கிக் கொண்டார். அகப் புறத் தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக அவர் விளங்கினார். காதலும் போரும் [சண்டையும்] தமிழன் வாழ்வில் இடம் பெற்றிருந்ததை அவரது படங்கள் விளக்கின. இதுவே அவரது தொடர் வெற்றிக்கு மூலாதாரம் ஆகும்.

திமுகவின் பிரச்சார பீரங்கி

எம்.ஜி.ஆரின் பாடல்கள் சண்டைக்காட்சிகள் வசனங்கள் மற்றும் தத்துவப் பாடல்கள் மறக்க முடியாத இடத்தைப் பெற்றன. மக்கள் அவருக்கு மிகுந்த ஆதரவளித்தனர். எம்.ஜி.ஆர் திமுகவின் பிரச்சார பீரங்கியாக செயல்பட்டு வந்தார். அவருடைய படங்களும் திமுககாரர் படங்கள் என்ற அளவில் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன. முக்கிய வசனக் காட்சிகளில் தத்துவப் பாடல் காட்சிகளில் [சில காதல் பாடல் காட்சிகளிலும்] கருப்பு சட்டை அணிந்து வந்து தன்னை கருப்பு சட்டைகாரர் [திமுககாரர்] என்பதை மக்கள் மனதில் உறுதி செய்துகொண்டார். கட்சி சார்பில்லாத மக்களும் எம்.ஜி.ஆர் படங்களைப் பார்த்து அவர் மீது



நம்பிக்கை கொண்டு மெல்ல மெல்ல திமுகவின் பக்கம் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர்.

இரசிகர் மன்றம் ஆரம்பிக்க போகிறோம்

பஞ்ச் டயலாக் ஒன்று இடம் பெற்றது. "கரிகாலன் குறி வைத்தால் தவறமாட்டான் தவறும் என்றால் குறி வைக்க மாட்டான்" என்ற அந்த வசனத்தால் ஈர்க்கப்பட்டு இளைஞர்கள் எம்.ஜி.ஆர் மீது தீவிர பற்று கொண்டிருந்த அக்காலத்தில் சிவகாசியை சேர்ந்த இருவர் சென்னைக்கு வந்து எம்.ஜி.ஆர் வீட்டை அடைந்து அவருடைய அண்ணனைப் பார்த்து தாங்கள் இருவரும் எம்.ஜி.ஆருக்கு இரசிகர் மன்றம் ஆரம்பிக்கப்போவதாக தெரிவித்தனர். அப்போது எம்ஜி சக்கரபாணி அதை ஆதரிக்க வில்லை. 'அதெல்லாம் வேண்டாம் நீங்கள் ஊர் போய்ச் சேருங்கள்' என்று சொல்லிவிட்டார். ஆனால் அந்த சமயம் அங்கு வந்த எம்.ஜி.ஆர் அவர்களிடம் அன்பாகப் பேசி 'முதலில் உங்கள் வேலையை குடும்பத்தைப் பாருங்கள். பிறகு இரசிகர் மன்றம் ஆரம்பிக்கலாம்' என்று அறிவுரை கூறி அவர்கள் ஊருக்குப் போவதற்கு பணமும் கொடுத்து அனுப்பினார்.

தாலியை விற்று தொடங்கப்பட்ட இரசிகர் மன்றம்

சிவகாசிக்காரர்கள் இரசிகர் மன்றம் ஆரம்பித்தனரா என்பது பற்றி தகவல் இல்லை. ஆனால் திருச்சி



மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பிராமணர் தன் மனைவியின் தாலியை விற்று எம்.ஜி.ஆருக்கு முதன்முதலில் இரசிகர் மன்றம் ஆரம்பித்ததாக தாமஸ் ஹாட்கிரேவ் என்ற அமெரிக்கர் தன்னுடைய ஆய்வில் தெரிவித்துள்ளார்.

இரசிகர் மன்றங்களின் செயல்பாடு

1951க்குப் பிறகு எம்.ஜி.ஆருக்கு இரசிகர் மன்றங்கள் தோன்றத் தொடங்கின. அனைத்து இரசிகர் மன்றங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டன. உறுப்பினர் கட்டணம் வசூலிக்கப்பட்டது. மன்றங்களுக்கு என்று வாடகைக்கு ஓர் இடம், சுற்றிலும் அரைச் சுவர் வைத்து மூங்கில் தட்டி அடைத்து, மேலே கூரை வேய்ந்து கதவு சாவி பூட்டு என்று பாதுகாப்புடன் ஒரு மன்றம் இருந்தது. அங்கு இரசிகர்கள் காலையிலும் மாலையிலும் வந்து கூடி எம்.ஜி.ஆர் படங்களைப் பற்றி விவாதித்தனர். அங்கு நாளிதழ்களும் வாரப் பத்திரிகைகளும் வாங்கப்பட்டன. அவற்றை இரசிகர்கள் உட்கார்ந்து எழுத்துக்கூட்டி வாசித்தனர். இவ்வாறு மன்றங்கள் இரசிகர்களின் வாசிப்பையும் உலக அறிவையும் விரிவாக்கின. ஆரம்பம் முதலே எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்கள் பொது நல ஆர்வத்துடன் செயல்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது .

எம்.ஜி.ஆர் படங்கள் வெளியிடும் போது அந்த படங்களுக்கு 'கட் அவுட்' வைப்பது, மாலை போடுவது, வரும் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவது, படம் பார்க்க வருபவர்களுக்கு இனிப்பு வழங்குதல் மற்றும் வெயில் நேரங்களில் தண்ணீர்ப்பந்தல் வைத்தல், பள்ளிக்கூடம் தொடங்கும் நேரங்களில் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் வழங்குதல் என இரசிகர் மன்றங்கள் சமூகப் பணியையும் சேர்த்து மேற்கொண்டன. எம்.ஜி.ஆர் படத்தில் நடிக்கும் கதாபாத்திரங்களில் பொதுநல ஆர்வம் கொண்டவராக நடித்து வந்தார். அவரைப் பின்பற்றிய இரசிகர்களும் சமூக நல ஆர்வம் கொண்டவர்களாக இருந்தனர்.



இரசிகர்களும் எம்.ஜி.ஆர் தான்

எம்.ஜி.ஆர் இரசிகர்கள் அனைவரும் குறிப்பிட்ட சதவீதங்களில் எம்.ஜி.ஆரைப் போலவே இருந்தனர். அவரை போலவே உடுத்தினர், தலை சீவினர், பேசினர் சிந்தித்தனர், செயல்பட்டனர். இதனால் தமிழ்நாட்டில் பல கோடி எம்.ஜி.ஆர்கள் வாழ்ந்து வந்தனர்; இன்றும் வாழ்கின்றனர். திரைப்படங்கள் பார்ப்பதோடு அவர்கள் தங்களுடைய இரசிகர்மன்ற செயல்பாட்டை நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களைப் பொதுமக்களுக்கு நண்பர்களாக மாற்றிக் கொண்டனர். பொதுமக்களுக்கான சேவைகளை மனமுவந்து செய்தனர். வெள்ளம், தீ விபத்து போன்ற பாதிப்புகள் ஏற்படும் பொழுது எம்.ஜி.ஆர் மன்றத்தின் செயல்பாடுகள் மிகுந்த பாராட்டைப் பெற்றன. இவர்கள் எம்.ஜி.ஆரை போலவே சமூக ஆர்வம் மிக்கவர்களாக இருந்ததனால் மக்களின் பேராதரவு எம்.ஜி.ஆர் மன்றங்களுக்கு இருந்தது. பல இளைஞர்கள் எம்.ஜி.ஆர் மன்றத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தனர். இவை சமூக நல மன்றங்கலாக்ச் செயல்பட்டு வந்தன. இன்றைக்கும் முப்பதாயிரம் மன்றங்கள் இருப்பதாக்க தெரிவிக்கின்றனர்.

எம்.ஜி.ஆர் உலகப் பேரவை

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை என தமிழர் வாழ்ந்த பிற நாடுகளிலும் எம்.ஜி.ஆருக்கு மன்றங்கள் உண்டு அந்தமான் தீவில் 'பணத்தோட்டம் எம்.ஜி.ஆர் மன்றத்தை' இந்தியப் பிரதமர் லால் பகதஊர் சாஸ்திரி திறந்து வைத்தார். இன்று எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்கள் இலண்டன், பிரான்ஸ், அமீரகம் மலேசியா போன்ற நாடுகளில் எம்.ஜி.ஆர் பேரவையாகத் தம்மை உயர்த்தி கொண்டுள்ளன. எம்.ஜி.ஆர் உலகப் பேரவையை தொடக்கியுள்ள சைதை துரைசாமி அவர்கள் எம்.ஜி.ஆர் உலகப் பேரவைக்குத் தமது குடும்ப சொத்தில் இருந்து ஐம்பது கோடி எழுதி வைத்துள்ளார். இப்பேரவை சர்வதேச அளவில் ஒரு தொண்டு நிறுவனமாக செயல்பட இருக்கின்றது



திமுக தேர்தல் பிரச்சாரத்தில் இரசிகர் மன்றங்கள்

எம்.ஜி.ஆர் ஏராளமாகக் கடன் வாங்கி சொந்தத் தயாரிப்பாக நாடோடி மன்னன் படம் எடுத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் 1957 ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. அப்போது அண்ணாவிடம் எம்.ஜி.ஆர் பத்தாயிரம் ரூபாய் தேர்தல் நிதி வழங்கினார் ஆனால் அண்ணாவோ 'பணத்தை விட நீங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்து மக்களிடம் உங்கள் முகத்தைக் காண்பித்தால் எனக்கு முப்பது இலட்சம் ஒட்டு விழும்' என்றார். அவரது வார்த்தையை மதித்த எம்.ஜி.ஆர் முதன் முதலாக தேர்தல் பிரசாரத்திற்குக் கிளம்பினார். எம்.ஜி.ஆர் வல்லியில் அவரது இரசிகர்களும் திமுகவுக்கு தேர்தல் பணியாற்றினார்.

எம்.ஜி.ஆருக்கு கூடிய கூட்டம்

தேர்தல் பிரச்சாரத்துக்கு எம்.ஜி.ஆர் கிளம்பியதும் எம்.ஜி.ஆருடைய படப்பிடிப்புகள் அனைத்தும் வாரக் கணக்கில் ரத்து ஆயின. அவர் நிறைய பணத்தைக் கொண்டுவந்து தேர்தலுக்குச் செலவழித்தார். வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளுக்குப் பணம் கொடுத்தார். தன்னுடன் வருபவர்களுக்கு நல்ல உணவும்



தேர்தல் செலவுக்குப் பணமும் வழங்கினார். மக்களிடையே அவருடைய கொடைப் பண்பும் தாராள குணமும் மின்னலெனப் பரவியது. படங்களில் பார்த்த எம்.ஜி.ஆரின் அழகும் நேரில் கேட்டறிந்த எம்.ஜி.ஆரின் குணமும் அவரது கூட்டங்களுக்கு மக்களை ஆயிரக் கணக்கில் அழைத்து வந்தது. இரவில் கூட்டம் என்றால் காலையிலேயே மக்கள் சாரை சாரையாகக் வரத் தொடங்கினர். இரசிகர்களின் உற்சாகம் கரை புரண்டது. நிறைய பேர் வந்தனர். மக்கள் அந்த மைதானத்தில் கூடத் தொடங்கினர். பல ஊர்களில் இருந்து, மாட்டு வண்டியில் பயணித்து வருவது, சைக்கிளில் பயணித்து வருவது என்று சுமார் 20 மைல் சுற்று வட்டாரத்தில் இருந்து மக்கள் நகரங்களில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு வருவது வாடிக்கையாயிற்று.

பத்திரிகைகளின் அச்சுறுத்தல்

'எம்.ஜி.ஆர் ஒரு குறிப்பிட்ட கட்சியில் சேர்ந்து அந்தக் கட்சிக்காக தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் இவருக்கு பல தொல்லைகளைக் கொடுக்கும். குறிப்பாக மத்திய அரசு இவருக்கு வருமான வரி தொல்லைகள் கொடுக்கலாம்' என்று பத்திரிகைகள் அவரை மிரட்டின. இருந்தாலும் அவர் தன்னுடைய கொள்கைக்கு விரோதமாக செயல்பட விரும்பவில்லை. அண்ணாவின் கொள்கைகளை தன்னுடைய கொள்கைகளை ஏற்று அக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதற்காக அவர் தன் சொந்தப் பணத்தைச் செலவழித்து ஊர் ஊராக தேர்தல் பணி ஆற்றி வந்தார். படங்களில் மட்டுமல்லாது அரசியலிலும் எம்.ஜி.ஆரின் அஞ்சாமை துணிவு ஆகியவற்றைக் கண்ட இரசிகர்கள் கிறுகிறுத்துப் போயினர். எம்.ஜி.ஆரின் தேர்தல் பணிகளுக்கு அவருடைய இரசிகர் மன்றங்கள் உறுதுணையாக நின்றன. இரசிகர்கள் அவருக்கு பாதுகாப்பாகவும், பாராட்டாகவும் இருந்து வந்தனர். இத்தேர்தலில் திமுக முதன்முதலாக 15 இடங்களைக் கைப்பற்றியது. திமுகவுக்கு வெற்றிப் பாதையை முதன்முதலில் காட்டியவர். திமுகவை மக்கள் எம்.ஜி.ஆர் கட்சி என்றே அழைத்தனர்.

நீங்க எம்.ஜி.ஆர் கட்சியா?

அண்ணா பயணித்த கார் ரேடியேட்டர் வெப்பம் அதிகமாகி நின்றுவிட்டது. கார் ஓட்டுனர் அவ்வழியே வந்த பெண்களிடம் 'கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் வண்டிக்கு ஊற்ற வேண்டும்' என்று கேட்டார். தன்னிற் சுமந்து வந்த பெண் அண்ணாவின் காரில் திமுக கொடி பறப்பதைப் பார்த்துவிட்டு 'நீங்க எம்.ஜி.ஆர் கட்சியா?' என்று கேட்டார் அண்ணாவும் 'ஆமாம்' என்றார். அந்தப் பெண் மனமுவந்து இரண்டு குடம் தண்ணீர் கொடுத்தார். எம்.ஜி.ஆரும் அவருடைய இரசிகர் மன்றங்களும் இரக்கம் கொண்டவயாகவும் திமுகவை தமது உயிராக மதிப்பவையாகவும் செயல்பட்டு வந்தன

எம்.ஜி.ஆர் பிக்சர்சின் சின்னத்தில் திமுக கொடி

எம்.ஜி.ஆர் தான் சார்ந்த திமுக கட்சிக்கு விசுவாசமாக இருந்தார். அந்த கட்சியின் கொடியையும் தன்னுடைய சொந்தப் படமான நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் சின்னத்தில் இடம் பெறச் செய்தார். எம்.ஜி.ஆர் பிக்சர்ஸின் சின்னம் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து இணைந்து நின்று திமுக கொடியைப் பிடித்திருப்பதாக வடிவமைக்கப்பட்டது. இதற்கு பெரிய அளவில் அரசிடம் இருந்து எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்த போதும்



எம்.ஜி.ஆர் அந்த எதிர்ப்புகளை சமாளித்து தன்னுடைய சொந்தப தயாரிப்பு நிறுவனத்தில் தனது கட்சியின் கொடியைத் துணிந்து காண்பித்தார். நாடோடி மன்னன் படம் ஏறத்தாழ திமுகவின் பிரச்சாரப் படமாக அமைந்தது. திமுகவை சேர்ந்த கண்ணதாசன் எழுதிய வாசனங்களும் திமுக சார்புயடையனவாகவே அமைந்தன.

மன்னர் குடும்பத்தைச் சேராத ஒரு நாடோடி [வீராங்கன்] மக்களின் துன்பங்களை அறிந்தவனாக இருப்பதால் அவன் மன்னன் மார்த்தாண்டனுக்குப் பதிலாக அரசாட்சி செய்த போது மக்களுக்கு வேண்டிய நன்மைகளை செய்தான் என்ற கருத்தை இப்படத்தின் உணர்த்தியது இப்படத்தின் மூலமாக மேட்டுக்குடியைச் சேராத எளிய குடும்பத்தைச் சேர்ந்த திமுகவினர் ஆட்சிக்கு வந்தால் அவர்கள் மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வார்கள் என்ற எண்ணமும் நம்பிக்கையும் மக்கள் மனதில் ஆழமாக பதிந்தது. நாடோடிமன்னன் படம் எம்.ஜி.ஆருக்கு தனிப்பட்ட முறையில் செல்வாக்கையும், சொல்வாக்கையும் தேடித் தந்தாலும் கூட இவை இரண்டுக்கும் அப்பாற்பட்டு திமுகவுக்கு அது மிகப்பெரிய பிரச்சார படமாக அமைந்தது.

தங்க வாள் அன்பளிப்பு

1967இல் அறிஞர் அண்ணா வெற்றி பெற்று முதல்வரானபோது ‘நீங்கள் முதல்வராக இருந்து என்ன செய்யப்போகிறீர்கள்? உங்களின் திட்டங்களைப் பற்றி எடுத்துக் சொல்லுங்கள்’ என்று நிருபர்கள் அவரிடம் கேட்டனர். அப்போது ‘பத்து ஆண்டுகளுக்கு முன்பே எம்.ஜி.ஆர் நாடோடி மன்னன் படத்தில் சொல்லிவிட்டாரே. அதைத்தான் நாங்கள் அமல்படுத்த போகிறோம்’ என்றார். இப்படம் திமுகவின் கொள்கைப் பிரச்சார படைப்பாகவே 10 ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது.

நாடோடிமன்னன் படம் 1958இல் வெளிவந்தது, வெற்றி விழா கண்டது. மதுரையில் தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய திரையரங்கமான தங்கத்தில் 250 நாட்கள் வெற்றி நடை



போட்டது. மதுரையில் எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றம் இப்படத்துக்கு மிகப் பெரிய விழா எடுத்து எம்.ஜி.ஆரை நான்கு குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் வைத்து ஊர்வலமாக அழைத்து வந்தனர். தமுக்கம் மைதானத்தில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய மேடையில் அண்ணா எம்.ஜி.ஆருக்கு 110 பவுனில் தங்க வாழ் வழங்கிச் சிறப்பித்தார். இவ்வாறு திருச்சி, கோவை, நெல்லை என பல நகரங்களிலும் இரசிகர் மன்றங்கள் வெற்றி விழா கொண்டாடின.

சென்னையில் இரசிகர்மன்றங்களின் தேர்தல் பணி

1959 இல் சென்னையில் மாநகராட்சி தேர்தல் வந்தது. இந்த மாநகராட்சி தேர்தலிலும் சென்னையில் இருக்கும் இரசிகர் மன்றங்கள் கடுமையாக உழைத்தன. இரசிகர் மன்றங்கள் திமுகவின் மறுபதிப்பாக விளங்கின. இதன் விளைவாக முதன் முதலாக 1959 இல் சென்னை மாநகராட்சியைத் திமுக கைப்பற்றியது.

எம்.ஜி.ஆர் அண்ணா திமுக கட்சியின் தற்கொலைப் படையைச் சேர்ந்த சைதை துரைசாமி அவர்களிடம் 'நீ தான் சென்னை மாநகராட்சியின். அண்ணா திமுக முதல் மேயர்' என்று வாக்களித்திருந்தார். அவர் வாக்களித்து பத்தாண்டுகள் கழித்து அவருடைய வாக்கு உண்மையாயிற்று. ஜெயலலிதா

அவர்களின் ஆட்சிக்காலத்தில் சைதை துரைசாமி அவர்கள் அண்ணா திமுகவின் முதல் மேயராக பெருநகர சென்னையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

திமுகவில் மறைமுக எதிர்ப்பு

நாடோடி மன்னன் படம் வெளிவந்த பிறகு எம்.ஜி.ஆரின் செல்வாக்கு கட்சியிலும் அதிகமாயிற்று. ஆனால் கட்சிக்குள் அவருக்கு மறைமுகமாக எதிர்ப்புகள் வரத்தொடங்கின. மு கருணாநிதி, நாவலர் சம்பத் போன்றோர் எம்.ஜி.ஆருக்கு திமுகவில் வளர்ந்து வரும் செல்வாக்கை விரும்பாமல் அவருக்கு உள்ளே இருந்தே குழி தோண்டினர். இவர்களில் சம்பத் அவர்கள் வெளிப்படையாகவே தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து வெளியேறி புது கட்சி ஒன்றைத் தொடங்கினார். ஆனால் இவர்களின் எதிர்ப்பை மீறி எம்.ஜி.ஆரின் செல்வாக்கு திரையிலும் கட்சியிலும் அமோகமாக வளர்ந்தது.

அடுத்த ஆண்டு [1960] திமுகவைச் சேர்ந்த கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் எழுதி வெளிவந்த படமான மன்னாதி மன்னன் மிகப் பெரிய வெற்றியை பெற்றது. இப்படத்தில் இடம்பெற்ற

"அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடமையடா

ஆறிலும் சாவு நூறிலும் சாவு

தாயகம் காப்பது கடமையடா"

என்ற பாடல் திமுக கட்சியின் தாரக மந்திரமாக தேசிய கீதமாக ஒலிக்கத் தொடங்கியது. இதனால் எம்.ஜி.ஆரின் செல்வாக்கு மேலும் பரிணமித்தது.

எம்.ஜி.ஆரிடம் ஒரு முறை உங்களின் மனம் கவர்ந்த பாடல் எது என்று கேட்டபோது அவர் என் மனம் சோர்வடையும் நேரங்களில் நான் மன்னாதி மன்னன் படத்தில் இடம்பெற்ற 'அச்சம் என்பது மடமையடா' என்ற பாடலைக் கேட்டு மனம் தெளிவடைவது வழக்கம் என்று

தெரிவித்தார். திமுக தலைவர் மு கருணாநிதியின் மகன் மத்திய அமைச்சராக இருந்த மு.க. அழகிரியிடம் இதே கேள்வி கேட்கப்பட்டது. அவரும் இதே பதிலைத்தான் தெரிவித்தார். கிராமத்து இளைஞர் ஒருவரைப் பார்த்து 'ஒரு பாடல் பாடுங்கள்' என்று கேட்டால் அவர் உடனடியாகப் பாடும் பாடல் அச்சம் என்பது மடமையடா பாடலாகத் தான் இருந்தது. இது நடைமுறையில் கண்ட உண்மையாகும். இன்றைக்கும் திமுக மற்றும் அதிமுகவினரின் மனம் கவர்ந்த விருப்பப் பாடலாகவே இப்பாடல் இருந்து வருகிறது.

இரசிகர் மன்றத்துக்குப் பெயர் வைக்கும் மரபு

இரசிகர்கள் மன்றங்கள் தொடங்கியபோது மன்னாதி மன்னன் இரசிகர் மன்றம், நாடோடி மன்னன் இரசிகர் மன்றம், மக்கள் மதுரைவீரன் இரசிகர் மன்றம் என்று எம்.ஜி.ஆரின் படப் பெயர்களிலேயே இரசிகர் மன்றங்களைத் தொடங்கினார். இரசிகர்கள் எம்.ஜி.ஆர் மீது பைத்தியமாக இருந்தனர் என்று சொல்வது மிகையாகாது. அவர்கள் எம்.ஜி.ஆரின் ஒவ்வொரு சொல்லையும் செயலையும் அசைவையும் ரசித்தனர், போற்றினர், புகழ்ந்தனர், மதித்தனர். இவர்கள் எம்.ஜி.ஆர் பிரியர்களாக இல்லாமல் ஏராளமானோர் எம்.ஜி.ஆர் வெறியர்களாக இருந்தனர்.



ரத்தத்தை விற்றுப் படம் பார்த்தனர்

எம்.ஜி.ஆர் படம் வெளிவரும்போது அப்படத்தை பார்க்க கையில் பணம் இல்லாதவர்கள் தங்கள் ரத்தத்தை விற்று ஒரு வார காலத்திற்கு தொடர்ந்து மூன்று காட்சிகளையும் பார்த்து வந்தனர். இவ்வாறு இரத்த வங்கியில் திடீரென ரத்தம் அதிகமாக சேர்வதை கவனித்த மருத்துவர்கள், அரசு மருத்துவர்கள் காரணத்தை அறிந்து கொண்டு எம்.ஜி.ஆரின் மருத்துவர் பி. சுப்பிரமணியம் அவர்களிடம் தெரிவித்தனர். பிறகு எம்.ஜி.ஆர் இரசிகர்களிடம் பேசி 'ரத்தத்தை விற்கக்கூடாது உங்களுக்குப் பணம் வேண்டுமென்றால் நான் தருகிறேன் என்று எனக்கு எழுதிக் கேளுங்கள்' என்று அவர் பணம் அனுப்பினார். ஆனால் இரசிகர்கள் எம்.ஜி.ஆரிடம் எதையும் பெற விரும்பவில்லை. தாங்கள் எம்.ஜி.ஆருக்கு தரவேண்டும் என்றுதான் விரும்பினார்களே தவிர எம்.ஜி.ஆரிடம் இருந்து எதையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பவில்லை. . இதுவே எம்.ஜி.ஆர் இரசிகர்களின் தனித்தன்மையும் சிறப்புத் தன்மையும் ஆகும். எம்.ஜி.ஆர் இரசிகர்கள் தங்கள் உடல் பொருள் ஆவி என அனைத்தையும் எம்.ஜி.ஆருக்கு வழங்கத் தயாராக இருந்தனர். இந்நிலையில்

எம்.ஜி.ஆரின் மனைவி மறைவு

1962இல் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் வந்தது. அப்போது எம்.ஜி.ஆர் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சுற்றிச் சுழன்று வந்து தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். தேர்தலுக்குத் தேர்தல் எம்.ஜி.ஆரின் பிரச்சார வேகமும் செலவுகளும் அதிகரித்துக் கொண்டே இருந்தன. அவரது இரசிகர்களின் எண்ணிக்கையும் உழைப்பும் மேலும் அதிகமாகியது. திமுக இதன் முழு பலனை அனுபவித்தது. அண்ணா எம்.ஜி.ஆரின் பங்களிப் பை உணர்ந்து மகிழ்ந்து பாராட்டினார். ஆனால் மற்றவர்கள் எம்.ஜி.ஆரை பயன்படுத்திக்கொண்டனர். அவர்களில் முக்கியமானவர் கருணாநிதி. கருணாநிதி தஞ்சையில் குளித்தலை தொகுதியில் போட்டியிட்தார். எம்.ஜி.ஆர் கருணாநிதிக்குப் பிரச்சாரம் செய்து கொண்டு வரும் போது அவருக்குப் பின்னாடியே ஒரு



மனைவியின் பிரிவின் சோகத்தில் எம்.ஜி.ஆர்.

கார் விரட்டிக் கொண்டு வந்தது. யாரோ எதிரியின் கார் என்று சொல்லி எம்.ஜி.ஆர் காரில் இருந்தவர்கள் மிக வேகமாக தங்கள் காரை ஓட்டிக் கொண்டு வந்தனர். ஒரு இடத்தில் வரும்போது பின்னாடி வந்த கார் இவர்களை முந்திச் சென்று இவர்களின் காரை மறித்து நின்றுவிட்டது. அங்கே அந்த காரில் இருந்து இறங்கி வந்த ஒருவர் எம்.ஜி.ஆரைப் பார்த்து அவருடைய மனைவி சதானந்தவதி இறந்துவிட்டதாகத் தகவல் தெரிவித்தார். 'இதைச் சொல்லத்தான் நாங்கள் உங்கள் காரை விரட்டிக் கொண்டு வந்தோம். நீங்கள் அது புரியாமல் எங்களை விட வேகமாக முன்னாடி சென்று கொண்டிருந்தீர்கள்' என்று கூறினார். மறுநாள் எம்.ஜி.ஆர் அதிகாலை சென்னை வந்து சேர்ந்தார்.

எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்ற திமுக

1962இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் முதன்முறையாக திமுக 50 இடங்களில் வெற்றி பெற்று சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. எம்.ஜி.ஆர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடாமல் இருந்திருந்தால் திமுகவுக்கு இந்த

வெற்றிகள் கிடைத்திருக்காது. திமுகவினரின் பேச்சை மக்கள் ரசித்தாலும் அவர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்று ஒருபோதும் மக்களிடம் தெரிவித்தது கிடையாது. திமுக ஆட்சிக்கு வந்தால் மக்கள் அடையப்போகும் நன்மைகளை தன்னுடைய நாடோடி மன்னன் படத்தின் மூலம் மக்களுக்கு தெரிவித்தவர் எம்.ஜி.ஆர். எனவே எம்.ஜி.ஆரின் படங்கள் அளித்த நம்பிக்கையால் எம்.ஜி.ஆரின் கொடைப் பண்பால் மக்கள் திமுகவினருக்கு வாக்களித்தனர்.

திமுகவின் வெற்று வாய்ப்பந்தல்

திமுகவினரின் பிரச்சாரக் கூட்டங்களில் திமுக பேச்சாளர்கள் இந்து மத வெறுப்பையும் பிராமண வெறுப்பையும் கொட்டித் தீர்த்தனர். பிராமணர்களே உங்கள் துன்பத்திற்கு காரணம் இந்து மதத்தின் மனுதர்ம கோட்பாடு உங்கள் துன்பத்திற்கு காரணம் என்ற கருத்தை மட்டுமே திமுக பேச்சாளர்கள் திரும்பத்திரும்ப அடுக்கு மொழியில் அலங்கார நடையில் எடுத்துரைத்தனர். அவர்களின் அழகு தமிழை மக்கள் ரசித்தனர். ஆனால் அந்த மொழி ஜாலத்தில் மயங்கி மக்கள் ஓட்டுப் போடத் தயாராக இல்லை. எம்.ஜி.ஆர் தந்த நம்பிக்கையே மக்களுக்கு திமுகவுக்கு வாக்கு அளிக்கலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. எனவே அண்ணா நாவலர் பேராசிரியர் கருணாநிதி போன்றோர் சிறப்பாக மேடையில் முழங்கினாலும் கூட அவை வெற்று வாய்ப்பந்தல் ஆகத்தான் மக்களுக்கு தோன்றியதே தவிர அவர்களால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வி மக்கள் மனதில் இருந்து வந்தது. எம்.ஜி.ஆர் மட்டுமே அவர்கள் ஆட்சிக்கு வந்தால் நான் என்னுடைய படத்தில் சொன்னதை எல்லாம் அவர்கள் செய்வார்கள் என்று மக்களை நம்ப வைத்தார். திமுகவுக்கு ஓட்டுக்களை அள்ளிக் கொடுத்தது எம்.ஜி.ஆர். இதனால் எம்.ஜி.ஆர் மற்றும் அவரது இரசிகர் மன்றத்தின் உதவியால் மட்டுமே திமுக ஆட்சி எதிர்க்கட்சி அந்தஸ்தை 1962இல் பெற்றது.

இடைத்தேர்தலில் எம்.ஜி.ஆரும் இரசிகர் மன்றமும்

எதிர்க் கட்சியான திமுக தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு கைதானதால் திருச்செங்கோடு தொகுதியில் நடந்த இடைத் தேர்தலுக்கு அவர்களால் பிரச்சாரத்திற்கு வர

இயலவில்லை. தலைவர்கள் சிறையில் இருந்ததால் திமுக தொண்டர்களுக்குள்ளும் அச்சம் பரவியிருந்தது. அப்பொழுது எம்.ஜி.ஆர் ஒருவரே பிரச்சாரப் பணியை முழுவதுமாக தன் தோளில் சுமந்து வெற்றியைப் பெற்றுத் தந்தார். எம்.ஜி.ஆருக்கு உறுதுணையாக அவருடைய இரசிகர்களும், இரசிகர் மன்றங்களும் திருச்செங்கோடு இடைத் தேர்தலில் ஓய்வின்றிப் பணியாற்றினார். அப்போது தேர்தலில் திமுக பெற்ற வெற்றியை அண்ணா மிகவும் பாராட்டினார். எம்.ஜி.ஆர் மீது அண்ணா மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்.

கலங்கிய காங்கிரஸ் கட்சி

எம்.ஜி.ஆரின் பிரச்சாரமும் இரசிகர் மன்றங்களின் ஓய்வறியா உழைப்பும் திமுக பெற்ற வெற்றியும் காங்கிரஸ்காரர்களைச் சற்று சிந்திக்க வைத்தது. எம்.ஜி.ஆர் பெற்றுவந்த மக்கள் செல்வாக்கு பற்றி காங்கிரஸ் சிந்திக்கத் தொடங்கியது. போட்டிக்கு சிவாஜியை வளர்த்துவிட்டது. சிவாஜி இரசிகர் மன்றங்கள் தொடங்கப்பட்ட போதும் அவற்றில் அதிக எண்ணிக்கையில் ஆட்கள் சேரவில்லை. உறுப்பினர் கட்டணம் நாலணா வைத்தும் சேர்பவரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இரசிகர்களாக சேர்ந்தவர்களும் படத்தின் வெற்றிக்கு பாடுபடவில்லை. அவரது பல படங்கள் சுமாராகக ஓடின. சில தோல்வி கண்டன.

ரசிகைகளின் பங்களிப்பு

எம்.ஜி.ஆர் இரசிகர்களில் பெரும்பான்மையோர் முதல் வெளியீட்டில் எம்.ஜி.ஆர் படங்களைப் பத்து பதினைந்து முறை பார்த்தனர். பலர் தினமும் பார்த்தனர். பெண்களும் அதிக அளவில் பகல் காட்சிகளில் எம்.ஜி.ஆர் படங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ந்தனர். அதனால் எம்.ஜி.ஆர் படங்கள் நீண்ட காலம் ஓடின. சிவாஜி இரசிகர்கள் சிவாஜி படங்களை ஐந்தாறு முறைக்கு மேல் பார்ப்பது கிடையாது.

பெண்கள் ஒரு முறை பார்ப்பதோடு நிறுத்திவிட்டனர். எம்.ஜி.ஆர் படங்கள் இரசிக ரசிகையரின் தொடர் ஆதரவால் வசூலை அள்ளிக்கொடுத்தன. எம்.ஜி.ஆர் வசூல் சக்கரவர்த்தி எனப் பெயர் பெற்றார். மாட்டுக்கார வேலன் படத்தை கீரை விற்கும் ஒரு பாட்டி தினமும் வந்து பார்த்தார். இவ்வாறு

பாட்டிமாரும் இளம்பெண்களும் தாய்மாரும் எம்.ஜி.ஆர் படங்களை அடிக்கடி பார்த்து மகிழ்ந்தனர். இரசிகர்கள் ஆரவாரமாகப் படம் பார்த்தனர். பட வெளியீட்டின் போது நிறைய செலவு செய்தனர்.

‘வேட்டைக்காரன் வருவான்’

1963 காஞ்சித்தலைவன் மற்றும் தர்மம் தலைகாக்கும் ஆகிய படங்கள் வெளிவந்த போது எம்.ஜி.ஆரின் செல்வாக்கு இன்னும் அதிகமாயிற்று. எம்.ஜி.ஆர் தான் திமுக திமுக தான் எம்.ஜி.ஆர் என்ற அளவில் எம்.ஜி.ஆரின் செல்வாக்கை இரசிகர்கள் உயர்த்தினர். திமுக தொண்டர்களை விட எம்.ஜி.ஆரின் இரசிகர்கள் திமுகவின் மீது மிகுந்த பற்று உடையவர்களாக இருந்தனர். அடுத்த ஆண்டு வெளிவந்த வேட்டைக்காரன் படத்தைப் பார்த்து காமராஜர் தன்னுடைய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ‘வேட்டைக்காரன் வருவான் ஏமாந்துவிடாதீர்கள்’ என்று மக்களிடம் தெரிவித்தார். காமராஜரே மக்களை எச்சரிக்கும் அளவுக்கு எம்.ஜி.ஆருடைய செல்வாக்கு கண்டு காங்கிரஸ் கலக்கம் அடைந்திருந்தது.

நேர்மையும் உழைப்பும் வளர்ச்சியைத் தரும்

1964 இல் வெளிவந்த படகோட்டி, தொழிலாளி ஆகிய படங்கள் எம்.ஜி.ஆரின் இரசிகர்களின் எண்ணிக்கையை



இன்னும் அதிகரித்தது. தொழிலாளி படம் ஏழைத் தொழிலாளர்களின் உள்ளத்தில் நீங்கா இடத்தைப் பெற்று எம்.ஜி.ஆரை ஏழைப் பங்காளனாகக் காட்டியதோடு மட்டுமல்லாமல் ஒரு தொழிலாளியாக நேர்மையாக வாழ்க்கையைத் தொடங்கும் ஒருவன் பஸ் கம்பெனியின் முதலாளியாக வரும் அளவுக்கு வளர்ச்சி பெற முடியும் வளர முடியும் என்ற எண்ணத்தையும் நம்பிக்கையையும் தொழிலாளிகளின் மனதில் ஏற்படுத்தியது. எனவே எம்.ஜி.ஆர் படங்களுக்கான இரசிகர் கூட்டம் அதிகரித்தது. இரசிகர்கள் எம்.ஜி.ஆர். படத்தை பார்த்து நம்பிக்கை கொண்டனர். இரசிகர்களின் எண்ணிக்கை வளர்ச்சியும் இரசிகர் மன்றங்களின் வளர்ச்சியும் அபரிமிதமாக வளர்ந்து கொண்டிருந்த போது 1965இல் எங்க வீட்டு பிள்ளை படம் வெளிவந்தது. இப்படத்தில்

"நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்

இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்

உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை

அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்" *என்ற பாட்டு மக்களுக்கு எம்.ஜி.ஆர் இரசிகர்களுக்கு எம்.ஜி.ஆரின் மறுபதிப்பாக திமுக ஆட்சிக்கு வந்தால் மக்கள் கண்ணீர் கடலில் இருந்து வெளியே வந்துவிடுவார்கள் என்ற எண்ணத்தை நம்பிக்கையை ஏற்படுத்தியது. இவருடைய இந்தியா முழுக்க திரையரங்குகளில் செல்வாக்குப் பெற்ற பாடல் எது என்று நடத்தப்பட்ட ஆய்வில் இப்பாடல் முதலிடத்தை பெற்றது. இப்படம் வியட்நாம் நாட்டில் கூட அந்த மொழியில் சப்டைட்டில்கள் போடப்பட்டு படம் வெளியாயிற்று. எம்.ஜி.ஆரின் வளர்ந்து வரும் செல்வாக்கை கண்ட காங்கிரஸ் தணிக்கையாளர் மூலமாக எம்.ஜி.ஆர் படங்களுக்கு பல தொல்லைகளைக் கொடுத்து நான் ஆணையிட்டால் பாட்டில் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்ற வரிகளை தணிக்கையாளர்கள் அனுமதிக்கவில்லை. உடனே கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன் என்று அந்த வரிகள் மாற்றப்பட்டு அந்த வரி மாற்றப்பட்டு படத்தில் இடம் பெற்றது. இலங்கையில்*

வானொலியில் இப்பாடல் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்று இடம்பெற்றது.

ஆயிரத்தில் ஒருவன் எம்.ஜி.ஆர்

அடுத்து வெளிவந்த ஆயிரத்தில் ஒருவன் படம் இரசிகர்களின் தலைவனாக எம்.ஜி.ஆரை ஒரு அரசியல் தலைவன் ஆகவே உருவாக்கியது. படத்தின் முடிவில் எம்.ஜி.ஆர் நேரடி அரசியலுக்கு வர விரும்பாதவராக மருத்துவராகவே தன் வாழ்க்கையை தொடர்வதாக காட்டப்பட்டாலும் கூட அது இரசிகர்களுக்கு விருப்பமானதாக அமையவில்லை. இரசிகர்கள் எம்.ஜி.ஆர் நேரடி அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற ஆவலில் இருந்தனர். எம்.ஜி.ஆரின் வளர்ந்து வரும் இரசிகர்களின் செல்வாக்கு அண்ணாவுக்குப் புரிந்தது. ஆனால் கருணாநிதிக்கு புரியவில்லை. எம்.ஜி.ஆருக்கு எதிர்ப்புகள் ஏற்பட்டபோது அண்ணா அவரை எதிர்த்த இரண்டாம் கட்டத் தலைவர்களிடம் ‘நீங்கள் ஒரு கூட்டத்தில் பேசினால் ஆயிரம் பேரிடம் நம்முடைய கட்சி கொள்கைகளை கொண்டு செல்ல முடியும், ஆனால் அவருடைய படத்தை இலட்சக்கணக்கானவர்கள் பார்க்கின்றனர். எனவே எம்.ஜி.ஆர் திமுக கொள்கைகளைத் தன் படங்களில் புகுத்தி அவர் லட்சக்கணக்கானவர்களை திமுகவினர் ஆக மாற்றி வருகிறார்.



அவருடைய செல்வாக்கும் திரைப்படங்களின் செல்வாக்கும் உங்களுக்கு புரியவில்லை' என்று அவர்களுக்கு எடுத்துக் கூறினார்.

சந்திரோதயம்

1966ஆம் ஆண்டில் தமிழகத்தில் இருந்த பிரபல நாளிதழ் ஒன்று செய்துவரும் பித்தலாட்டங்களை தனது சந்திரோதயம்

என்ற படத்தில் துணிந்து எடுத்துக் கூறினார். இதனால் அவர் நாளிதழை பகைத்துக் கொண்டாலும் அந்த நாளிதழில் இவருடைய படங்களின் விளம்பரங்கள் இடம்பெறா விட்டாலும் கூட அவரால் துணிந்து ஊடகங்களை எதிர்க்க முடியும் அதற்குரிய ஆற்றலும் செல்வாக்கும் துணிச்சலும் அவருக்கு உண்டு எனபதை இரசிகர்கள் புரிந்து கொண்டனர். அந்த நாளிதழ் இவரைப் பற்றி தவறாக எழுதி வந்த போதும் கூட இரசிகர்கள் அவதூறுச் செய்திகளை நம்பத் தயாராக இல்லை. இரசிகர்கள் எம்.ஜி.ஆரை முழுமையாக நம்பினர்.

துப்பாக்கி சூடும் மக்களின் வழிபாடும்

1967 இல் சட்டமன்றத் தேர்தல் வந்தது. அப்போது திமுக ஒரு மெகா கூட்டணியை அமைத்து கம்யூனிஸ்டுகள் முஸ்லிம்



லீக், மபொசியின் தமிழரசுக் கழகம், ராஜாஜியின் சுதந்திரா கட்சி ஆகியவற்றோடு இணைந்து பெரிய கூட்டணியை அமைத்து காங்கிரஸை எதிர்த்தது. கம்யூனிஸ்டு தலைவர்கள் காயிதேமில்லத் மாபொசி, ராஜாஜி, அண்ணா போன்ற பெரிய தலைவர்கள் ஒரே மேடையில் மக்களைச் சந்தித்தனர். இந்நிலையில் எம்.ஜி.ஆரும் வெகு தீவிரமாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார். அண்ணா அவரை பரங்கிமலை தொகுதியில் வேட்பாளராக்கி இருந்தார். இந்நிலையில் திடீரென்று வாசுவும் எம்ஆர் ராதாவும் எம்.ஜி.ஆரை சந்திக்க வந்தபோது எம்.ஜி.ஆரை எம் ஆர் ராதா துப்பாக்கியால் சுட்டு விட்டார்.



இரசிகர்கள் பகிரங்கமாக சாமி கும்பிட்டனர்

எம்.ஜி.ஆர் குண்டடிபட்டு கழுத்தில் கட்டுப்போட்டு ராயப்பேட்டை மருத்துவமனையில் இருந்தபோது அவர் தன் வேட்பாளரின் வேட்பு மனுவில் கையெழுத்து இட்டு கொடுத்தார். அந்த படம் போஸ்டராக ஒட்டப்பட்டு அதை பார்த்து மக்கள் வருந்தினர். அவர் விரைவில் குணமடைய வேண்டும் என்று பலவகையான பிரார்த்தனைகளை நிறைவேற்றினர். எம்.ஜி.ஆரின் இரசிகர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகினர். எம்.ஜி.ஆர் பிழைத்து வர வேண்டும் என்று அவர்கள் இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையான கடவுள் மறுப்பு அல்லது இந்து கடவுள் வெறுப்பு போன்றவற்றிலிருந்து விலகி அவரவர் வணங்கி வந்த கடவுள்களைப் பிரார்த்தனைகள் செய்தனர். சிறப்பு வழிபாடுகள் செய்து எம்.ஜி.ஆர் பிழைத்து வர வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டனர். இராயப்பேட்டை மருத்துவமனையில் திருப்பதிக்குச் சென்று மொட்டை போட்டுக் கொண்டு வந்த பலர் எம்.ஜி.ஆர் பிழைத்து வர வேண்டுமென்று பிரசாதங்களைக் கொண்டு போய்க் கொடுத்தனர்.



திமுக கொள்கைகளைத் தவிர்த்த இரசிகர்கள்

திமுகவா? எம்.ஜி.ஆரா? என்ற கேள்வி மக்கள் முன்னர் எழுந்தபோது திமுகவின் கொள்கைகளைப் புறம்தள்ளிவிட்டு எம்.ஜி.ஆர் பிழைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக இரசிகர்களும் பொது மக்களும் இந்து கடவுளர்களை துணிந்து பகிரங்கமாக வழிபடத் தொடங்கினர். இது எம்.ஜி.ஆருக்காக திமுகவில் ஏற்பட்ட ஒரு முக்கிய திருப்பமாகும். தமிழகத்தில் தோன்றிய ஆன்மிக மறுமலர்ச்சி ஆகும்.

அண்ணா முதல்வரானார்

சுவரெங்கும் எம்.ஜி.ஆர் கழுத்தில் கட்டோடு இருக்கும் படங்கள் ஒட்டப்பட்டன. எம்.ஜி.ஆர் கும்பிட்டு வாக்கு கேட்பதாகக் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இரசிகர்கள் கடுமையாகக் உழைத்தனர். எம்.ஜி.ஆரே கேட்டுக் கொண்டதாலும் அரிசிப் பஞ்சம் தலை விரித்து ஆடியதாலும் அண்ணா ரூபாய்க்கு மூன்று படி அரிசி என தேர்தல் வாக்குறுதி கொடுத்திருந்ததாலும் மக்கள் மாற்றத்தை விரும்பினர். 1967இல் திமுக மாபெரும் வெற்றியைப் பெற்று ஆளுங்கட்சியாக சட்டமன்றத்தில் இடம் பெற்றது.

முதல்வராக அண்ணா பொறுப்பேற்கும் முன்பு அமைச்சர்கள் பட்டியலை இரா. செழியன் அவர்களிடம் கொடுத்துவிட்டு எம்.ஜி.ஆரிடம் காண்பித்து வரச்சொன்னார். அப்போது எம்.ஜி.ஆர் ஒருவர் பெயரை அப்பட்டியலில் இருந்து அடித்துவிட்டு கொடுத்தார். எம்.ஜி.ஆர் அவருடைய கருத்துக்கு மதிப்பளித்து அண்ணா அமைச்சரவையில் இருந்து அவரை நீக்கிவிட்டார். எம்.ஜி.ஆர் மீது அண்ணா வைத்திருந்த அன்பும் மரியாதையும் எம்.ஜி.ஆருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

மீண்டும் நடிக்க வந்தார் எம்.ஜி.ஆர்

பல்வேறு எதிர்ப்புகளையும் சோதனைகளையும் கடந்து எம்.ஜி.ஆர் சுகமாகி வந்து காவல்காரன், குடியிருந்த கோயில் போன்ற படங்களில் நடித்தார். இரசிகர்கள் ஆனந்தக் கூத்தாடினர். அவை மாபெரும் வெற்றியைப் பெற்றன. காவல்காரன் நூறாவது நாள் விழாவில் அண்ணா

கலந்துகொண்டு எம்.ஜி.ஆரை வாழ்த்தினார். எம்.ஜி.ஆரும் இரசிகர்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். எம்.ஜி.ஆரின் படங்கள் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றன. எம்.ஜி.ஆரின் நூறாவது படமான ஒளிவிளக்கு வந்தது. அதில் நானாக புதுசா கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க என்ற பாடல் திமுகவின் சாதனைகளை எடுத்துக்காட்டியது. ஆனால் இரண்டு ஆண்டுகளில் அண்ணா புற்றுநோயால் மரணம் அடைந்தபோது திமுகவின் அடுத்த தலைவர் யார் என்ற சிக்கல் ஏற்பட்டது.

‘கிங் மேக்கர்’ எம்.ஜி.ஆர்

அண்ணா மறைவுக்குப் பின்னர் எம்.ஜி.ஆர் கலைஞரை அடுத்த திமுக தலைவராகக் கொண்டு வரவேண்டும் என்று முழு முயற்சி எடுத்து அவருக்கு ஆதரவாக விளங்கிய எம்எல்ஏக்களை சென்னை பாரிமுனையில் இருக்கும் ஓட்டலில் தங்க வைத்து அவர்களின் மனதை யாரும் கலைத்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களைப் பாதுகாத்து பின்பு திமுக செயற்குழுவில் அவர்களை கலைஞருக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்து கலைஞரை முதல்வராக தலைவராக்கினார். அப்போது பேராசிரியர் நாவலர் போன்றோர் கலைஞருக்கு எதிராக இருந்தனர். பேராசிரியர் அன்பழகன் ‘கருணாநிதியை நான் என் தலைவராக ஏற்றுக் கொண்டால் என் மனைவி கூட என்னை மதிக்க மாட்டாள்’ என்று தெரிவித்தார். ஆனாலும் வேறு வழி இல்லாமல் அவரும் கருணாநிதியை தன்னுடைய தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்.

கருணாநிதி என்ன செய்தார்?

கருணாநிதியை முதல்வர் ஆக்கியதில் எம்.ஜி.ஆரின் செல்வாக்கு இன்னும் அதிகரித்தது. அவருக்கு கட்சியில் இருந்த செல்வாக்கு கட்சியினருக்கும் புரிய வந்தது. ஆனால் எம்.ஜி.ஆர் நினைத்தது போல கருணாநிதி ஆட்சி நடத்த வில்லை. அவர் அண்ணாவைப் போல கட்சியினரை அரவணைத்துச் செல்ல வில்லை. தன்னுடைய அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி கட்சியில் ஊழலை அதிகரித்தார். இதைக் கண்டு மனம் பொறுக்காத எம்.ஜி.ஆர்



கருணாநிதியைத் திமுகவின் தலைவராக்கியது தவறு என்பதை உணரத் தொடங்கினார். நேரடி அரசியலில் தான் ஈடுபட்டு கருணாநிதியை எதிர்க்கலாம் என்று கருதினார். இதற்கு இரசிகர்களின் ஆதரவு பற்றி அறிய விரும்பினார்.

இரசிகர்கள் ஆதரித்தனர்

எம்.ஜி.ஆர் விஜயா வாகினி பிலிம்ஸ் அதிபர் நாகிரெட்டியாரை அழைத்து தன்னுடைய எண்ணத்தை அவருக்குத் தெரிவித்து ஒரு படம் எடுக்கும்படி கேட்டுக் கொண்டார். நாகிரெட்டியார் நம் நாடு என்ற படத்தை எடுத்தார். இப்படம் ஒரே மாதத்தில் எடுக்கப்பட்டது. இப்படம் வெளியான அன்று [7-11-69] எம்.ஜி.ஆரும் நாகிரெட்டியாரும் திரையரங்கிற்குச் சென்று படத்தைப் பார்த்தனர். இரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பு

எம்.ஜி.ஆருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவர் நாகிரெட்டியாரின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு 'என் இரசிகர்கள் எனக்கு ஆதரவு தெரிவித்து விட்டனர். இனி நான் நேரடி அரசியலில் இறங்கத் தடை ஏதும் இல்லை' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

ஏமாற்றாதே ஏமாறாதே

நம் நாடு வருவதற்கு முன்பு அடிமைப்பெண் படம் மூலமாக எம்.ஜி.ஆர் கருணாநிதி மீதான கசப்பை தனது சொந்தப் படத்தில் வெளியிட்டு மறைமுகமாக ஓர் எச்சரிக்கை செய்திருந்தார். கருணாநிதி அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் எம்.ஜி.ஆர் தனக்கான ஆதரவுத் தளத்தை தயார் படுத்திக்கொண்டே இருந்தார். 1969 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று இல் அடிமைப்பெண் வெளி வந்தபோது அப்படத்தில் எம்.ஜி.ஆர் கருணாநிதி மக்களை ஏமாற்றி வருவதை 'ஏமாற்றாதே ஏமாறாதே' என்ற பாடலில் வெளிப்படுத்தி இருந்தார்.

"எந்த இருட்டுக்கும் பார்க்கின்ற விழியிருக்கும்

எந்த சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்

சொல்லாமல் கொள்ளாமல் காத்திருக்கும்

தக்க சமயத்தில் நடந்ததை எடுத்துரைக்கும்"

எனப் பாடிய வரிகள் முற்றிலும் கருணாநிதிக்கு உரியவை.

மன்னனின் அராஜகப் போக்கைக் கண்டித்து எச்சரிக்கும் வகையில்

"உன்னைப்பரர்த்து இந்த உலகம் சிரிக்கிறது

உன் செயலைப் பார்த்து உன் நிழலும் வெறுக்கிறது

தோன்றத்தான் போகிறது சமஉரிமை சமுதாயம்

மறையத் தான் போகிறது மன்னா உன் அதிகாரம்

மலரத் தான் போகிறது எங்களது புது வாழ்வு

மாறத் தான் போகிறது மனிதா உன் விளையாட்டு"



என்ற பாட்டையும் வைத்திருந்தார். கருணாநிதி தன தவறை திருத்திக்கொள்ளவில்லை. மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகமாயிற்று. திமுக ஊழலின் ஊற்றுக்கண் ஆக வளர்ந்தது. எம்.ஜி.ஆர் மனதில் ஏற்பட்ட அதிருப்தி அடிமைப்பெண் படத்தில் ஓரளவுக்கு வெளிப்பட்டது. படம் வெற்றிவிழா கண்டது. எம்.ஜி.ஆரின் சொந்த தயாரிப்பு என்பதால் செலவும் அதிகம்; பிரம்மானடமான காட்சிகள் இருந்ததை இரசிகர்கள் வெகுவாக ரசித்தனர். எம்.ஜி.ஆருக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகிக்கொண்டே போயிற்று. அனைத்து முஜ்க்கிய நகரங்களிலும் இரசிகர் மன்றங்கள் விழா எடுத்தன. எம்.ஜி.ஆர் தனது நடிகர் நடிகைகளோடு திரையரங்க மேடையில் வந்து காட்சியளித்தார். மும்பையில் இப்படத்துக்கு பிலிம்பேர் பரிசு கிடைத்தது. ராஜ் கபூர் எம்.ஜி.ஆரின் செல்வாக்கைப் பார்த்து பிரமித்து பாராட்டினார் அவரது சிங்கச் சண்டையை வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

எங்கள் தங்கம் எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆருக்கு இருக்கும் அதிருப்தியை கருணாநிதி அலட்சியம் செய்தார் அதே சமயம் வேறொரு டிரிக் செய்தார். தான் அதிகமாக பணம் சம்பாதிக்க வில்லை என்று அவரை நம்பச் செய்வதற்காக அவரும் அவர் மைத்துனர் முரசொலி

மாறனும் சேர்ந்து அவரிடம் சென்று ‘என்னுடைய வீடு கடனில் மூழ்கப் போகிறது. எனக்காக ஒரு படம் நடித்து கொடுங்கள்’ என்று கேட்டார். எம்.ஜி.ஆர் சம்மதித்தார். அவரும் ஜெயலலிதாவும் இலவசமாகவே எங்கள் தங்கம் என்ற படத்தை நடித்து கொடுத்தனர். எங்கள் தங்கம் படம் பெரிய வெற்றியைப் பெற்றது. நான் செத்துப் பிழைச்சவண்டா என்ற பாடலில் திமுகவை பற்றிய கருத்துக்கள், கருணாநிதியை பற்றிய கருத்து ஆகியன இடம் பெற்றன. வாலியிடம் எம்.ஜி.ஆர் இப்பாடலை இவ்வாறு எழுதித்தரும்படி கேட்டு வாங்கினார். அதனை இரசிகர்கள் ரசித்துப் பாராட்டினர்.



பாரத் எம்.ஜி.ஆர்

1971 ஆம் ஆண்டு ரிக்ஷாக்காரன் படத்தில் எம்.ஜி.ஆர் நடித்தார். இந்தப் படத்துக்கு இந்தியாவின் சிறந்த நடிகருக்கு வழங்கப்படும் பாரத் விருது எம்.ஜி.ஆருக்கு கிடைத்தது. ஆனால் பின்னர் கருணாநிதி பரிந்துரையால் தான் இவ்விருது எம்.ஜி.ஆருக்கு கிடைத்தது என்ற சர்ச்சையை திமுகவினர் கிளப்பியதால் எம்.ஜி.ஆர் இவ்விருதை திருப்பிக் கொடுத்தார்.

சாராயக் கடைகள் திறப்பு

இரண்டு விஷயங்களில் கருணாநிதி எம்.ஜி.ஆரை முற்றிலுமாக விரோதித்துக் கொள்ளும் போக்கினைத் தொடங்கினார். சினிமாவிற்கு செல்லும் இளைஞர்களை திசை திருப்புவதற்காக அவர் மதுவிலக்கை ரத்து செய்தார். சாராயக் கடைகளை திறந்து விட்டார். கருணாநிதியின் இந்த முடிவை எம்.ஜி.ஆர் மட்டுமல்ல. ராஜாஜி, காமராஜர் போன்றோரும் எதிர்த்தனர். ராஜாஜி கருணாநிதியின் வீட்டுக்கு சென்று 'சாராயக் கடைகளை திறக்க வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டார். சரி சரி என்று தலையை ஆட்டிய கருணாநிதி சாராயக் கடைகளை திறந்து விட்டார். இதனால்



எம்.ஜி.ஆருக்கு இரசிகர்கள் செல்வாக்குக் குறையும் என்று கருணாநிதி முடிவு செய்திருந்தார். ஆனால் அவ்வாறு இரசிகர்களின் செல்வாக்கு குறையவில்லை. இதை விட ஒரு வேடிக்கை என்னவென்றால் மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவுக்கு எம்.ஜி.ஆரை தலைவராகவும் ஆக்கினார். தான் மதுக்கடைகளை திறந்து வைத்துக் கொண்டு எம்.ஜி.ஆரிடம் சொல்லி அந்த கடைக்கு யாரும் வரக்கூடாது என்று நீங்கள் பிரச்சாரம் செய்யுங்கள் என்றார். எம்.ஜி.ஆரும் அதற்கு ஒப்புக்கொண்டார். தன்னுடைய ரிக்ஷாக்காரன் படத்திலும் எம்.ஜி.ஆர் குடியின் தீமையை எடுத்துரைத்தார்.

மகனை சினிமாவில் அறிமுகம் செய்தல்

1972இல் எம்.ஜி.ஆர் இதயவீணை படத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது கருணாநிதி எம்.ஜி.ஆர் க்கு போட்டியாக தன் மகன் மு க முத்து வை சினிமாவில் புகுத்தினார். எம்.ஜி.ஆர் வந்து முத்துவின் முதல்நாள் படப்பிடிப்பைத் தொடங்கி வைக்க வேண்டும் என்று கருணாநிதி கேட்டுக் கொண்டார். எம்.ஜி.ஆரும் மனமுவந்து முதல்நாள் படப்பிடிப்பை தொடங்கி வைத்து விட்டு ‘மு.க. முத்து தனக்கென்று ஒரு தனி பாணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்’ என்ற ஆத்மார்த்தமாக ஓர் அறிவுரையும் சொல்லிவிட்டு போனார். ஆனால் மு க முத்து எம்.ஜி.ஆரைப் போலவே நடித்தார்.

எம்.ஜி.ஆர் தனக்குப் போட்டியாக தான் கருணாநிதி தன் மகனை திரையுலகில் கொண்டு வந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டு கருணாநிதியின் முரண்பட்ட போக்கை புரிந்து கொண்டு காலம் கனியட்டும் என்று காத்திருந்தார். எம்.ஜி.ஆரின் பொறுமைக்கு ஒரு சோதனை காலம் வந்தது. தன இரசிகர்களை திசை திருப்பும் முயற்சியில் இறங்கிய போதும் பொறுமை காத்த எம்.ஜி.ஆர் தன இரசிகர்களை மேலும் மிரட்டி ஒடுக்கும் நிலை வந்த போது கொதித்து எழுந்தார்.

இரசிகர் மன்றங்களுக்குத் தொல்லை

எம்.ஜி.ஆரின் இரசிகர் மன்றங்கள் திமுகவின் ஒப்புதலோடு தொடங்கப்பட வேண்டும் என்பது திமுக கட்சியின் விதி. இவ்வேளையில் எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்களை மு. க. முத்து

இரசிகர் மன்றங்களாக மாற்றும் முயற்சிகள் மறைமுகமாக நடைபெற்றன. புதிய எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்கள் தொடங்குவதற்கு திமுகவின் கிளைச்செயலாளர் கையெழுத்து வாங்க வேண்டியது கடமை ஆகும். ஆனால் கிளைச் செயலாளர்கள் எம்.ஜி.ஆர் மன்றங்கள் தொடங்குவதற்கு அனுமதி மறுத்தனர். பழைய எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்களையும் கலைத்து விட்டு அவற்றைப் புதிதாக முக முத்து இரசிகர் மன்றங்களாக மாற்ற வேண்டும் என்று நிர்பந்தித்தனர். புதிது புதிதாக மு க முத்து இரசிகர் மன்றங்களும் ஆங்காங்கே முளைத்தன. இவ்வாறு எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றங்கள் பல்வேறான நெருக்கடிக்குள்ளான போது இரசிகர்கள் எம்.ஜி.ஆரை பார்த்து தங்களுடைய குறைகளை முறையிட்டனர்.

இரசிகர் மன்றத்துக்கென தாமரைக்கொடி

அண்ணா பிறந்தநாள் விழாவை இரசிகர் மன்றங்கள் தனியாகக் கொண்டாட வேண்டாம் என்றும் பதிவு செய்யாத இரசிகர் மன்றங்கள் திமுக கொடியை பயன்படுத்தக் கூடாது என்றும் திமுக உத்தரவிட்டது. இரசிகர்கள் தாமரை படம் பொறித்த ஒரு கொடியை தமக்கென உருவாக்கி தனி அமைப்பாகக செயல்படப் போவதாக எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தனர். எம்.ஜி.ஆர் சற்று அதிர்ந்து போனார். கட்சிக்குள் பிரிவினை ஏற்படுத்தக் கூடாது கட்சிக் கட்டுப்பாட்டை மீறக் கூடாது என்று தனது இரசிகர்களிடம் எடுத்து கூறினாலும் ஒவ்வொரு நாளும் இரசிகர்களுக்கு ஏற்படும் தொல்லை அவரை கவலை கொள்ள வைத்தது. இரசிகர் மன்றங்களின் செயல்பாட்டை முடக்கும் முயற்சிகளில் திமுக தொடர்ந்து ஈடுபட்டது.

எம்.ஜி.ஆர் பேசினார்; கருணாநிதி மயங்கினார்

1972 ஆகஸ்ட் மாதம் 5, 6 தேதிகளில் மதுரையில் திமுக மாநாடு நடைபெற்றது. அப்போது திமுக மாநாட்டுக்குத் தலைமை ஏற்க கருணாநிதியின் மைத்துனர் முரசொலி மாறனும் ஊர்வலத்திற்கு தலைமை தாங்க அவருடைய மகன் முக முத்துவும் நியமிக்கப்பட்டனர். அப்போதே கருணாநிதி தன்னுடைய குடும்ப அரசியலை தொடங்கிவிட்டார். இதனை அறிந்த எம்ஜியார் இம்மாநாட்டுக்கு வராமல் தவிர்க்க முடிவு



செய்தார். ஆனால் அவரை நேரில் சந்தித்த திமுக தலைவர் சிலர் கண்டிப்பாக ‘மதுரை மாநாட்டிற்கு நீங்கள் வர வேண்டும்’ என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டனர். அதனால் எம்.ஜி.ஆர் முதல் நாள் மாநாட்டுக்கு வராமல் மறுநாள் மட்டும் வந்தார். எம்.ஜி.ஆர் கடைசியில் பேசட்டும்; நீங்கள் முதலில் பேசி விடுங்கள் என்று கருணாநிதியைக் கட்சியினர் கேட்டுக் கொண்டனர். ஆனால் அவரோ ‘நான் தான் கட்சியின் தலைவர் நான் தான் கடைசியில் பேசுவேன்’ என்றார். எம்.ஜி.ஆரை பேசும்படி அழைத்தனர். அவர் பேசி முடித்ததும் கூட்டத்தில் இருந்தவர்கள் கலைந்து செல்ல தொடங்கினர். மைதானம் மடமடவென்று காலியாவதை பார்த்த கருணாநிதி அப்படியே மயக்கம் போட்டு விடுவது

போல நடித்து பேசாமலேயே மாநாட்டு மேடையை விட்டு சென்றுவிட்டார். இத்தருணத்தில் கருணாநிதிக்கு எம்.ஜி.ஆர் மீது இருந்த அதிருப்தியும் வெறுப்பும் கோபமும் அதிகமாயிற்று. எம்.ஜி.ஆரை கட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும். அவர் இருக்கும் வரை இந்தக் கட்சியில் அவர் அளவுக்குத் தனக்கு சமமான செல்வாக்கு இருக்காது என்பதைத் தெள்ளத்தெளிவாக மதுரை மாநாட்டில் வைத்து கருணாநிதி புரிந்து கொண்டார்.

இரசிகர்களை அடித்து உதைத்தனர்

இரசிகர் மன்ற நிர்வாகிகள் திமுகவினரின் கோபத்திற்கும் திமுகவினரின் ஏவல்துறையாக விளங்கும் காவல்துறையினரின் அடிதடிக்கும் உட்பட்டு சிரமப்பட்டனர். எம்.ஜி.ஆரின் படங்களை பச்சை குத்தி கோலும் வழக்கம் எம்.ஜி.ஆர் இரசிகர்களிடையே அப்போது இருந்தது. அவ்வாறு பச்சை குத்திக்கொண்டவர்களை தேடிப் பிடித்து காவல் துறையினர் அவர்கள் மீது பொய் வழக்குப் போட்டு அவர்கள் நெஞ்சில் பூட்ஸ் காலால் மிதித்து அடித்து



உதைத்தனர். எம்.ஜி.ஆருக்குக் கடிதங்கள் வாயிலாக தாங்கள் படும் பாடுகளை விவரித்து இரசிகர்கள் கடிதம் எழுதினர்.

கழகம் தாய்; மன்றம் சேய்

எம்.ஜி.ஆரை அழைத்து கருணாநிதி சமாதானம் பேசினார். மன்றங்கள் கட்சிக்குள் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்று கருணாநிதி எம்.ஜி.ஆரிடம் எடுத்துக் கூறினார். எம்.ஜி.ஆரும் உடன்பட்டார். இரசிகர் மன்றக் கூட்டத்தில் 'கழகம் தாய், மன்றம் சேய்' எனவே சேய் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இவ்வாறு பேசி முடித்துவிட்டு அவர் காரில் ஏற வந்தபோது சைதை துரைசாமி அவர்கள் எம்.ஜி.ஆர் காருக்கு அருகில் சென்று 'அண்ணே நீங்களே மன்றத்தை கிளோஸ் பண்ணிட்டீங்க' என்றார். உடனே எம்.ஜி.ஆர் அவரை அர்த்தபுஷ்டியோடு திரும்பிப் பார்த்தார். 'கிளைச் செயலாளர்கள் அனுமதி மறுக்கின்றனர். இருக்கும் மன்றங்களை முக முத்து மன்றங்களாக மாற்றச் சொல்கின்றனர். மாற்றாவிட்டால் போலிசை விட்டு அடித்து உதைக்கின்னர். நம்முடைய இரசிகர்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றனர்' எனச் சொல்லியதும் எம்.ஜி.ஆர் மூக்கை தேய்த்தபடி 'சரி நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று காரில் ஏறிச் சென்று விட்டார்.

அண்ணா சிலை திறப்பு விழா

அண்ணா பிறந்தநாள் விழாவை இரசிகர் மன்றங்கள் கொண்டாடக்கூடாது என்று உத்தரவிட்ட கருணாநிதியின் கட்டளையை மீறி ஆலந்தூர் மோகனரங்கனிடம் எம்.ஜி.ஆர் திருக்கழுக்குன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா சிலையை தான் வந்து திறந்து வைப்பதாகத் தெரிவித்தார். அங்கு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யும்படி கூறினார். ஆலந்தூர் மோகனரங்கன் அக்டோபர் 8 ம் தேதி திருக்கழுக்குன்றத்தில் பகலில் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர் அன்று இரவே சென்னை லாயிட்ஸ் ரோட்டில் நடந்த பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

எம்.ஜி.ஆர் தான் கலந்து கொண்ட இரண்டு கூட்டங்களிலும் சொத்து எதுவும் இல்லாமல் பதவிக்கு வந்த திமுக தலைவர்கள் இப்போது நிறைய சொத்துக்கள் சேர்த்திருக்கின்றனர். மக்கள் இதனால் நம் மீது சந்தேகப் படுகின்றனர். வாக்களித்த மக்களுக்கு திமுகவினர் சொத்துக்கணக்கைக் காட்டவேண்டும் என்று பகிரங்கமாக திமுக ஊழல் செய்து சொத்து சம்பாதித்து இருப்பதைச் சுட்டிக் காட்டினார். 12ஆம் தேதி நடக்கவிருக்கும் செயற்குழுவில் இதனைத் தான் நேரடியாகக் கேட்கப் போவதாகவும் பொதுக்கூட்ட மேடையில் அறிவித்தார். இவருடைய பொதுக்கூட்ட பேச்சைக் கேட்ட கருணாநிதி 12ம் தேதி வரை பொறுத்துக் கொண்டு இருந்தால் இவருக்கு செயற்குழு உறுப்பினர்களிடம் ஆதரவு பெருகி விடும் எனப் பயந்து எட்டாம் தேதி அன்று இரவே மதுரை முத்து மூலமாக செயற்குழு உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கி வரச் செய்து எம்.ஜி.ஆரைக் கட்சியை விட்டு நீக்கினார். நாளிதழ்களில் எம்.ஜி.ஆர் கட்சியை விட்டு நீக்கப்பட்ட செய்தி வெளியானது.

உள்ளே சமாதானம்; வெளியே அடி உதை

எம்.ஜி.ஆரை கட்சியை விட்டு நீக்கியதை திமுக தலைவர்கள் பலர் எதிர்த்தனர் அவர்களை சமாதானப்படுத்தும் நோக்கில் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்ட பிறகு முரசொலி மாறனை அனுப்பி எம்.ஜி.ஆரிடம் கருணாநிதி சமாதானம் பேசினார். அவ்வாறு எம்.ஜி.ஆரிடம் சமாதானம் பேசிக்கொண்டிருக்கும்போதே எம்.ஜி.ஆரின் மாநில இரசிகர் மன்றத் தலைவரான முசிறிப் புத்தனை சில திமுகவினர் கடுமையாகத் தாக்கி மண்டையை உடைத்து விட்டனர். அவர் ரத்தக் களறியாக எம்.ஜி.ஆரை அவருடைய கட்சி ஆபீஸில் வந்து சந்தித்தார். எம்.ஜி.ஆர் 'இங்கு என்னிடம் சமாதானம் பேசிக் கொண்டே வெளியே என்னுடைய இரசிகர் மன்றத் தலைவரை இப்படி அடித்து இருக்கிறீர்களே' என்று கேட்டு விட்டு 'நீங்கள் உங்கள் வழியைப் பார்த்துக் கொள்ளுங்கள் நான் என் வழியை பார்த்துக்கொள்கிறேன்' என்று அனுப்பிவிட்டார்.

எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றத் தலைவரான முசிறிபுத்தனை அடித்தது கருணாநிதிக்கு மிக நெருக்கமாக இருக்கும் நீல நாராயணனின் அடியாட்கள் என்பதைத் தெரிந்து கொண்ட எம்.ஜி.ஆர் கருணாநிதி மீது மிகுந்த கோபம் கொண்டார். தன்னுடைய இரசிகர்கள், இரசிகர் மன்றத்தினர் தன் பொருட்டு சிரமப்படுவதையும் அடிபடுவதும் அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதுநாள் வரை அவர்களுடைய ஆசியாலும் அவர்களுடைய பணத்தாலும் தான் உச்ச நிலையை அடைந்து இருப்பதை ஒவ்வொரு நிமிடமும் உணர்ந்திருந்த எம்.ஜி.ஆர் தன்னுடைய இரசிகர்கள் காயப்படுவதையும் கண்ணீர் விடுவதையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் கருணாநிதியை முழுக்க முழுக்க எதிர்ப்பது என்ற முடிவுக்கு வந்து விட்டார்.

இரசிகர்கள் தனிக்கட்சி தொடக்கம்

எம்.ஜி.ஆரை திமுக கட்சியை விட்டு வெளியேற்றி விட்டனர் என்ற தகவல் கிடைத்ததும் தமிழகமெங்கும் இருந்து இரசிகர் மன்றத்தினர் கூட்டம் கூட்டமாக எம்.ஜி.ஆரைச் சந்திக்க அவருடைய வீடு இருந்த ராமாவரம் தோட்டம், அவருடைய அலுவலகம் இருந்த லாயிட்ஸ் ரோடு, அவருடைய சத்யா ஸ்டூடியோ ஆகிய இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக வந்து



சேர்ந்தனர். இவர்களின் அபரிமிதமான ஆதரவைக் கண்டு எம்.ஜி.ஆர் சற்று அசந்து போனார். 10-10-1972 அன்று விடிய விடிய இந்த மூன்று இடங்களுக்கும் இரசிகர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டே இருந்தனர். முதல் இரண்டு நாட்களுக்கு இது வெறும் இரசிகர்களின் ஆரவாரம் என்று கருதிய கருணாநிதி இரசிகர்களின் தொடர் ஆதரவை பார்த்து கலங்கி போனார்.

தமிழகத்தின் அக்டோபர் புரட்சி

எம்.ஜி.ஆரை திமுக கட்சியை விட்டு நீக்கியதும் இரசிகர்கள் அனைத்து ஊர்களிலும் பெருவாரியாகக் திரண்டெழுந்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். திமுகவின் ஏவல் துறையான காவல் துறை அவர்களை அடித்து உதைத்தது. மக்கள் இரசிகர்களுக்கு முழு ஆதரவு கொடுத்தனர். பேருந்துகளை நிறுத்தி எம்.ஜி.ஆர் வாழ்க என்று எழுதினர். கோஷம் எழுப்பினர். பேருந்துப் பயணிகளும் அவர்களோடு சேர்ந்து எம், ஜி ஆர் வாழ்க என்று வாழ்த்தினர். பொது மக்களும் எம்.ஜி.ஆருக்காக பரிதாபப்பட்டனர். எம்.ஜி.ஆர் மீது மக்களுக்கு பரிவு அதிகரித்தது. கருணாநிதியின் வன்முறை, இலஞ்சம், ஊழல், அதிகார முறைகேடுகளால் வாடிப் போயிருந்த மக்கள் எம்.ஜி.ஆர் தனிக் கட்சி தொடங்கி நம்மை இந்த அடாவடி அரசிடம் இருந்து மீட்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர். எனவே மக்களும் இரசிகர்களின் எதிர்ப்புக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் ஆதரவாக இருந்தனர். சமூக இயலார் இதை அக்டோபர் புரட்சி என்று அழைத்தனர்.

தாமரை கொடி ஏற்றப்பட்டது

முன்பே இரசிகர்கள் எம்.ஜி.ஆரிடம் சொல்லியிருந்தபடி தனி அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்று முடிவு செய்தனர். சத்யா கல்யாண மண்டபத்தின் கதவில் இருந்த தாமரை பூ டிசைனைப் பார்த்து விட்டு அங்குக் கூடியிருந்தா சைதை துரைசாமி மற்றும் பிற இரசிகர் களும் தாமரைப்பூ வடிவம் நடுவில் கொண்ட ஒரு கொடியை தயாரித்து அங்கு ஏற்றிவிட்டனர்.

இவ்வாறு தமிழகமெங்கும் இரசிகர்களால் நகரங்களிலும் கிராமங்களிலும் தாமரை கொடி ஏற்றப்பட்டது.

திமுக கொடியில் எம்.ஜி.ஆரும் அண்ணாவும்

சில இடங்களில் திமுக கொடியில் அண்ணா எம்.ஜி.ஆர் படங்களை ஒட்டி இரசிகர்கள் புதிய கட்சி கொடியை ஏற்றினர். எம்.ஜி.ஆர் தன்னுடைய கட்சியைத் திட்டமிடுவதற்கு முன்பே இரசிகர்கள் தங்களது கட்சியைத் தொடங்கி விட்டனர். இதற்கிடையே சிலர் எம்.ஜி.ஆரிடம் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தினர். சில கட்சிகள் தங்கள் கட்சியில் வந்து சேரும்படி எம்.ஜி.ஆருக்கு அழைப்பு விடுத்தன. இவற்றைக் கவனித்த கருணாநிதி எம்.ஜி.ஆருக்கு உண்மையிலேயே இரசிகர்களின் ஆதரவு அளவு கடந்ததாக இருப்பதையும், கருணாநிதியால் கணிக்க முடியாதபடி இருப்பதை அப்போது புரிந்து கொண்டார்.

தீக்குளித்தார் இஸ்மாயில்

முக்கிய நகரங்களில் இரசிகர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை காவல்துறையைக் கொண்டு கண்மூடித்தனமாக ஒடுக்கிவிட கருணாநிதி முயன்றார். இதனால் எங்கும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தொளிமுறை ரவுடிகளும் திமுக ரவுடிகளும் எம்.ஜி.ஆர் இரசிகர்களை வம்புக்கிழுத்து அடித்து உதைத்தனர். எம்.ஜி.ஆர் இரசிகர்கள் எந்த நேரமும் அடிபட்டனர். தமிழகமெங்கும் போராட்டங்கள் நடந்து வருகின்ற வேளையில் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த இஸ்மாயில் என்ற முஸ்லிம் இளைஞர் எம்.ஜி.ஆரை கட்சியை விட்டு நீக்கியதைக் கண்டித்து தீக்குளித்து இறந்து போனார். இனி திமுகவில் எம்.ஜி.ஆர் வந்து சேர்வதற்கு வாய்ப்பு இல்லை என்ற நிலை உருவாகி விட்டது.

எம்.ஜி.ஆர் கட்சி தலைவராக்கப்பட்டார்

எம்.ஜி.ஆர் இரசிகர்கள் தனித்தனியாக கொடியேற்றி கட்சியைத் தொடங்கி எம்.ஜி.ஆரை தமது தலைவராகக்



ஏற்றுக்கொண்டனர். பொது மக்கள் ஆதரவு குறிப்பாகக் பெண்கள் ஆதரவு இக்கட்சிக்கு அதிகமாகக் கிடைத்தது. இன்றைக்கும் பெண் உறுப்பினர்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட கட்சி அண்ணாதிமுக மட்டுமே. எம்.ஜி.ஆரின் மீதுள்ள ஆழ்ந்த பற்று அவருடைய தலைமைப் பண்பின் மீது உள்ள நம்பிக்கை காரணமாக எம்.ஜி.ஆரை இரசிகர்கள் தம்முடைய தலைவராக ஏற்றுக்கொண்டு அவருடைய அரசியல் நிலைப்பாடு எதுவாக இருந்தபோதிலும் அதனைப் பின்பற்றுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

தன்னை அரசியல் தலைவராக ஏற்றுக்கொண்ட இரசிகர்கள் தனிக் கொடி ஏற்றி தாங்களாகவே கட்சியைத் தொடங்குவதை அறிந்த எம்.ஜி.ஆர் இவர்களையெல்லாம் ஒன்றிணைத்து தனி அரசியல் கட்சி ஆரம்பித்து ஆக வேண்டும் என்ற ஒரு கட்டாயத்திற்கு உள்ளானார். அவர் சற்று பொறுத்து மெதுவாகக் காரியங்களைச் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த வேளையில் இரசிகர்கள் படும் அடியும் உதையும் இனி பொறுப்பதற்கில்லை என்ற நிலையை ஏற்படுத்தியது. அக்டோபர் 12 ஆம் தேதி எம்.ஜி.ஆர் அண்ணா திமுக கட்சியை தொடங்கினார்.

அண்ணாதிமுக கொடி

எம்.ஜி.ஆர் இதுவரை தன்னுடைய படத்தில் கருப்பு சிவப்பு வண்ணங்களை காட்டி தன்னையே திமுக என்று பிரதிபலித்து வந்த காரணத்தால் இதுவரை நடித்து வந்த படங்களில் தான் நடித்த கதாபாத்திரங்களும் பேசிய வசனங்களும் காட்டிய வண்ணங்களும் வீணாகப் போகக் கூடாது என்ற காரணத்தினாலும் அண்ணா தொடங்கிய திமுக என்பது தன்னுடைய கட்சியாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று கருதியதாலும் அவர் திமுக கொடியில் அண்ணாவின் படத்தை இடம் பெறச் செய்து தன்னுடைய கட்சிக்கு அண்ணா திமுக எனறு பெயர் சூட்டினார்.

அண்ணாவின் அரசு

எம்.ஜி.ஆருடைய கட்சி 1977இல் வெற்றி பெற்று அவர் 1987 வரை பத்தாண்டுகள் அவர் முதல்வராக இருந்தபோதும் எம்.ஜி.ஆர் தன்னுடைய அரசை அண்ணாவின் அரசு என்று தான் குறிப்பிட்டாரே தவிர என்னுடைய அரசு என்று குறிப்பிட்டது கிடையாது. தன்னுடைய கட்சி அண்ணாவின் திமுக தன்னுடைய அரசு அண்ணாவின் அரசு என்றே அவர் அழைத்து வந்தார். இதற்கு நேர்மாறாக ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலங்களில் 'எனது தலைமையிலான அரசு' என்றும் உங்கள் சகோதரியின் அரசு என்றும் கூறி ஜெயலலிதா தன்னை முன்னிலைப் படுத்திக் கொண்டாரே தவிர எம்.ஜி.ஆரையோ, அண்ணாவையோ முன்னிலைப்படுத்தவில்லை.

இரசிகர் பதிவு செய்திருந்த அண்ணாதிமுக

எம்.ஜி.ஆர் ஏற்கனவே அனகாபுத்தூர் ராமலிங்கம் பதிவு செய்திருந்த அண்ணா திமுக என்ற பெயருடைய கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அந்த கட்சியைத் தனதாக்கிக் கொண்டார். எம்.ஜி.ஆர் தன்னுடைய இரசிகர் ஒருவர் ஆரம்பித்திருந்த கட்சியில் தன்னையும் இணைத்துக் கொண்டார். எம்.ஜி.ஆர் இரசிகர்கள் அன்னாதிமுக கட்சியின் தொண்டர்கள் ஆக மாறிவிட்டனர். ரசிகைகளும் அண்ணாதிமுகவில் உறுப்பினர்கள் ஆயினர். ஆண்களும்

பெண்களும் இக் கட்சியை வளர்ப்பது தங்களுடைய முதன்மையான பணி என்ற உறுதியான எண்ணம் கொண்டு செயல்பட்டனர்.


வத்தலக்குண்டு ஆறுமுகம் குத்தி கொலை

அண்ணா திமுக பொதுக் கூட்டங்கள் ஆங்காங்கே கிராமங்களிலும் நகரங்களிலும் நடைபெறத் தொடங்கின. அவ்வாறு பொதுக் கூட்டங்கள் நடத்தும் போது அதற்கு பல்வேறு வகையில் காவல்துறையினரை கொண்டும் தொழில்முறை ரவுடிகளை கொண்டும் திமுக அரசு இடையூறு ஏற்படுத்தியது. திமுக அரசு மதுரைக்கு அருகில் உள்ள வத்தலகுண்டு என்ற கிராமத்தில் ஆறுமுகம் என்ற ஒரு தொண்டரை அவர் கூட்டம் முடித்துவிட்டு நிர்வாகிகளோடு பேசிக் கொண்டு வரும் சமயத்தில் திமுகவினர் அவரை வீண் வம்புக்கிழுத்து தெரு விளக்கை அணைத்துவிட்டு கத்தியால் குத்திக் கொன்று விட்டனர். அவர் சாகும் போது அவருடைய மனைவி நிறை கர்ப்பிணியாக இருந்தார். எம்.ஜி.ஆர் அவருடைய அழுகையை பார்த்து தானும் கண்ணீர் விட்டு அழுதார். அந்த குடும்பத்தை பார்த்துக் கொள்வது தன்னுடைய பொறுப்பு என்ற ஆறுமுகத்தின் தாயாரிடம் அவர் உறுதி அளித்தார். இது போல மற்ற ஊர்களிலும் இரசிகர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆட்பட்டனர்.

எலுமிச்சம்பழ மாலை

எம்.ஜி.ஆர் அண்ணா திமுக ஆரம்பித்ததும் தங்கள் தொகுதி திமுக எம்எல்ஏ மீது தங்களுக்கு இருந்த நம்பிக்கை போய்விட்டது என்ற மக்களின் எண்ணத்தை வலியுறுத்தும் வகையில் ஒரு மகஜர் எழுதி அவர்களிடம் கொண்டு போய் கொடுங்கள் என்று தன் கட்சியினருக்குத் தெரிவித்தார். அதற்கு கருணாநிதி எம்.ஜி.ஆருக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்றார்.

சைதாப்பேட்டையில் கருணாநிதி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது சைதை துரைசாமி அவர்கள் கருணாநிதியை மேடையில் சந்தித்து அவருக்கு எலுமிச்சம்பழ மாலை



அணிவித்தார். அவர் கையில் ஒரு எலுமிச்சம் பழத்தை கொடுத்து நன்றாக தலையில் தேய்த்து குளியுங்கள் பித்தம் தெளியும் என்றார். தனது தலைவன் எம்.ஜி.ஆருக்கு பைத்தியம் என்று சொல்லிய கருணாநிதிக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்த சைதையார் ஒரு எலுமிச்சம்பழ மாலையையே அணிவித்தார். முதலில் ஏதோ தனக்கு மாலை அணிவிப்பதாக நினைத்து மகிழ்ந்து போய்

இருந்த கருணாநிதி கையில் எலுமிச்சம் கனியை கொடுத்ததும் கோபப்பட்டார்.

தற்கொலைப்படையை சேர்ந்த சைதையார்

திமுகவினர் சைதை துரைசாமியைப் பிடித்து அடித்து உதைத்து போலீசிடம் ஒப்படைத்தனர். போலீஸும் கருணாநிதியை கொலை செய்ய வந்தார் என்று அவர் மீது கொலைப் பழி சுமத்தி விடிய விடிய அடித்தனர். இந்த தகவல் எம்.ஜி.ஆருக்குக் கிட்டியதும் அவர் மறுநாள் காலையில் சைதாப்பேட்டை காவல் நிலையத்திற்குத் தொடர்பு கொண்டு ‘என்னுடைய தொண்டன் துரைசாமி உயிரோடு இருக்கிறானா இல்லை அடித்துக் கொன்று விட்டீர்களா? நான் அவனை உடனே பார்க்க வேண்டும் என்னுடைய வக்கீல் அங்கு வருவார்’ என்றார். அதன் பிறகு அவர்கள் அவரை வக்கீலிடம் ஒப்படைத்தனர். பிறகு எம்.ஜி.ஆர் தன்னுடைய அலுவலகத்திலேயே அவரை வைத்து இருந்து அவருடைய வழக்கை வெற்றிகரமாக நடத்தி முடித்த பிறகுதான் அவரை சுதந்திரமாக வெளியில் நடமாட அனுமதித்தார். இதனால் எம்.ஜி.ஆர் சைதை துரைசாமி அவர்களை அண்ணா திமுக வின் முதல் தியாகி என்று அழைத்தார். சைதை துரைசாமி அவர்களும் இன்னும் சிலரும் தம் கட்சியையும் தலைவரையும் காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு தற்கொலைப் படையை உருவாக்கினர்.

இரசிகனைப் பாராட்டிய ஜெயலலிதாவின் முதல் கூட்டம்

சைதை துரைசாமியின் விசுவாசத்தை புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர் 1982 இல் ஜெயலலிதாவை கட்சியில் அறிமுகப்படுத்தியதும் அவர் பேசுவதற்காக சைதாப்பேட்டையில் முதல் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். அந்த கூட்டத்தில் சைதையாரின் தியாகத்தைப் பாராட்டி ஜெயலலிதாவைப் பேசச் செய்தார். தனது தலைவனுக்காக தனது உயிருக்கு ஆபத்து வரும் என்பதையும் தெரிந்துகொண்டே கருணாநிதியை அவரது கட்சி மேடையில் சந்திக்கத் தயாரான’ தனது தீவிர இரசிகனின் கட்சித் தொண்டனின் அருமை பெருமையை ஜெயலலிதா



உணர வேண்டும் என்ற நோக்கில் எம்.ஜி.ஆர் அவரது முதல் கூட்டத்தை தன இரசிகனைப் பாராட்டும் கூட்டமாக ஏற்பாடு செய்தார்.

எம்.ஜி.ஆர் காவல் நிலையத்திற்கு தொடர்பு கொள்ளாமல் இருந்திருந்தால் அவரை காவல் நிலையத்தில் அடித்துக் கொண்டிருப்பார்கள். அவ்வாறு செய்வதுதான் அவர்களுடைய நோக்கமாகவும் அவர்களுக்கு இடப்பட்ட ரகசிய கட்டளையாகவும் இருந்தது. இவ்வாறு ஆங்காங்கே துணிச்சலுடன் செயல்படும் எம்.ஜி.ஆர் இரசிகர்களை அடித்துக் கொல்வதும், எம்.ஜி.ஆர் பச்சை குத்தி இருக்கும் அவர்களுடைய நெஞ்சின் மீது எட்டி எட்டி மிதிப்பதும் போலீசாரின் பொழுதுபோக்காக இருந்தது.

எம்.ஜி.ஆர் இரசிகர்களின் அபரிமிதமான அன்பையும் பற்றையும் பாசத்தையும், தன் மீது உயிரையே வைத்திருக்கும் நிலையையும் கண்டு தனக்கு இருக்கும் பொறுப்புணர்ச்சியை உணர்ந்தார். அவர்களுக்கு மிகப் பல நன்மைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதை உணர்ந்து கொண்டார். தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராகி தனக்காக உடல் பொருள் ஆவி என அனைத்தையும் தத்தம் செய்ய தயாராக இருக்கும் இரசிகர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் தன்னாலான பல நன்மைகளைச் செய்ய

வேண்டும் பல நல்லத் திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

உலகம் சுற்றும் வாலிபன் எப்போ ரிலீசாகும்?

அண்ணாதிமுக கட்சி ஆரம்பித்த ஆறே மாதத்தில் திண்டுக்கல்லில் இடைத்தேர்தல் வந்தது. அப்போது ஐந்து கட்சிகள் களத்தில் நின்றன. அதில் ஆறு மாதமான தளர்நடையிடும் அண்ணா திமுக போட்டியிட்டது. சுயேசையாக இரட்டை இலை என்ற சின்னத்தைப் பெற்று களத்தில் இறங்கியது ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் மலையளவு வெற்றியைப் பெற்றது. மொத்த வாக்காளர்கள் 6 லட்சம் பேரில் 2 லட்சம் பேர் அண்ணா திமுகவுக்கு வாக்களித்திருந்தனர். இத்தகைய மாபெரும் வெற்றியை எம்.ஜி.ஆர் கூட எதிர்பார்த்திருக்க மாட்டார். இந்த வெற்றி மற்ற அனைத்து கட்சியினருக்கும் மிகப்பெரிய கலக்கத்தை ஏற்படுத்தியது. பெரிய கட்சிகள் டெபாசிட் இழந்தன. அண்ணாதிமுக வாக்காளர் மாயத்தேவர். ஏறத்தாழ இரண்டு இலட்சம் வாக்குகளை பெற்றிருந்தார்.

திண்டுக்கல் தேர்தல் பணியில் ஈடுபட்ட எம்.ஜி.ஆர் இரசிகர்களை அடித்து உதைக்க பரோலில் இருந்து ஆயுள் தண்டனை கைதிகளை திமுக வரவழைத்து திமுக தொண்டர்களோடு உலவ விட்டிருந்தது. இனி சத்தம்



எழாதபடி இந்த இரசிகர்களுக்கு மரண அடி கொடுக்க வேண்டும் என்பது திமுகவின் திட்டமாக இருந்தது. தொழில்முறை ரவுடிகளை வைத்தும் எம்.ஜி.ஆர் இரசிகர்களை அடித்து உதைத்தனர். இத்தனை அடியும் உதையும் வாங்கி பெற்றும் கூட இரசிகர்கள் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. அவர்கள் எம்.ஜி.ஆருக்காக தங்கள் உயிரைக் கொடுக்க தயாராகவே இருந்தனர். சமயநல்லூரில் எம்.ஜி.ஆர் பொதுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது கூட்டத்தில் உட்கார்ந்திருந்த ஒரு இரசிகர் 'உலகம் சுற்றும் வாலிபன் படம் எப்போது ரிலீஸ் ஆகும்' என்று கேட்டார். அதற்கு எம்.ஜி.ஆர் 'படம் ரிலீஸ் ஆனால் நீங்கள் தேர்தல் பணிகளை செய்வீர்களா? படம் பார்ப்பீர்களா?' என்று கேட்டார். 'நாங்கள் படமும் பார்ப்போம் தேர்தல் பணிகளையும் செய்வோம்' என்று கூறினார். அந்த இரசிகர் எம்.ஜி.ஆர் 'பதினோராம் தேதி வெளியாகும்' என்று தேதியை பொதுக் கூட்டத்தில் அறிவித்தார். அதைப்போலவே மே 11ஆம் தேதி உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளிவந்தது.

நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்

உலகம் சுற்றும் வாலிபன் படத்தை வெளியிடக் கூடாது என்பதற்காக மிகப் பல நெருக்கடிகளை திமுக எம்.ஜி.ஆருக்கு கொடுத்து வந்தது. இந்த படத்தின் பிலிம் சுருள் எரிந்து விட்டது போல எம்.ஜி.ஆர் பாவனை காட்டி விட்டு வழக்கறிஞர் வி. பி ராமன் மூலமாக பம்பாயில் உள்ள பிரபல ஸ்டுடியோவிலும் தெலுங்கு பட அதிபர் ஒருவருடைய துணையுடன் ஹைதராபாத்தில் உள்ள ஸ்டூடியோவிலும் பிரிண்ட்டுகள் போடுவதற்கு ரகசிய ஏற்பாடு செய்தார். கட்டை வண்டியிலும் மாட்டு வண்டியிலும் படப்பெட்டிகளை திரையரங்குகளுக்கு கொண்டு வந்து சேர்த்தார். ரயிலிலும் பேருந்திலும் படப்பெட்டி வரும் என்று காத்திருந்த திமுகவினர் ஏமாந்து போயினர். படத்துக்குள் அரசியலை இல்லாவிட்டாலும் படத்தின் முதல் பாடலான

“நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்,

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்,

நீதிக்கு இது ஒரு போராட்டம்,

இதை நிச்சயம் உலகம் பாராட்டும்.

வல்லோர்கள் சுரண்டும் பொல்லாத கொடுமை,

இல்லாமல் மாறும் பொருள் தேடி,

அன்று இல்லாமை நீங்கி எல்லோரும் வாழ,

இந்நாட்டில் மலரும் சமநீதி.

நம்மை ஏய்ப்பவர் கையில் அதிகாரம் ,

இருந்திடும் என்னும் கதை மாறும்,

ஆற்றலும் அறிவும் நன்மைகள் ஓங்க,

இயற்கை தந்த பரிசாகும்,

இதில் நாட்டினைக்கெடுத்து நன்மைகள் அழிக்க,

நினைத்தால் எவர்க்கும் அழிவாகும்.

நல்லதை வளர்ப்பது அறிவாற்றல்,

அல்லதை நினைப்பது அழிவாற்றல்"

எனபது அண்ணா திமுகவின் பிரச்சாரப் பாடலாக அமைந்தது.

இரசிகர் தவிர மற்றவர்களின் ஆதரவு

உலகம் சுற்றும் வாலிபன் படத்தை வெற்றிகரமாக வெளியிட்டதில் எம்.ஜி.ஆரின் செயல்திறம் வெளிப்பட்டது. மக்கள் அவரை எதிர்க்க இனி ஒருவரும் கிடையாது. அவர் எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்து வெற்றி காண்பார் என்ற பேருண்மையை உணர்ந்து

கொண்டனர். எம்.ஜி.ஆரின் செயல் திறத்தை உணர்ந்த கட்சி சார்பற்ற பொதுமக்களும் குறிப்பாகப் பெண்களும் பழைய காங்கிரஸ்காரர்கள், கம்யுனிஸ்டுகள் என மற்ற கட்சியினரும் அண்ணாதிமுக ஆதரவாளர்களாக மாறினர். எம்.ஜி.ஆருக்கு ஆதரவு பெருகியது. அதற்கு அடுத்த பத்து நாட்களில் மே 21 அன்று வந்த திண்டுக்கல் இடைத்தேர்தலில் பொதுமக்கள் ஆதரவு எம்.ஜி.ஆருக்கு மிகப்பெரிய வெற்றியை பெற்றுத் தந்தது.

நிறைவு

எம்.ஜி.ஆரின் அண்ணா திமுக கட்சியை அவருடைய இரசிகர்களால் தொடங்கப்பட்டு இன்றைக்கும் அவருடைய இரசிகர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எம்.ஜி.ஆர் இறந்த பிறகும் அவருடைய இறப்புக்காக வருந்தி அவருடைய கட்சிக்கு ஓட்டுப் போடாமல் யாரும் இருந்து விடுவது கிடையாது. அவருடைய கட்சியை தங்களுடைய கட்சியாக நினைத்து இன்றைக்கும் இரட்டை இலைக்கு வாக்கு அளித்து அவருடைய கட்சியை உயிர்ப்போடு இரசிகர்களும் இரசிகர்களின் வாரிசுகளும் வைத்து இருக்கின்றனர் என்பதே மறுக்க முடியாத உண்மை.



2. தலைவர் எம்.ஜி.ஆரின் தனிப்பண்பு

““சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்

வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் நித்தம்

நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்

கொடையும் பிறவிக் குணம்”

என்றார் அவ்வையார். இப்பாடலின்படி எம்.ஜி.ஆருக்கு கொடைப்பண்பு அவருக்குப் பிறவிப் பண்பாக அமைந்தது. இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 15 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய ஆய்வு ஒன்றில் பிறர் மீது இரக்கப்படுவதும் உதவுவதும் மரபியல் காரணமாகவே அமைகின்றது என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட்டது. வாய்ப்பு மற்றும் சூழல் காரணமாக மட்டும் இரக்க குணம் ஒருவருக்கு உண்டாவதில்லை. ஏழைகளுக்கு இரங்கும் பண்பும் உதவும் மனமும் பிறவிக்குணமாகவே அமைகின்றது என்று 46,000 பேரிடம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டது. இதுவே இவ்வுலகில் நடத்தப்பட்ட மிகப்பெரிய மரபியல் ஆராய்ச்சி ஆகும். 23 and me என்ற மரபியல் நிறுவனம் இந்த ஆய்வை நிகழ்த்தி empathy quotient IQ என்பதைக் கண்டுபிடித்தது. இங்கிலாந்தின் கண்டுபிடிப்பும் அவ்வையாரும் எடுத்துக் கூறியபடி எம்.ஜி.ஆருக்கு அமைந்திருந்த இரக்க குணம் அவருக்குப் பிறவிப் பண்பாக அமைந்தது.

லாகவ கௌரவ நியாயம்

எம்.ஜி.ஆருக்கும் அவருடைய ரசிகர்களுக்கும் இடையிலான தொடர்பு தாய் பிள்ளை உறவைப் போல அன்பும் பண்பும் பாதுகாப்பும் நிறைந்த உறவாக இருந்தது. சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் பொருட்டு இந்திய விஞ்ஞானி ஆரியபட்டர் ‘லாகவ கௌரவ நியாயம்’ என்று ஓர் அரிய கருத்தை எடுத்துரைத்தார். லாகவம் என்றால் எளிதானது, கௌரவம் என்றால் உயர்வானது என்பது பொருள் இந்த இரண்டு சொற்களும் பூமியையும் சூரியனையும் குறித்தன. அதாவது பூமி சூரியனைச் சுற்றி வருகிறது இதுவே நியாயம் என்ற கருத்தை இந்திய விஞ்ஞானி ஆரியபட்டர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே லாகவ கௌரவ நியாயம் என்ற பெயரில் எடுத்துரைத்தார்.

லாகவம் என்பது இலகுவான பூமியையும் கௌரவம் என்பது குருவாக விளங்கும் சூரியனையும் குறித்தது. பூமி சூரியனைச் சுற்றிவரும் நியாயத்தையும் நியதியையும் ஆரியபட்டர் லாகவ கௌரவ நியாயம் என விளக்கினார். இதே கருத்தை நாம் எம்.ஜி.ஆருக்கும் அவரது ரசிகர்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். ரசிகர்களை பூமியாகவும் எம்.ஜி.ஆரை சூரியனாகவும் கொண்டால் இரசிகர்கள் எம்.ஜி.ஆர். என்ற சூரியனை இன்றளவும் இவ்வுலகம்



உள்ளளவும் சுற்றிக் கொண்டு வந்து அவரிடமிருந்து தன்னம்பிக்கை என்னும் ஒளியைப் பெற்று வருகின்றனர். எம்.ஜி.ஆருக்கும் அவருடைய ரசிகர்களுக்குமான உறவு நெருக்கமானதாகவும் நீடித்ததாகவும் பல பத்தாண்டுகள் கடந்தும் நிலைத்து நிற்பதாகவும் விளங்குகின்றது.

சிறப்பான தலைமைப் பண்பு

எம்.ஜி.ஆர். நாடு போற்றும் நல்ல தலைவராக விளங்கியதற்கு பல தலைமைப் பண்புகள் அவரிடம் இருந்ததை முன்பு விளக்கியிருக்கிறேன். அப்பண்புகளில் குறிக்கப்படாத வேறொரு சிறப்பான பண்பு மீள் நெகிழ்வுத் தன்மை என்பதாகும். மீள் நெகிழ்வுத்தன்மை என்றால் *BACK TO POSITION* என்பதாகும் . அதாவது ஒரு பொருள் தன் நிலை குலைந்து விட்டாலும் மீண்டும் அது பழையபடி தன் நிலையை அடைய வேண்டும், இதுவே பேக் டு பொசிஷன் எனப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் *resilience* என்பர். வாழ்க்கையில் எல்லோருக்கும் எதிர்ப்பும் அதனால் நிலை குலைதலும் ஏற்படலாம். ஆனால் அந்த நிலை குலைதலில் இருந்து மீண்டும் சரியாகி பழைய நிலைமையை அடைந்துவிட வேண்டும் அவ்வாறு அடைவது தலைவருக்கு அழகாகும். எதிர்ப்புகளால் நிலைகுலைந்து போய் விட்டால் அவர் தலைவராக நிற்க இயலாது. எம்.ஜி.ஆரின் தலைமைப் பண்புக்கு சிறப்பான ஒரு காரணம் அவருடைய மீள் நெகிழ்வுத்தன்மை ஆகும்.

நாடோடி மன்னன் படம் வெற்றி மீது வெற்றி குவித்துக் கொண்டிருக்கும் வேளையில் இடிந்த கோபுரம் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். மீது குண்டு கருப்பையா விழுந்ததால் அவரது கால் எலும்பு முறிந்தது. உடனே அவரை சென்னைக்கு அழைத்து வந்து எலும்பு நோய் நிபுணர் டாக்டர் நடராஜனை அழைத்து சிகிச்சை செய்தனர். அவர் எம்.ஜி.ஆரிடம் ‘வேறு நாட்டு சிகிச்சை எதுவும் செய்யக் கூடாது’ என்ற உறுதிமொழி வாங்கிக் கொண்டு முறையாக ஆங்கில மருத்துவ முறையில் சிகிச்சை அளித்து அவர் கால் எலும்பை ஒன்று சேர்த்து வைத்தார். பின்பு அந்த எலும்பு முழு



பலத்தை பெறுவதற்கு நீச்சல் பழக வேண்டும்; எம்.ஜி.ஆருக்கு நீச்சல் பயிற்சி தேவை என்றார்.

எம்.ஜி.ஆர். மருத்துவரின் ஆலோசனைக்கு மதிப்பளித்து தன்னுடைய தேக ஆரோக்கியத்தையும் தன் தொழிலுக்கு தேவையான தகுதியையும் உணர்ந்து உடனே தன் வீட்டின் பின்புறத்தில் ஒரு நீச்சல் குளத்தை கட்டினார். தினமும் அந்த நீச்சல் குளத்தில் நீச்சல் பயிற்சி மேற்கொண்டார். இதனால் அவருடைய கால் எலும்பு முன்பு போலவே பரிபூரணமாகக் குணமாகி முழு பலத்தை பெற்றது.

கால் பலம் அடைந்ததும், ‘தாய் மகளுக்குக் கட்டிய தாலி’ படப்பிடிப்பில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர். முதல் காட்சியிலேயே காலை உதைத்துக் காண்பித்து தன் கால் பழைய பலத்தைப் பெற்றுள்ளதை நிரூபித்தார். அதுவரை ‘அவரால் இனி திரும்பவும் நடிக்க முடியாது. இனி அவர் நடிக்க வர மாட்டார்’ என்று எதிர் அணியினர் செய்த பொய் பிரச்சாரத்தால் மக்களிடையே ஓர் அச்சம் நிலவியது. எதிரணியினரும் எம்.ஜி.ஆர். கால் உடைந்து விட்டதால் இனி நொண்டி நொண்டி நடக்க வேண்டியிருக்கும். எனவே அவரால் நடிக்க இயலாது என்று மகிழ்ச்சியாகப் பேசி வந்தனர். ஆனால் எம்.ஜி.ஆருக்கு இருந்த *resilience* மீள்

நெகிழ்வுத்தன்மை அவரை பழையபடி பலத்துடன் செயல்பட வைத்தது அதன் பிறகு வந்த அனைத்துப் படங்களிலும் சண்டைக்காட்சிகளில் மிகச் சிறப்பாக நடித்து வந்தார்.

தலைமைப் பண்பான மீள் நெகிழ்வுத் தன்மைக்கு மற்றொரு சான்றையும் காட்டலாம். ஜனவரி 12ஆம் தேதி எம்.ஜி.ஆர். பரங்கிமலை தொகுதி பிரச்சாரத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தபோது அவரைச் சந்திக்க வந்த தயாரிப்பாளர் வாசு மற்றும் நடிகர் எம் ஆர் ராதா, எம்.ஜி.ஆருடன் பேசிக் கொண்டிருந்த போது எம்.ஜி.ஆரை., எம் ஆர் ராதா தன்னிடம் இருந்த துப்பாக்கியால் சுட்டு விட்டார். இதை அறியாது இருந்த எம்.ஜி.ஆர். காது பக்கம் சுரீரென்று வலிக்கவும் தொட்டுப் பார்த்து இரத்தம் வருவது அறிந்தவுடன் ‘என்ன அண்ணே இப்படி செஞ்சுட்டீங்க’ என்று கேட்டார். உடனே எம் ஆர் ராதா தன்னிடம் இருந்த துப்பாக்கியைக் கொண்டு தன் நெற்றிப் பொட்டில் வைத்து தானே சுட்டுக் கொண்டார் இருவரும் ராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

எம்.ஜி.ஆருக்குத் தொண்டைப்பகுதியில் குண்டு உள்ளே புதைந்து இருந்தது. அதை அறுவை சிகிச்சை செய்து எடுக்க



இயலவில்லை எடுத்தால் பிடரியில் இருக்கும் ஒரு நரம்பு பாதிக்கப்படலாம் என்று தோன்றியதால் மருத்துவர்கள் அந்தக் குண்டுத் துகள்களை அப்படியே விட்டுவிட்டனர். இந்தக் குண்டு துணுக்கு எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு ஒருநாள் அவர் இருமும்போது வெளியே வந்துவிட்டது.

குண்டு பாய்ந்து இருந்தபோது நடந்த அறுவை சிகிச்சையினால் அவருக்கு நாக்கை முழுமையாக மடக்க முடியவில்லை. நாக்கு முழுமையாக மடிக்க இயலாததால் அவரால் வளை நா ஒலிகளை [RETROFLEX] உச்சரிக்க இயலவில்லை. டா ரா லா போன்ற ஒலிகள் உச்சரிக்கை இயலாததால் இனிப் படங்களில் நடிக்கும்போது அவரால் வசனங்களைத் தெளிவாகப் பேச இயலாது என்ற உண்மை புலப்பட்டது. சிலர் அவருக்குப் பின்னணி குரல் கொடுக்க ஆட்களை நியமிக்கலாம் என்றனர். எம்.ஜி.ஆருக்குப் பின்னணி குரல் கொடுப்பதில் விருப்பமில்லை. ‘நான் இதே குரலில் பேசுகிறேன் ரசிகர்கள் என்னை ஏற்றுக் கொண்டால் நான் படத்தில் நடிக்கிறேன். இல்லை என்றால் திரையுலகில் இருந்து விலகிக் கொள்கிறேன்’ என்று கூறிவிட்டு அதே உடைந்த குரலில் அடுத்து வெளிவந்த காவல்காரன், குடியிருந்த கோயில் படங்களில் பேசினார். மக்கள் அவரது குரலை ஒரு பொருட்டாக கருதவில்லை. அவர் உயிர் பிழைத்து வந்ததையே அவர்கள் பெரிதாக மதித்தனர்.

எம்.ஜி.ஆர். சிகிச்சைக்காக இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் அவர்களது கட்சிக் கொள்கைகளையும் மீறி மொட்டை எடுப்பதும், அலகு குத்துவதும் மூட நம்பிக்கை சார்ந்தது என்ற கருத்துக்களையெல்லாம் விலக்கித் தள்ளிவிட்டு எம்.ஜி.ஆர். உயிர் பிழைத்து வரவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பல பிரார்த்தனைகளை மேற்கொண்டனர். திருப்பதி சென்று மொட்டை அடித்து விட்டு பலர் பிரசாதங்களை இராயப்பேட்டை மருத்துவமனைக்கு வந்து அங்கு எம்.ஜி.ஆருக்கு அவற்றைச் சேர்ப்பிக்குமாறு கொடுத்துவிட்டுச் சென்றனர். அந்த நாட்களில்

இராயப்பேட்டை மருத்துவமனையில் மொட்டைத் தலையுடன் ஏராளமான மக்கள் காணப்பட்டனர்.

எம்.ஜி.ஆருக்கு அவருடைய குரல் பாதிக்கப்பட்டாலும் அதே குரலோடு மீண்டும் ரசிகர்களை சந்திக்கும் துணிச்சல் இருந்தது. ரசிகர்களும் தாயுள்ளத்தோடு அவருடைய குரலைப் பொருட்படுத்தாமல் அவர் உயிர் பிழைத்து வந்து மீண்டும் நடித்து தங்களோடு சேர்ந்து வாழ்வதையே பெரிதாகக் கொண்டாடினர். நாடோடி மன்னன் படத்தில் நாடோடியும், மன்னனும் பேசிக்கொண்டிருக்கும் காட்சியில் மன்னர், நாடோடியைப் பார்த்து மன்னருக்கு தானே ஆள தெரியும் என்பார், அதை தொடர்ந்து நாடோடி பேசும் வசனத்தில் ‘நீங்கள் மாளிகையில் இருந்து மக்களைப் பார்க்கிறீர்கள். நான் மக்களோடு இருந்து மாளிகையைப் பார்க்கிறேன்’’ என்பார்.

எம்.ஜி.ஆரின் இந்த வசனத்தை மக்கள் அவருடைய வாக்காக முழுமனதுடன் ஏற்றுக் கொண்டனர். எம்.ஜி.ஆர். தங்களில் ஒருவராக இருக்கிறார். ஏழை மக்களோடு மக்களாக வாழ்கிறார் என உணர்ந்து மகிழ்ந்தனர். இதனால் எம்.ஜி.ஆர். உயிர் பிழைத்து வந்து திரைப்படங்களில் நடித்து மக்களை மகிழ்வித்து அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டிய போது அவருடைய மீள் நெகிழ்வுத்தன்மை சிறப்பாக வெளிப்பட்டது.



அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் தோல்வி வரலாம். காமராஜர், அண்ணா ஜெயலலிதா போன்றோர் கூட தேர்தல்களில் தோல்வியை சந்தித்துள்ளனர். கருணாநிதி சைதாப்பேட்டையில் தோல்வி என்பது அறிவிக்கப்பட்ட பிறகு வேறு சில காரணங்களுக்காக அவர் மீண்டும் வெற்றி பெற்றதாகக் அறிவிக்கப்பட்டார். ஆனால் எம்.ஜி.ஆருக்கு இது போன்ற சாதாரண தோல்விகள் வரவில்லை. அவருக்கு வந்த துன்பங்கள் அனைத்தும் உயிருக்கு ஆபத்தான அச்சுறுத்தல்கள் ஆகும். அவற்றில் இருந்து மக்கள் ஆதரவாலும் பிரார்த்தனையாலும் நல்லெண்ணத்தாலும் மீண்டு வந்தார். அவர் தர்மம் தலைகாக்கும் படத்தில்

தர்மம் தலை காக்கும்

தக்க சமயத்தில் உயிர் காக்கும்

எனப் பாடியபடி அவர் செய்த தர்மம் அவரை ஒவ்வொரு முறையும் காப்பற்றியது என பொது மக்களும் அவரது ரசிகர்களும் நம்பி அவரது தயாள குணத்தைப் பலவாறு பாராட்டினர்.

எம்.ஜி.ஆர். தனது வாழ்க்கையில் எந்தத் துன்பம் வந்தாலும், எதிர்ப்பு வந்தாலும் அதைக் கண்டு துவண்டு விடுவதில்லை. எதிர்த்து நின்று சவால்களைச் சந்தித்து அவற்றைப் புறந்தள்ளி மீண்டும் பழைய நிலையை விட உயர்ந்த நிலைக்கு வந்து விடுவதே அவருடைய வாழ்க்கையில் வாடிக்கையாக இருந்தது. ஆக ஒரு மிகச்சிறந்த தலைவருக்குச் சொல்லப்பட்ட மீள் நெகிழ்வுத்தன்மை என்ற பண்பு எம்.ஜி.ஆரிடம் நிரந்தரமாகக் குடியேறி இருந்தது. இதற்கு முக்கிய காரணம் சிறு வயது முதல் அவர் பல கஷ்டங்களை அனுபவித்த போது அவற்றிற்கான காரணங்களையும் அறிந்து வைத்திருந்தார். சில நீக்குப் போக்குகளைக் கற்று வைத்திருந்தார். பல படிப்பினைகளை அவர் அறிந்து வைத்திருந்தார். அவற்றில் முக்கியமானது அனைவரிடமும் அன்பாகப் பழக வேண்டும் ஆதரவாக இருக்க வேண்டும் எதிரிகளிடமும் இனிமையாகப் பழக வேண்டும் என்ற நல்ல படிப்பினைகள் அவருக்கு சிறு வயது முதல் இருந்து வந்ததால் அவரால் எப்போதும் ஆக்கப்

பூர்வமாகச் சிந்தித்து செயல்பட முடிந்தது. அவர் இருக்குமிடத்தில் எப்போதும் ஒரு ஆக்க சக்தியும் அதிர்வும் *[POSITIVE ENERGY AND VIBRATION]* இருந்ததை மக்கள் உணர்ந்தனர். அவரது படங்களிலும் ஒத்துக் கூட்டங்களிலும் இதே ஆக்க சக்தியும் அதிர்வும் வெளிப்பட்டன.

ஒரு ரப்பர் பந்தை எவ்வளவு அழுத்தம் கொடுத்து அழுத்தினாலும் நம் கையை எடுத்ததும் அது பழைய நிலைக்கு வந்துவிடும். இதையே *resilience* என்ற மீள் நெகிழ்வு தன்மை என்கிறோம். அதுபோலவே எம்.ஜி.ஆருக்கு இயற்கையும் எதிரிகளும் பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்த போதும் அவர் அவற்றிலிருந்து மீண்டு வந்து விட்டார். 1979இல் அவர் இந்திரா காந்தி அம்மையார் தஞ்சையில் நின்று போட்டியிடுவதற்கு ஆதரவாக நடந்துகொள்ளவில்லை என்பதனால் அம்மையாருக்கு எம்.ஜி.ஆர். மீது மன வருத்தம் ஏற்பட்டது. அப்போது நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மத்தியில் ஆட்சி பொறுப்பு ஏற்றதும் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்திருந்த திமுகவின் நெருக்கடியால் தமிழகத்தில் அண்ணா திமுக ஆட்சி கலைக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அண்ணா திமுக கூட்டணிக்கு ஆதரவாக வாக்கு அளிக்காததால் மக்கள்



அண்ணா திமுகவின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என்று திமுகவினர் பொய்ப் பிரச்சாரம் செய்தனர். மத்தியில் இருந்த தன் கூட்டணிக் கட்சியான இந்திராகாந்தி காங்கிரசுக்கும் அழுத்தம் கொடுத்து இங்கு ஆட்சியைக்களைக்கும்படி கேட்டுக்கொண்டனர். இதனால் இங்கு ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது அண்ணா திமுகவில் இருந்த பலர் இனி இக்கட்சி செயல்படாது என்று நினைத்து மீண்டும் திமுகவுக்குக் கட்சி மாறினர். ஆனால் மக்கள் எம்.ஜி.ஆரின் பக்கம் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ளவில்லை. அவரை ஒரு சினிமா நடிகராக மட்டுமே கருதியதால் அரசியல்வாதிகள் திமுகவுக்குத் திரும்புவதைக் கண்டதும் திமுக மீண்டும் புத்துணர்ச்சி பெற்று தன்னுடைய வெற்றி குறித்து கனவு கண்டது. தமிழகத்தில் கவர்னர் ஆட்சி வந்ததும் மத்திய அரசு எம்.ஜி.ஆரை பதவியிறக்கம் செய்ததற்காக மக்கள் மிகவும் வருத்தப்பட்டனர்.

அடுத்து சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு பிரச்சாரங்கள் தொடங்கியதும் பொதுக்கூட்டங்களில் எம்.ஜி.ஆர். மக்களைப் பார்த்து 'நான் என்ன தவறு செய்தேன்/ நீங்கள் ஏன் எனது கூட்டணிக்கு வாக்களிக்க வில்லை?. நீங்கள் எனது கூட்டணிக்கு வாக்களிக்காததால் உங்கள் ஆதரவு எனக்கு இல்லை என்று எதிர்க்கட்சியினர் பேசுகின்றார்களே' என்று கேட்டார். மத்தியில் காங்கிரஸுக்கு ஆதரவளித்த தமிழக மக்கள் மாநிலத்தில் அண்ணா திமுகவுக்கு தங்களது முழு ஆதரவை அளித்து தனிப்பெரும்பான்மையுடன் எம்.ஜி.ஆரை மீண்டும் முதல்வர் நாற்காலியில் அமர்த்தினர். திமுக கலங்கியது. கட்சி மாறியவர்கள் மீண்டும் அண்ணா திமுகவுக்குத் தாவினர்.

எம்.ஜி.ஆர். ராமராஜ்யம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்று அனைவரும் பாராட்டி வந்த சமயத்தில் மத்திய அரசு அண்ணா திமுக ஆட்சியை கலைத்தது. அவ்வாறு கலைக்காமல் இருந்திருந்தால் மக்கள் பல நன்மைகளை அடைந்திருக்க முடியும். ஊழலுக்கு தமிழகத்தில் இடமில்லாமல் போயிருக்கும். நல்லவனுக்கு சோதனையா என்று மக்கள் கலங்கிய வேளையில் எம்.ஜி.ஆர்.

துணிச்சலுடன் அவர்களைச் சந்தித்து மக்களுடன் தனக்குண்டான அன்பையும் நெருக்கமான உறவையும் உறுதி செய்தார். அவர்களின் பேராதரவைப் பெற்று மீண்டும் மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். மீள் நெகிழ்வுத் தன்மை என்பது அவரும் மக்களும் ஒருவர் மீது மற்றவர் கொண்டிருந்த பரஸ்பர அன்பினாலும் நம்பிக்கையினாலும் சாத்தியமாயிற்று.

தலைமைப் பண்புக்குரிய மிக முக்கிய பண்பான மீள் நெகிழ்வுத்தன்மை என்பதை எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் மற்றொரு கட்டத்திலும் தெளிவாகக் காணலாம். 1979இல் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று முதலமைச்சரான எம்.ஜி.ஆர். திடீரென உடல் நலிவுற்றார். ஒரு நாளிதழ் 'எம்.ஜி.ஆருக்கு மூளைக் கோளாறு' என்று தலைப்புச் செய்தி வெளியிட்டது. அவருக்கு மூளையில் ரத்தக் குழாயில் ஓர் அடைப்பு ஏற்பட்டது. இத் தகவலை திமுகவுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்த காரணத்தால் அந்த நாளிதழ் சித்தப் பிரமை என்று புரிந்து கொள்ளக்கூடிய வகையில் 'மூளைக் கோளாறு' என்று செய்தி வெளியிட்டது. மூளையில் மூளைக்கு செல்லும் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்ட காரணத்தால் அவருக்கு அவர் நினைவிழந்து செயலிழந்து இருந்தார்.



எம்.ஜி.ஆருக்கு சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து சிகிச்சை தொடங்கப்பட்டது. இந்திராகாந்தி அம்மையார் உடனே அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்து எம்.ஜி.ஆரைப் பார்த்து IS THIS MGR எனக் கேட்டார். எம்.ஜி.ஆரின் வாடிய முகம் அவருக்கு வருத்தத்தை அளித்தது. அவருக்கு வேண்டிய அனைத்து மருத்துவ வசதிகளையும் உடனடியாக செய்யுங்கள் அதற்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பைத் தரும் என்று சொல்லிவிட்டு ஜானகி அம்மையாருக்கும் தமிழக மக்களுக்கும் மக்களுக்கும் ஆறுதல் சொல்லிவிட்டுச் சென்றார். அதுவே அவர் இறுதியாக எம்.ஜி.ஆரை சந்தித்ததாகும். அதன் பிறகு எம்.ஜி.ஆர். உயிர் பெற்றுத் திரும்பினார். ஆனால் இந்திரா காந்தி அம்மையார் தன் காவலரால் சுடப்பட்டு இறந்து போனார்.

1979 தேர்தலில் அண்ணா திமுகவுடன் முரண்பட்டு திமுக கூட்டணியில் இருந்த இந்திராகாந்தி 1984இல் எம்.ஜி.ஆருக்கு வேண்டிய அனைத்து மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க முன் வந்தார் என்றால் எம்.ஜி.ஆர். அவருடைய முழு அன்பைப் பெற்றிருந்தார் என்பது தெளிவாகிறது. இதற்கு அடிப்படை காரணம் ஒன்று இருந்தது 1979 இல் எம்.ஜி.ஆர். மத்திய அரசோடு இணங்கிச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் மத்திய அரசில் இருந்த ஜனதா கட்சியோடு கூட்டணி சேர்ந்து இருந்தாலும் கூட அவர் இளம் வயதில் காங்கிரஸ்காரராக இருந்த காரணத்தால் நேருவின் குடும்பத்தார் மீது அவர் மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருந்தார்.

இந்திராகாந்தி அம்மையார் மத்திய அரசைக் கைப்பற்றி பிரதம மந்திரி ஆனபிறகு தமிழ்நாட்டில் நடந்த இடைத் தேர்தல் ஒன்றில் ஏற்கெனவே அங்குக் காங்கிரஸ் கட்சி அத்தொகுதியில் வெற்றி பெற்று இருந்ததால் மீண்டும் காங்கிரஸ் கட்சியே அங்கு வெற்றி பெறுவதற்கு அண்ணா திமுக தன்னுடைய முழுப் பங்களிப்பையும் வழங்கும் என்று எம்.ஜி.ஆர். அறிவித்தார். இவ் அறிவிப்பினால் அவருக்குக் கிடைக்க இருந்த ஒரு இடம் கிடைக்காமல் போனது என்றாலும் அங்கு அண்ணா திமுக நின்று இருந்தால்

கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்கும் என்ற சூழ்நிலையிலும் கூட அவர் அந்த தொகுதியை மீண்டும் காங்கிரஸுக்கு விட்டுக் கொடுத்தார். அங்கு திமுகவினர் தனியாக நின்று தேர்தல் பிரச்சாரம் செய்து வந்தனர். அண்ணா திமுக தேர்தல் களத்தில் போட்டி இடாமலேயே காங்கிரசுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து வந்தது. காங்கிரஸ் கட்சிக்கு அதன் தொகுதியை விட்டுக்கொடுத்த எம்.ஜி.ஆரின் தாராள மனது இந்திரா காந்தி அம்மையாரை மிகவும் கவர்ந்தது. தன்னுடைய கட்சியோடு கூட்டணி வைத்துக் கொண்டு தன்னுடைய கட்சிக்காரர் வெற்றி பெறுவதற்கு உதவாத திமுக கட்சியினர் மத்தியில் தானும் போட்டியிடாமல் தன்னுடைய காங்கிரஸ் கட்சிக்கு உதவியாக தன் அண்ணா திமுக கட்சியினரைக் களத்தில் இறக்கிப் பணி செய்ய கட்டளையிட்டிருக்கும் எம்.ஜி.ஆரின் பெருந்தன்மை இந்திரா காந்தி அம்மையாரின் அபிமானத்துக்கு முக்கிய காரணமாயிற்று. இதன் பொருட்டு இந்திராகாந்தி அம்மையார் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார்.

எம்.ஜி.ஆர். தக்க தருணங்களில் தன்னுடைய நிலைப்பாட்டை அன்பை விசுவாசத்தை ஆதரவை அதற்கு உரியவர்களுக்கு உணர்த்துவதில் தவறுவதில்லை. இதனால் அவருடைய நிலைப்பாடு குறித்து மக்களும் மற்ற தலைவர்களும் தெளிவாக புரிந்து வைத்திருந்தனர். எம்.ஜி.ஆரின் விட்டுக் கொடுக்கும் பண்பு அவருடைய சிறப்பான தலைமை பண்பாககத் திகழ்ந்தது. விட்டுக் கொடுத்தவர் கேட்டுப் போவதில்லை கேட்டு போகிறவர் விட்டுக் கொடுப்பதில்லை என்ற ஆன்றோர் வாக்கு இத்தொகுதி விஷயத்தில் எம்.ஜி.ஆருக்கு இந்திரா காந்தியின் அன்பை பெற்று தந்து உண்மையாயிற்று.

1984 அக்டோபர் மாதம் அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்ட எம்.ஜி.ஆர். அங்கு மூளையில் அறுவை சிகிச்சை நடைபெற்றது. பின்பு சிறுநீரகம் செயலிழந்து போன காரணத்தினால் அவருடைய அண்ணன் மகள் லீலாவதி அவர்களின் சிறுநீரகம் எடுத்து பொருத்தப்பட்டது. உடல் பரிபூரண நலம் பெற்று எம்.ஜி.ஆர். தமிழகம் திரும்பினார். இதற்கிடையே தமிழகத்தில்

சட்டமன்றத் தேர்தல் வந்தது. எம்.ஜி.ஆர். இங்கு இல்லாத நிலையிலேயே ஜெயலலிதா கொள்கைப் பிரச்சார செயலாளராக மக்களைச் சந்தித்து எம்.ஜி.ஆருடைய பூரண உடல்நலம் பற்றி எடுத்துரைத்தார். ஆர் எம் வீரப்பன் அமெரிக்க மருத்துவமனையில் எம்.ஜி.ஆர். சாப்பிடுவது; பேப்பர் வாசிப்பது; மருத்துவர்களிடம் பேசி சிரித்துக் கொண்டிருப்பது போன்ற படங்களைக் கொண்டு வந்து மக்களிடம் திரையிட்டுக் காண்பித்து மக்களின் ஆதரவை அண்ணா திமுக பெறுவதற்கு உதவினார். எம்.ஜி.ஆர். உயிரோடு இருக்கிறார் என்பதை அறிந்து கொண்ட மக்கள் அவரை மீண்டும் முதல்வராக்கிக் கவுரவிக்க வேண்டும்; அது தங்களின் கடமை தலையாய கடமை என்று உணர்ந்து, அவருடைய கட்சிக்கு முழு ஆதரவை அளித்து மீண்டும் அண்ணா திமுகவை தொடர்ச்சியாக மூன்றாவது முறை வெற்றி பெறச் செய்து தமிழக அரசியலில் சாதனை படைத்தனர்.

முதல்வராக இங்கிருந்து அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்குச் சென்ற எம்.ஜி.ஆர். அங்கிருந்து வேட்பு மனுவில் விரல் ரேகை பதித்து வேட்பு மனுவை இங்கு அனுப்பி ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சட்டமன்ற உறுப்பினர்களால் ஒருமனதாக முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு



அமெரிக்காவிலிருந்து முதல்வராகவே திரும்பி வந்ததும் அவர் மட்டும் முதலில் கவர்னர் முன்னிலையில் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார். பிறகு அவருடைய அமைச்சரவை பொறுப்பேற்றது

அறுபது வயதிலும் நல்ல இளமையோடும் சுறுசுறுப்போடும் துடிப்போடும் விளங்கிய எம்.ஜி.ஆர். திடீரென்று சிறுநீரகம் பழுதாகி, மூளையில் ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டு நினைவிழந்த போது அவர் மீண்டும் பிழைத்து வருவார் என்று நம்பவில்லை. ஏனென்றால் இதற்கு முன்பு அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு போன அறிஞர் அண்ணா, கண்ணதாசன், கிருபானந்த வாரியார் போன்றோர் பிழைக்கவில்லை. எனவே எம்.ஜி.ஆரும் பிழைத்து வருவார் என்ற நம்பிக்கை இங்கிருந்த சிலருக்கு இல்லாமல் போயிற்று. ஆனால் ஏழை எளிய மக்கள் அனைத்து மதத்தினரும், சாதியினரும், சாதி மத வேறுபாடின்றி தத்தம் தெய்வங்களை தங்களுக்குரிய சடங்காச்சாரங்களோடு வழிபட்டு எம்.ஜி.ஆர். உயிர் பெற்று வரவேண்டும், நலம் பெற்றுத் திரும்ப வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

''***உன் கண்ணில் ஒரு துளி நீர் வந்தாலும்***

உலகம் அழ வேண்டும் ''

என்று எம்.ஜி.ஆர். நான் ஏன் பிறந்தேன் படத்தில் பாடியது போல இங்கு உலகமே எம்.ஜி.ஆருக்காக அழுதது. மக்களின் வேண்டுதல் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இந்துக்கோயில், கிறிஸ்தவ தேவாலயம், முஸ்லிம்களின் பள்ளிவாசல் என்று எல்லா பிரார்த்தனை தளங்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் எதிரொலித்தது. . தமிழர்கள் வாழும் பிற நாடுகளிலும் அங்கு வாழ்ந்தவர்கள் எம்.ஜி.ஆர். நலம் பெற்று திரும்ப வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். மக்களின் மொத்த வழிபாடு தமிழகத்தில் ஒரு ஆன்மிகப் புரட்சியை உருவாக்கியது அதன் பிறகு எம்.ஜி.ஆரும் மூகாம்பிகை கோயிலுக்குப் போய் நூறு பவுன் வாளைக் காணிக்கையாகக் கொடுத்தார். இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமாக கடவுளை வழிபடத் தொடங்கினர். திராவிட கட்சிகள் அதுவரை இந்து சமயம் மூட

நம்பிக்கைகள் நிரம்பியது என்று செய்து வந்த பிரச்சாரம் பொய்த்துப் போயிற்று.

மீள் நெகிழ்வுத் தன்மை என்பது எம்.ஜி.ஆர். ஒவ்வொரு முறை உயிருக்கு ஆபத்தான நிலையில் சிக்கி பிழைத்து வரும் போது அவருடைய தலைமையை மீண்டும் உறுதி செய்வதற்கு உறுதுணையாய் அமைந்தது.

எம்.ஜி.ஆர். ஆபத்துக்களிலும் எதிர்ப்புகளிலும் நோய் நொடி போன்றவற்றிலும் சிக்கித் தவித்து பின்பு பழைய நிலையை அடையும் போது அவருக்கு உறுதுணையாக இருப்பது அவரது ரசிகர்கள் அவர் மீது வைத்திருக்கும் பற்றும் பாசமும் ஆகும். எம்.ஜி.ஆரும் ரசிகர்களைத் தன் உடலாகக் கருதினார். அவர்கள் அவரைத் தமது தலையாக மதித்தனர்.

அமெரிக்காவில் இருந்து சிகிச்சை பெற்று வந்த எம்.ஜி.ஆர். அவருக்கு ஏற்பட்ட பேச்சுக் குறைபாடு காரணமாக தீவிரமான மொழி பயிற்சியில் ஈடுபட்டார். தகுந்த மருத்துவர்களை கொண்டு அவருக்கு மொழிப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதிகாலை 6 மணிக்கு அவர் எழுந்து தனக்குப் பயிற்சி அளிக்க வந்திருக்கும் மருத்துவரோடு ஒத்துழைத்தார். கடினமாகப் பயிற்சி பெற்றார். முன்பு குண்டு சுட்ட போது அதிகாலையில் கடலுக்குள் கழுத்தளவு தண்ணீரில் நின்று இருபுறமும் இருவரைத் தனது கைகளைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி உரத்த குரலில் பேசிப் பழகினார். இது போன்ற கடினப் பயிற்சிகளை செய்து அவர் பேசும் சக்தியைப் பெற்றார். இப்போதும் மருத்துவர்களின் உதவியால் மீண்டும் பேசும் சக்தியைப் பெற்றார். வேறொருவர் என்றால் மனம் உடைந்து சோர்ந்து போய் இருப்பார். ஆனால் எம்.ஜி.ஆரின் கடின முயற்சியும் பயிற்சியும் அவரிடம் மீள் நெகிழ்வுத் தன்மை இருப்பதை உறுதி செய்கிறது.

உலகத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்ட போது அவர் ஆற்றிய சிற்றுரை அவருக்கு எளிதாக பேசக்கூடிய ஒலிகளை கொண்ட சொற்களால் மருத்துவர்களின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டது. அவர் சொல்ல

எம். ஜி. ஆர். திரும்பினர்

வரவேற்க 4 லட்சம் பேர் திரண்டனர்

நாளை ஆளுநரைச் சந்திக்கிறார்

சென்னை, பிப். 6— அமெரிக்காவில் உள்ள புரூக்லின் மருத்துவமனையில் மூன்று மாத காலம் தங்கி சிகிச்சை பெற்றுவந்த தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் திங்கட்கிழமை நாடு திரும்பினார். அவருக்கு ஆரவாரமான வரவேற்பு வழங்கப் பட்டது.

இதன்வழி பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் பலம் மேலும் வலுவடைந்திருக்கிறது.

சிறுநீரக மாற்றுஅறுவை சிகிச்சைக்காக எம் ஜி ஆர் அக்டோபர் மாதம் நியூயார்க் சென்றார்.

எம் ஜி ஆரின் வருகைக்காக சுமார் நான்கு லட்சம் பேர் இரவு முழுவதும் காத்துக் கிடந்தனர். ...ன்றான் ...கடிகரான ...வரை இவருடைய ...தரவாளர்களில் சிலர் ...வுனாகவே கருதுகின்றனர்.

எம் ஜி ஆரை ஏற்றி [illegible]

...தில் தரையிறங்கியது.

பனிமூட்டம் காரணமாக காலை 6.40மணிவரை எம் ஜி ஆர் விமானத்திலிருந்து வெளியே வரவில்லை. அதன் பின்னர் வெளியே வந்த அவர் உற்சாகத்துடன் காணப்பட்டார். அங்குகூடியிருந்த லட்சக்கணக்கான ஆதரவாளர்களைநோக்கிகைகளை கூப்பி வணக்கம் தெரிவித்ததோடு பின்னர் கைகளையும் அசைத்தார்.

அந்த விமானத்தில் அமெரிக்காவிலிருந்து எம். ஜி. ஆரின் துணைவியார் ஜானகி, டாக்டர் பிரிபாத... [illegible] பெரியசாமி, [illegible]

...ளர்கள் ஆகியோர் வ...திருந்தனர்.

மத்திய அரசாங்க சமூ... நல அமைச்சர் திரும... மரகதம் சந்திரசேக... பம்பாயிலிருந்து அந்... விமானத்தில் வந்தார்.

அவரை வரவேற்... தமிழ்நாடு நிதியமைச்ச... நெடுஞ்செழியன், அ. இ... அ.தி.மு.க. பொதுச்செ...லாளர் திரு ப. உ. சண்...முகம் ஆகியோர் உள்ப... சால்வர் மட்டுமே விமான...திலருகே சென்றனர்.

டிசம்பர் மாதம் நடை... பெற்ற தேர்தலில் எம். ஜி. ஆரின் அ. இ. அ. தி. மு... [illegible]

(கடைசி பக்கம் பார்க்க)

அவருக்கு சொல் நா பிறழாமல் வரும் சொற்களைக் கொண்டு அவரது உரையை உருவாக்கிக் கொடுத்தார். தந்து உரையை எம்.ஜி.ஆர். மிகுந்த சிரத்தையுடன் கவனத்துடன் அக்கறையுடன் பயிற்சி செய்து மதுரையில் உலகத் தமிழ்ச் சங்க தொடக்க விழாவின்போது பேசினார்.

எம்.ஜி.ஆரின் கடின முயற்சியும் தளராத உழைப்பும் அவருக்கு மீள் நெகிழ்வுத்தன்மைக்குரிய முக்கிய காரணங்களாகத் திகழ்ந்தன. ஒவ்வொரு முறை அவர் அடிபடும் போதும் அழுத்தத்திற்கு உள்ளாகும் போதும் மீண்டும் எழுந்து புத்துணர்வோடு செயல்பட்டார். . இதனால் ரசிகர்களும் மக்களும் அவர் மீது மிகுந்த நம்பிக்கையும், அன்பும் கொண்டிருந்தனர். அவர் 'தோட்டாவுக்கு டாட்டா சொன்னவர்' என்றும் 'மரணம் கூட அவரை கண்டால் ஓடி விடும்' என்றும் மக்கள் பேசும்படி தெய்வாம்சம் பொருந்தியவராக மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவராகக் கருதப்பட்டார்.

தமிழகத்தின் தலைவர்களுள் தமிழினத்தின் தலைவர்களுள் எம்.ஜி.ஆருக்கு தனியிடம் உண்டு. அவர் தேசத்தின் மிக சிறந்த விருதான பாரத் விருது பெற்றார். அவரை ஒரு தேச தலைவராகக் கொண்டு இவ்விருது வழங்கப்பட்டது. இன்று பல இங்கிலாந்து பிரான்ஸ் அரேபியா மலேசியா போன்ற பல நாடுகளில் தமிழர்கள் உலக எம்.ஜி.ஆர். பேரவை தொடங்கி அவரை உலகத் தமிழினத்தின் தலைவராகத் தரம் உயர்த்தி உள்ளனர்.

3. என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே

எம்.ஜி.ஆருக்கும் இரசிகர்களுக்கும் இடையிலான தொடர்பு இரத்தப் பாசமாகும். எம்.ஜி.ஆர். பொதுக்கூட்டங்களில் தன்னுடைய இரசிகர்களை என் இரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே என்று அழைப்பார். அதற்கு அவரிடம் காரணம் கேட்டபோது தான் குண்டடிபட்டு மருத்துவமனையில் இருந்த நாட்களில் தனக்கு இரத்தம் ஏற்றப்பட்டதால் அந்த ரத்தம் யாருடைய இரத்தம் என்று தெரியாத காரணத்தால் தனக்கு இரத்தம் அளித்து அதன் மூலம் மறுபிறப்பு அளித்த உடன்பிறப்புகளை அவ்வாறு மேடையில் அழைப்பதாகக் குறிப்பிட்டார். அவருடைய இரசிகர்கள் அவருக்கு உயிராக நேசித்தனர்.

தலைவன் - தலை, தொண்டர் - உடல்.

'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் தனக்கும் தன்னைத் தலைவராக ஏற்றுக்கொண்ட கூட்டத்தினருக்கும் இடையிலான தொடர்பை ஒரு வசனத்தின் மூலம் எம்.ஜி.ஆர். தெரிவிப்பார். ஆர் கே சண்முகம் எழுதிய அந்த வசனம் 'அவர்கள் என்னை தலையாகக் கருதுகிறார்கள் நான் அவர்களை என் உடலாக மதிக்கிறேன்' என்பதாகும். எம்.ஜி.ஆருக்கும் அவரது ரசிகர்களுக்குமான உறவும் தலையும் உடலும் போன்றதாகும். ரசிகர்கள் எம்.ஜி.ஆரைத் தம் தலையாகத் தலைவராக, அறிவாக, வழிகாட்டியாக மூளையாகப் போற்றினர். எம்.ஜி.ஆர். தன் இரசிகர்களை தன் உடலாக, செயல்பாடாக, தன் இயக்கமாக, தன் அங்கங்களாகக் கருதினார்.

தலைவன் தொண்டனின் அடிமை

படகோட்டி படத்திலும் தலைவருக்கும் தொண்டருக்கும் இடையிலான உறவை பற்றி ஒரு வசனம் இடம் பெறும். 'தலைவன் என்ற பெயரில் நான் ஒரு தொண்டன்' என்பார். அவருடைய வாழ்க்கையில் இது மறுக்க இயலாத உண்மையாகும். எம்.ஜி.ஆரை அவரது இரசிகர்கள் தலைவராக மதித்து அன்பு செலுத்தினாலும் எம்.ஜி.ஆர். அவர்களின் தொண்டனாகவே தன்னைக் கருதிச் செயல்பட்டார். இந்தக் கருத்தும் நம்பிக்கையுமே அவர் முதல்வரான பிறகு ஒவ்வொரு பொழுதும் ஒவ்வொரு நொடியிலும் இந்த மக்களுக்கு நாம் என்னென்ன நன்மைகள் செய்ய முடியும் என்று மக்கள் நலத் திட்டங்களில் அவரை ஆழ்ந்து ஈடுபடச் செய்தது. தலைவர் என்று பெயரிருந்தாலும் அவர் தன்னை மக்களின் தொண்டனாகவே கருதி வந்தார்.

மக்கள் நலச் சிந்தனை

எம்.ஜி.ஆரிடம் யார் எந்த ஒரு திட்டம் பற்றி எடுத்துக் கூறினாலும் அவர் கேட்கும் முதல் கேள்வி இதனால் மக்களுக்கு என்ன நன்மை என்பது தான். ஒரு முறை அவர் விமானத்தில் பயணம் செய்த போது விமானிகள் இருக்கும் அறைக்குள் சென்று அங்கு நின்று கொண்டு அவர்களிடம் சிறிது நேரம் உரையாடினார். அப்போது அங்கிருந்த ஒரு



விமானி பயிற்சி விமானிகளுக்கு வேண்டிய வசதிகளை அரசு செய்து தர வேண்டும் என்று கேட்டார். அதற்கு எம்.ஜி.ஆர். இதனால் மக்களுக்கு என்ன நன்மை என்று கேட்டார். ஆக பொது மக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்கு நன்மை தரக்கூடிய திட்டங்களுக்கு அவர் முன்னுரிமை கொடுத்தார்.

பெண் கல்வி முன்னேற்றம்

எம்.ஜி.ஆர். தன் ரசிகர்களில் பலர் ஏழைகள் என்பதால் அவர் எப்போதும் மக்கள் நலம் குறிப்பாக ஏழைகள் முன்னேற்றம் என்று சிந்தித்து செயல்பட்டார். இச்சிந்தனை காரணமாக சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டு தமிழகத்தின் அடுத்த தலைமுறையை ஆரோக்கியமான தலைமுறையாக உருவாக்க முடிந்தது. குறிப்பாக அதிக எண்ணிக்கையில் பெண்களைப் பள்ளிக்கு வரவழைத்து அவர்களைப் படிக்க வைத்து நல்ல சாப்பாடு கொடுத்து ஆரோக்கியமான தாய்மார்களாக உருவாக்க முடிந்தது. அவரது ஆட்சியில் பெண்களின் வரவு பள்ளிகளில் அதிகரித்தது என்பது வரலாற்றுச் சாதனை ஆகும்.

பகைவனுக்கு அருளிய நல்ல நெஞ்சம்

எம்.ஜி.ஆர். மக்கள் நலன் குறித்த சிந்தனையில் அவர் தனக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பாகுபாடு பார்ப்பது கிடையாது. எதிரணியைச் சேர்ந்தவராக எதிர்க்



கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கும் தேவைப்பட்ட நன்மைகளைச் செய்து வந்தார். எம்.ஜி.ஆரிடம் இருந்த எதிரிக்கும் அருளும் இரக்க குணம் அவருக்கு எதிர்க்கட்சிகளும் எதிரணியிலும் நல்ல பெயரை பெற்றுத்தந்தது. எம்.ஜி.ஆரைப் பற்றி தனது பத்திரிகையில் மோசமாக எழுதி வந்த ஒரு பத்திரிகையாளரின் மகள் திருமணத்துக்கு பணம் இல்லாமல் கஷ்டப்பட்ட போது ஒரு நண்பர் அவரை எம்.ஜி.ஆரிடம் அழைத்து வந்தார். எம்.ஜி.ஆர். அவருக்குத் தேவையான பண உதவியை அளித்தார். "அண்ணே அவன் உங்களை பற்றி எவ்வளவு மோசமாக எழுதியிருக்கான். அவனுக்குப் போய் நீங்க உதவலாமா? என்று உதவியாளர் ஒருவர் கேட்ட போது 'வேறு வழியில்லாமல் தானே என்னிடம் உதவி கேட்டு வந்திருக்கிறார். அவரை நாம் மேலும் நோகடிக்கலாமா" என்றார்.

உதவி கேட்டு வருகிறவர் ஏற்கெனவே மனம் நொந்து போயிருப்பார். அவரை மேலும் நாம் மன உளைச்சலுக்கு உள்ளாக்கக் கூடாது என்ற மனித நேயம் கொண்டவர் எம்.ஜி.ஆர். இன்னார் இனியார் என்றில்லாமல் எல்லோரையும் சமமாகப் பாவித்து அன்பு செலுத்துபவர் எம்.ஜி.ஆர்.

இரத்தத்தை விற்றுப் படம் பார்த்தோர்

இரசிகர்கள் ஏழைகளாக இருந்தாலும் எம்.ஜி.ஆரிடம் கொண்டிருந்த அன்பில் அவர்கள் பணக்காரர்கள் ஆகவே இருந்தனர். எம்.ஜி.ஆரிடம் அன்பு காட்டுவதில் அவர்கள் கஞ்சத்தனம் காட்டியதே கிடையாது. எம்.ஜி.ஆர். படங்கள் வரும்போது அந்த படங்களைப் பலமுறை பார்க்க வேண்டும்; முதல் காட்சியிலிருந்தே பார்க்க வேண்டும் என்ற வெறியுடன் கடைசி படம் வரை செயல்பட்டனர்.

1960களில் பஞ்சம், பசி பட்டினி என்று இருந்த நாட்களில் பலர் வேலை கிடைக்காமல் சிரமப்பட்டனர். அப்போது அவர்கள் வருமானம் இல்லாததால் தங்கள் இரத்தத்தை விற்று எம்.ஜி.ஆர். படம் பார்த்தனர். 15 ரூபாய்க்கு இரத்தத்தை

விற்றால் அவர்கள் ஒரு வாரத்திற்கு தொடர்ந்து எம்.ஜி.ஆரின் புதுப் படத்தை இரண்டு மூன்று காட்சிகள் தினந்தோறும் பார்க்கலாம்.

தேனி, மதுரை, பெரியகுளம் பகுதிகளில் எம்.ஜி.ஆரின் புதுப் படம் வெளிவரும்போது அதிகமானோர் இரத்த வங்கிக்கு வந்து இரத்ததானம் செய்வது வழக்கமாக இருந்தது. இதைக் கவனித்த ஒரு மருத்துவர் எம்.ஜி.ஆரின் தனி மருத்துவரான பி ஆர் சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரிவித்தார். உடனே பிஆர்எஸ் எம்.ஜி.ஆரிடம் இத்தகவலைக் கூறினார். எம்.ஜி.ஆர். அதிர்ந்து விட்டார். ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார் இனி தன் படம் பார்க்க பணம் இல்லை என்றால் தன்னிடம் எழுதிக் கேட்டுப் பணம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் படம் பார்ப்பதற்காக யாரும் இரத்த தானம் செய்யக்கூடாது. 'என் மேல் உறுதியான பற்றும் பாசமும் உடையவர்கள் என்னுடைய வாக்குக்கு கட்டுப்பட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

படம் பார்க்க பணம் அனுப்புகிறேன்

எம்.ஜி.ஆர். நேரில் புறப்பட்டு வந்து தனது ரசிகர்களைச் சந்தித்தார். அவர்களிடம் ஏன் இப்படி செய்தீர்கள் என்று அவர்



கேட்டபோது 'உங்கள் படம் பார்க்க பணம் இல்லை அதனால் இப்படி செய்தோம்'. என்றனர். அதற்கு எம்.ஜி.ஆர். 'என்னிடம் எழுதிக் கேளுங்கள் நான் பணம் அனுப்புகிறேன்' என்றார். 'உங்களிடம் பணம் வாங்குவதா? அய்யோ அது தப்பு. நீங்கள் எங்களுக்கு எவ்வளவோ நன்மை செய்கிறீர்கள். உங்கள் படத்தைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் பெறுகிறோம். இதுவே நீங்கள் எங்களுக்கு செய்யும் மிகப்பெரிய உதவி. நாங்கள் உங்களிடம் பணம் வேறு பெற்றுக்கொள்வது மகா பாவம்' என்று சொல்லிவிட்டனர். ஏழைகளான அவர்கள் தன் மீது வைத்திருக்கும் அன்பைக் கண்டு எம்.ஜி.ஆர். அதிர்ந்துவிட்டார்.

எம்.ஜி.ஆருக்குக் கொடுக்க வேண்டும்

எம்.ஜி.ஆர். ரசிகர்களின் சிறப்புத் தன்மையும் தனித்தன்மையும் என்பது, அவர்கள் எம்.ஜி.ஆருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதுவது ஆகும். எம்.ஜி.ஆர். ரசிகர்கள் எம்.ஜி.ஆருக்குத் தாம் எதையாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்களே தவிர எம்.ஜி.ஆரிடம் இருந்து எதையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தது கிடையாது. இதனால் பலர் எம்.ஜி.ஆரைப் பார்த்தபோது 'உனக்கு என்ன வேண்டும் கேள்' என்று எம்.ஜி.ஆர். அவர்களிடம் கேட்கும் போது, 'எங்களுக்கு ஒன்றும் வேண்டாம்; நீங்கள் நன்றாக இருந்தாலே போதும்' என்று சொல்வது வழக்கம்.

'அந்தப் பால் தான் வேண்டும்'

மதுரை ரசிகர்கள் சிலர் அவ்வப்போது சென்னை செல்லும் லாரியில் போய் எம்.ஜி.ஆரை பார்த்துவிட்டு வருவதுண்டு. 'இப்படி அடிக்கடி வருகிறீர்களே எப்படி உங்களால் முடிகிறது?' என்று எம்.ஜி.ஆர். ஒரு முறை கேட்டார் அவர்கள் தாம் லாரியில் வருவதாகக் கூறினார் 'உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்ட போது ஒருவர் நீங்கள் குடிக்கும் பால் வேண்டும் என்றார். அவருக்குப் பால் கொண்டு வரும்படி எம்.ஜி.ஆர். தனது உதவியாளரிடம் சொன்னார் ஆனால் அந்த ரசிகர் 'உங்கள் கையில் இருக்கும்



பால் தான் வேண்டும்' என்று கேட்டார். சிரித்தபடி எம்.ஜி.ஆர். தன் கையில் இருந்த பால் தம்ளரை அவரிடம் கொடுத்தார். ஆனால் ரசிகர் அதைக் குடிக்காமல் சிரித்த முகத்துடன் எம்.ஜி.ஆரிடமே திருப்பிக் கொடுத்து விட்டார்.

இரசிகர்களின் ஆசை எம்.ஜி.ஆரிடம் பண்பும் பாசமும் மிக்கதாக இருந்தது. வந்தவர்களில் ஒருவருக்குச் சொந்தக் கடை வைக்கவும் மற்றவருக்கு மாநகராட்சியில் பணி செய்யவும் என அவரவர் தேவைக்கும் திறமைக்கும் தக்கபடி எம்.ஜி.ஆர். உதவிகள் செய்தார்.

இரசிகைகளின் தாய்ப்பாசம்

எம்.ஜி.ஆர். தங்களின் பொருட்டு எவ்விதச் சிரமத்துக்கும் ஆளாகக் கூடாது என்பதில் அவரது இளம் ரசிகர்கள் மட்டுமல்ல முதிய பெண்களும் கருத்தாக செயல்பட்டனர். அவர்கள் எம்.ஜி.ஆரைத் தமது தலைமகனாகப் போற்றினர். ஒரு முறை சென்னையில் வெள்ளச் சேதம் ஏற்பட்ட போது எம்.ஜி.ஆர். தன்னுடைய காரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் போய் இறங்கி வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தண்ணீரில் இறங்கி நடந்து சென்று வீழ்ந்து கிடக்கும் குடிசைகளைப் பார்வையிட்டார். மக்கள் அவரைப்

பார்க்க கூடி விட்டனர். நீரில் முழ்கிக் கிடந்த குடிசையில் இருந்த வயதான பெண்கள் சிலர் எம்.ஜி.ஆரைப் பார்த்து 'எங்களுக்கு ஒரு குறையும் இல்லை சாமி. நாங்க நல்லா இருக்கோம். அதிகாரிகள் எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்றாங்க. . நீங்க இந்த தண்ணீரில் நடக்க வேண்டாம், ஐயா நீங்க முதல்ல போய் உங்க கார்ல ஏறி வீட்டுக்குப் போங்கய்யா' என்று அன்புக் கட்டளை இட்டனர்.

எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சாரங்களுக்கு வெளியூர்களுக்குச் செல்லும் போதும் மக்கள் 'எங்களுக்கு ஒரு குறையும் இல்லை நீங்கள் வெயிலில் நடக்க வேண்டாம்' என்று சொல்வதுண்டு. எம்.ஜி.ஆர். சேறும் சகதியும் கலந்த வெள்ள நீரில் நடந்து வருவதும் வெயிலில் நடப்பதும் வயதான பெண்களுக்கு மனம் பொறுக்கவில்லை. தங்களின் மகன் நடந்து வருவதாகவே கருதினர். இதுதான் எம்.ஜி.ஆர். ரசிகைகளின் தனிப்பெரும் பண்பு.

ஈருடல் ஓருயிர்

எம்.ஜி.ஆருக்காக ரசிகர்கள் உருகினார்கள்; ரசிகர்களுக்காக எம்.ஜி.ஆர். உருகினார். இருவரும் ஈருடல் ஓருயிர் போல இயங்கி வந்தனர், இன்றும் இயங்கி வருகின்றனர். இன்றைக்கும் எம்.ஜி.ஆர். மீது உயிரை வைத்திருக்கும் ரசிகர்கள் கோடானுகோடி பேருண்டு. அண்ணாதிமுக கட்சியில் இருக்கும் ஒன்றரைக் கோடி உறுப்பினர்களை இதில் சேர்க்க கூடாது.

இன்றைக்கு இருக்கும் கட்சிக்காரர்களில் பலர் கட்சிப் பதவிக்காக சேர்ந்திருக்கலாம் அல்லது ஜெயலலிதாவின் ஆளுமையை மதித்து கட்சியில் சேர்ந்திருக்கலாம்; இந்தக் கட்சியில் உறுப்பினர் அல்லாத பல இலட்சம் பேர் குறிப்பாக கிராமத்துப் பெண்கள் எம்.ஜி.ஆர். மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டுள்ளனர். இன்றைக்கு இரசிகராக இருந்து எம்.ஜி.ஆருக்கு விழா எடுக்கின்றவர்களில் இலட்சக்கணக்கானோர் எம்.ஜி.ஆரைப் பார்த்தது கூட கிடையாது. படங்களில் பார்த்து அவர் மீது அன்பும் பாசமும் கொண்டிருக்கின்றனர். எம்.ஜி.ஆர். இறந்த பிறகு பிறந்தவர்களும் கூட எம்.ஜி.ஆரின் தீவிர இரசிகர்களாக இருப்பதைக் காண்கிறோம்.



பாதுகாவலரும் அவரே

எம்.ஜி.ஆர். தனது இரசிகர்கள் மீது தீராத அன்பு கொண்டிருந்தார் என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம். 1970களின் தொடக்கத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர் ஒருவர் உணவகம் நடத்தி வந்தார். அது திமுக ஆட்சி காலம்

என்பதால் அங்கு திமுக ரவுடிகள் வந்து சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் சென்று விடுவது வழக்கமாக இருந்தது. முகராசி படத்தில் இப்படி ஒரு காட்சி இடம்பெறும். நம்பியாரும் சாண்டோ சின்னப்பா தேவரும் ஒரு உணவகத்தில் வந்து சாப்பிடுவதும் அங்குப் பணம் கொடுக்காமல் போவதும் சாப்பிடுகின்றவர்களைக் கேலி கிண்டல் செய்வதும் அவர்கள் வழக்கமாக இருந்தது. ஒரு நாள் ஓர் இளம்பெண் [ஜெயலலிதா] அங்கு வந்து சாப்பிடும் போது இருவரும் அந்தப் பெண்ணை அரட்டி மிரட்டுகின்றனர். அவ்வேளையில் எம்.ஜி.ஆர். அவ்விருவரையும் அடித்துப் போட்டுவிட்டு அவர்களிடம் இருந்து அப்பெண்ணைக் காப்பாற்றுவார்.

எம்.ஜி.ஆர். ரவுடிகள் இருவரையும் அடித்து உதைக்கும் போது நடக்கின்ற வேளையில் உணவகத்தின் உரிமையாளர் பணியாளும் பேசிக்கொள்வதாக ஒரு காட்சி உண்டு. 'என்ன முதலாளி இந்தாளு இப்படி அடிக்கிறாறரு. என்று அந்தப் பணியாள் கேட்டதற்கு 'இவங்க ரெண்டு பேரும் தினமும் சாப்பிட்டு விட்டு பணம் கொடுக்காமல் போய்க் கொண்டிருந்தனர். நம்மை மிரட்டி நம்மிடம் கல்லாவில் இருந்து பணம் வாங்கிச் சென்றனர். இந்த நல்ல மனிதர் நன்றாக அடிக்கட்டும் அப்படியாவது அவர்கள் திருந்துகிறார்களா என்று பார்ப்போம்'. இந்த திமுக ரவுடிகளுக்கு அன்றைய காவல் துறையும் ஆதரவு அளித்தது.

எம்.ஜி.ஆரின் இரசிகர்கள் கடைக்கு ஏற்படும் தொல்லை எம்.ஜி.ஆர். காதுக்கு எட்டியது. எம்.ஜி.ஆர். தன்னுடைய மெய்க்காப்பாளர்களை அழைத்து தன்னுடைய இரசிகரின் உணவகத்துக்கு போய் அவருக்கு வேண்டிய உதவியைச் செய்யும்படி கட்டளையிட்டார். இரவுடிகள் வரும் நேரத்தில் மெய்க்காப்பாளர்கள் அந்த உணவகத்திற்கு வந்து ஒருபுறம் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். வழக்கம் போல் திமுக ரவுடிகள் வந்து தகராறு செய்ததும் எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளர்கள் அவர்களை நையப் புடைத்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அதன் பிறகு அவர்கள் அந்த உணவகத்திற்கு வந்து அடாவடித்தனம் செய்வதை நிறுத்தி விட்டனர்.



எம்.ஜி.ஆர். இரசிகர்களின் கடைகளுக்கு திமுக இரவுடிகள் வந்து அட்டகாசம் செய்வது நின்று போனது. எம்.ஜி.ஆர். தனது ஆட்களை வைத்து அடிப்பார் என்ற பயம் வந்துவிட்டது. காவல் துறையும் திமுகவினரின் அராஜகப் போக்குக்கு ஆதரவளிப்பதை நிறுத்திவிட்டது.

‘சாமியிடம் கேட்டால் கூட இரண்டு நாள் ஆகும்’

எம்.ஜி.ஆர். தன்னுடைய ரசிகர்களுக்கும் அல்லது சினிமா துறையைச் சேர்ந்தவருக்கும் பொதுமக்களில் எவருக்கும் ஏதேனும் தொல்லைகள் ஏற்பட்டு அது அவருடைய கவனத்திற்குக் கொண்டு போகப்பட்டால் உடனடியாக அவர்களுக்குத் தொல்லை கொடுத்தவர்களைக் கண்டித்தும் தண்டித்தும் விடுவார். இவர்களுக்கு அந்தத் தொல்லையிலிருந்து நிரந்தர விடுதலை கிடைக்கும்; நல்ல தீர்வு கிடைக்கும். அதனால் தான் சரோஜாதேவி ‘சாமியிடம் கேட்டால் கூட இரண்டு நாட்கள் ஆகும். எம்.ஜி.ஆரிடம் போய் நின்றால் உடனே நம் துன்பம் தீரும்’ என்றார். தன் ரசிகர்களுக்கும் தன்னை நம்பியவர்களுக்கும் தர்மத்தின் காவலனாக எம்.ஜி.ஆர். விளங்கினார்.

பீடா கடையில் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். எப்போதும் அடிதடியை நம்புகிறவர் கிடையாது. சில சமயங்களில் சமயோசிதமாகவும் விவேகமாகவும் சாதுர்யமாகவும் செயல்பட்டு பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார். எம்.ஜி.ஆரின் ரசிகர் ஒருவர் ஒரு பெரிய ஹோட்டலின் முன்பு சின்ன மேசையை போட்டு பீடா கடை வைத்திருந்தார். அப்பகுதியைச் சேர்ந்த போலீசார் அவர் தெருவில் கடை வைப்பது குற்றம் என்று சொல்லித் தினமும் அவரிடம் வந்து அபராதத் தொகை வசூலித்துச் சென்றனர். அபராதத் தொகை என்ற பெயரில் அவர்கள் அந்தப் பணத்தை இலஞ்சமாக பெற்றுச் சென்றது தான் உண்மை. தினமும் பணம் கொடுக்க இயலாத அந்த பீடா கடைக்காரரர் ஒருநாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

சட்டப் பிரச்சனை தொடர்பான விஷயங்களில் எம்.ஜி.ஆர். விவேகமாகவும் சமயோசிதமாகவும் நடந்து கொள்வார். இரண்டு மூன்று தினங்களாக அவர் கோட்டைக்குப் போகும்போது அந்த பீடா கடை இருந்த சாலை வழியாகச் சென்றார்.

ஒரு நாள் அந்தக் கடையின் வாசலில் காரை நிறுத்திவிட்டு இறங்கி வந்து பீடா கடைக்காரரைப் பார்த்து ‘என்னப்பா இப்போதெல்லாம் தோட்டத்து பக்கம் வரவே மாட்டேன் என்கிறாய். வியாபாரம் எப்படி நடக்கிறது? வியாபாரம் சூடு பிடித்து விட்டதோ. உனக்கு அங்கெல்லாம் வர நேரம் கிடைக்க வில்லையோ/’ என்று பீடா கடையில் உட்கார்ந்து தன் ரசிகரிடம் சில நிமிடங்கள் பேசிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். இந்த கடைக்காரரர் எம்.ஜி.ஆருக்கு மிகவும் வேண்டியவர் என்ற கருத்து உடனே அந்த பகுதியில் பரவி விட்டது. அதன் பிறகு அவருக்கு போலீசாரின் தொல்லை அறவே இல்லாமல் போய்விட்டது. இவ்வாறு எம்.ஜி.ஆர். தன்னுடைய ரசிகர்களுக்கு துன்பம் வரும் நேரங்களில் மிகவும் சாதுரியமாக நடந்து அந்த துன்பத்தை தீர்த்து வைப்பது வழக்கம்.

இரசிகரா? தொண்டரா?

எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு ரசிகர்கள் அல்லாத பலரும் கட்சியில் உறுப்பினர்களாகி சில பதவிகளைப் பெற்றனர். ஆரம்பத்திலிருந்து ஏழை ரசிகர்களாக இருந்தவர்கள் செயலாளர் பொறுப்பிலும், புதியவர்கள் தலைவர் பொறுப்பிலும் இருந்து வந்தனர். இவ்வேளையில் கட்சியில் பழைய ரசிகர்களுக்கு செல்வாக்குக் குறையத் தொடங்கியது. புதியவர்களின் அதிகாரம் கொடி கட்டி பறந்தது. இதை ஆங்காங்கே தனக்கு வந்த புகார்களின் மூலம் கவனித்து வந்த எம்.ஜி.ஆர். இதற்கு ஒரு முடிவு கட்ட விரும்பினார்.

கட்சி வளர்க்க பணம் தேவை; அதே நேரத்தில் தனக்காக அவர்களுடைய பணத்தைச் செலவழித்து படம் பார்த்து தன்னை ஒரு மிகப்பெரிய நடிகர் ஆக்கி இன்றைக்கு கட்சியின் தலைவராகவும் முதல்வராகவும் ஆக்கியிருக்கும் தன்னுடைய ரசிகர்களின் செல்வாக்கும் குறைந்துவிடக்கூடாது. அவர்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர். அதை மக்களுக்கும் மற்றவர்களுக்கும் காட்ட வேண்டும் என்று முடிவு செய்தார்.



காதுக்குள் ரகசியம் பேசிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். கோவையில் தனது பழைய இரசிகர் மருதாசலத்துக்குப் புதியவர்கள் உரிய மரியாதை தரவில்லை என்பதை அறிந்துகொண்டார். கோவைக்கு வந்த போது மருதாச்சலம் எம்.ஜி.ஆரிடம் வந்து பழைய ஆட்கள் யாரையும் தன்னை மதிப்பதில்லை, புதிய ஆட்கள் வந்து அதிகாரம் செய்கின்றனர் என்று கூறினார். எம்.ஜி.ஆர். அதைக் கேட்டுவிட்டு அமைதியாக இருந்து விட்டார். கோவை நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு இரயிலடிக்கு வந்தபோது மருதாச்சலம் என்று அழைத்தார் அவரை புதிய ஆட்கள் பின்னுக்குத் தள்ளி நிறுத்தி இருந்தனர். கூட்டத்தில் பின்னாடி நின்ற மருதாச்சலத்தை எம்.ஜி.ஆர். தன்னருகில் அழைத்து அவருடைய காதில் ஏதோ ரகசியமாகச் சொல்லி சிரித்தார். இதைப் பார்த்து அனைவரும் சற்று அரண்டு விட்டனர். இவர் எம்.ஜி.ஆருக்கு மிகவும் வேண்டியவராக இருந்திருக்கிறார். இருவருக்குள்ளும் நிறைய ரகசியங்கள் இருக்கின்றன. தலைவருக்கு மிகவும் நெருக்கமானவரை நாம் அலட்சியப் படுத்தி விட்டோமே என்று கட்சிக்கு வந்த புதியவர்கள் சற்று கலங்கிவிட்டனர். பிறகு எம்.ஜி.ஆர். கையசைத்து விடை பெற்றுக்கொண்டு ரயிலில் சென்று விட்டார். அதன் பிறகு பழையவரான மருதாசலத்திற்கு கோவையில் மரியாதை



அதிகரித்துவிட்டது. புதியவர்கள் அவரை மிகுந்த மரியாதையோடு நடத்தினர்.

உண்மையில் எம்.ஜி.ஆர். அவர் காதில் எந்த ரகசியமும் சொல்லவில்லை அவர் காதில் ஏதோ சொல்வது போல நடித்தார். ஆனால் மற்றவர்களுக்கு அவர் ரகசியம் சொன்னதாகவே மற்றவர்கள் நம்பினர். அவருடைய சூட்சுமங்கள் ஒன்று தன்னுடைய ரசிகர்கள் தனக்கு மிகவும் நெருங்கியவர்கள், நண்பர்கள் என்ற ஒரு தோற்றத்தை எம்.ஜி.ஆர். ஏற்படுத்திவிடுவார். அவருக்கு யார் உற்ற நண்பர் யார் தெரிந்தவர் என்று அறிந்துகொள்ள இயலாது அவர் ஏழைகளிடமும் பணக்காரர்கள் இடமும் ஒன்று போலவே பழகுவார்.

மணி பத்தாகிவிட்டது; கிளம்புங்கள்

எம்.ஜி.ஆர். படப்பிடிப்புக்கு வெளியூர்களுக்கு போகும்போது இரசிகர்களின் அபரிமிதமான தொல்லைக்கு ஆளாகி இருக்கிறார். அப்போதும் அவர் ரசிகர்களின் பாதுகாப்பு குறித்து மிகவும் அக்கறையோடு செயல்பட்டார்.

வைகை அணைக்கட்டு பகுதியில் மாட்டுக்கார வேலன் பாடல் காட்சிகள் படம் எடுக்கப்பட்டன. "பட்டணமா ரெண்டுங்கெட்டான் லட்சணமா", "பூ வைத்த பூவைக்கு



பூக்கள் சொந்தமா'' ஆகிய பாடல்கள் பகலிலும் ''தொட்டுக் கொள்ளவா நெஞ்சைத் தொட்டுக் கொள்ளவா'' பாடல் இரவிலும் படம் எடுக்கப்பட்டது. இரவு மணி பத்து ஆன பிறகும் மக்கள் வீட்டுக்கு போகாமல் படப்பிடிப்பைப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட எம்.ஜி.ஆர். பெண்களைப் பார்த்து 'மணி பத்து ஆகிவிட்டது. உடனே வீட்டுக்குச் செல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டார். அதன் பிறகு பெண்கள் கூட்டம் கலையத் தொடங்கியது. நாளுக்கு நாள் கூட்டம் அதிகரிப்பதைக் கண்ட எம்.ஜி.ஆர். பின்பு அங்குப் படப்பிடிப்பை நிறுத்திவிட்டு சென்னை திரும்பிவிட்டார்

'ஒரு மகன் சினிமாவில் இருக்கான்'

மாட்டுக்கார வேலன் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆரின் ரசிகையான ஒரு வயதான பெண்மணி கூட்டத்தில் முண்டியடித்து எம்.ஜி.ஆரைப் பார்க்க முன்னேறி வந்தார். வயதானவர் சிரமப்படுவதைப் பார்த்த எம்.ஜி.ஆர். 'அவருக்கு வழி விடுங்கள்' என்றார்.

பாட்டி எம்.ஜி.ஆர். அருகில் வந்ததும் எம்.ஜி.ஆர். அவருக்கு ஒரு நாற்காலி கொடுத்து உட்கார வைத்து 'நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' உங்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா?' என்று கேட்டார். அதற்கு அந்த மூதாட்டி 'எனக்கு இரண்டு பிள்ளைகள் ஒருவன் ராணுவத்தில் இருக்கிறான். 'இன்னொருவன் சினிமாவில் இருக்கிறான்' என்று பதில் கூறினார். 'சினிமாவில் இருக்கிறாரா/ யார் அது? எனக்குத் தெரிந்து இருக்குமே' என்று கேட்டதும், 'அது நீதானப்பா நீதான் நான் பெறாத பிள்ளை' என்று அந்த மூதாட்டி சொன்னார். எம்.ஜி.ஆர். மிகவும் மனம் நெகிழ்ந்து போனார். இதுபோல் அவருக்கு ஏராளமான ரசிகைகள் அவரைத் தன் மகனாகக் கருதி வாழ்ந்து வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். வயது முதிர்ந்த ரசிகப் பெருமக்கள் அவரிடம் காட்டிய அன்பின் மதிப்பை உணர்ந்ததால் அவர் தான் முதலமைச்சரானதும் முதியவர்களுக்கும் மதியம் சத்துணவு, ஒய்வுதியப் பணம் மற்றும் இலவச வேட்டி சேலை



ஆகியவற்றைக் கொடுத்து ஒரு மகனைப் போலவே அவர்களைக் கவனித்துக் கொண்டார்.

ஜீப்பில் ஊர்வலம்

தஞ்சாவூர் அருகே காவிரி ஆற்றில் தேர்த்திருவிழா படத்துக்கு படப்பிடிப்பு நடந்தது. அப்போது இரசிகர் கூட்டம் கும்பகோணத்தில் படப்பிடிப்பை நடத்த விடாமல் அதிகரித்துக்கொண்டே வந்தது. எம்.ஜி.ஆர். இரசிகர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். அவரது படப்பிடிப்பு முடிந்ததும் ஊருக்குள் முக்கிய நடிகர் நடிகைகளுடன் ஊர்வலமாக வந்து அவர்கள் அனைவரும் தங்களைப் பார்த்துக் கொள்ளும்படிச் செய்து அவர்களுக்கு உற்சாகம் ஊட்டினார். படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க ஆண்கள் அதிகம் வந்திருக்கக் கூடும். பெண்கள் விட்டில் இருந்திருப்பார்கள். அவர்களும் நடிகர் நடிகைகளைப்



பார்த்துக்கொள்ள வசதியாக எம்.ஜி.ஆர். ஜீப்பில் ஊருக்குள் ஊர்வலம் வந்தார்.

‘வண்டியை விடு’

கோவையில் விவசாயப் பண்ணையில் ‘விவசாயி’ படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றபோது கூட்டம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. அவர் தன்னைப் பார்ப்பதற்காக வந்திருப்பவர்களிடம் ‘நான் கடைசி நாள் உங்கள் அனைவரையும் சந்திப்பேன்’ என்று கூறினார். அதுபோல படப்பிடிப்பு முடிந்த கடைசி நாளன்று வேனில் ஊருக்குள் சென்று நகர்வலமாக வர திட்டமிட்டிருந்தார். ஆனால் அதை அறியாத சில விஷமிகள் விவசாயப் பண்ணையின் வாசலில் சைக்கிள்களைப் படுக்கப்போட்டு அவரது வண்டியை நிறுத்த திட்டமிட்டனர். இதைப் பார்த்து மிகுந்த கோபம் கொண்ட எம்.ஜி.ஆர். ‘சைக்கிள்களின் மீது ஜீப்பை விடு’ என்று தனது ஓட்டுநரிடம் சொன்னார். எம்.ஜி.ஆர். பயணம் செய்த வண்டி விர்ரென்று போய்விட்டது. அவரை அரட்டி மிரட்டி காரியம் சாதிக்க முடியாது. எம். ஜி. ஆர். அன்புக்குக் கட்டுப்படுவாரே தவிர அடக்குமுறைக்குக் கட்டுப்படமாட்டார். ரசிகர்கள் என்ற



பெயரால் மற்றவர்கள் செய்யும் அராஜகத்துக்கு அடங்க மாட்டார்.

என்னைப் பார்க்க எளியவரும் வருவர்

எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகும் கூட தனது இரசிகர்களுக்கும் தொண்டர்களுக்கும் மிகுந்த மதிப்பளித்தார். அவர் தனது இரசிகர்களுக்காக தன்னுடைய வசதிகளைக் குறைத்துக் கொண்டார். அவர்களுக்காகத் தன்னை எளிமைப்படுத்தி அவர்கள் தன்னைக் அணுகும் வகையில் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தார்.

எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகு கல்கத்தாவில் தமிழ்ச் சங்கத்துக்கு சொந்தமாக ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்று அங்கு வாழும் தமிழர்கள் திட்டமிட்டனர். அங்கு லேக் ஏரியா என்ற பகுதியில் தமிழர்கள் அதிகம். அவர்கள் எம்.ஜி.ஆரை வந்து பார்த்து இது குறித்துப் பேசியபோது எம்.ஜி.ஆர். அந்தக் கட்டிடம் கட்டுவதற்கு தன் சொந்தப் பணத்தில் இருந்து ஐந்து லட்சம் கொடுத்தார். கட்டிடம் கட்டி முடித்ததும் கட்டிடத் திறப்பு விழாவுக்கு எம்.ஜி.ஆரை கல்கத்தா வாழ் தமிழர்கள் வந்து அழைத்தனர். எம்.ஜி.ஆர். புறப்பட்டுப் போனார்

எம்.ஜி.ஆருக்கு கல்கத்தாவில் உள்ள கவர்னர் மாளிகையில் அவருக்கு சகல வசதிகளும் செய்து கொடுத்தனர். ஆனால் கவர்னர் மாளிகைக்குச் சென்ற பத்து நிமிடத்திலேயே 'இந்த இடம் நமக்கு சரிப்படாது வாருங்கள் நாம் வேறு ஹோட்டலுக்கு போய் விடுவோம்' என்றார்.

கவர்னரின் உதவியாளர் 'உங்களுக்கு இங்கு என்ன வசதி வேண்டும் சொல்லுங்கள்; நாங்கள் அனைத்தும் செய்து தருகிறோம்' என்று தெரிவித்தனர். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களிடம் 'இங்கு எல்லா வசதிகளும் எனக்கு இருக்கின்றது. ஆனால் என்னைப் பார்க்க வருபவர்களுக்கு இந்த இடம் வசதிப்படாது. என்னைப் பார்க்க சாதாரண மக்களும் வருவார்கள். இங்கு வாழும் தமிழர்கள் ஏழை எளியவர்கள். எல்லோரும் என்னை வந்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அவர்களுக்கு இந்த இடம் சரிப்படாது, எனவே உங்கள் மீது எனக்கு எந்த வருத்தமும் கிடையாது நான் வேறு இடத்தில் தங்கிக் கொள்கிறேன். நன்றி', என்று சொல்லிவிட்டு டல்ஹவுசி சதுக்கத்தில் உள்ள ஒரு ஓட்டலில் அவர் தங்கினார்.

'உன்னிடம் காசு வாங்குவேனா சாமி'

எம்.ஜி.ஆர். காலை மாலை நேரங்களில் தெரு வழியாக நடந்து சென்றபோது அங்கு ஒரு தமிழ் மூதாட்டி கொய்யாப்பழம் விற்றுக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்தப் பெண்ணிடம் போய் தனக்கு கொய்யாப்பழம் வேண்டும் என்று கேட்டு வாங்கிக்கொண்டு எவ்வளவு பணம் என்று கேட்டதற்கு 'உன்னிடம் நான் காசு வாங்குவேனா சாமி. நீ அப்படியே எடுத்துக் கொள்' என்றார். எம்.ஜி.ஆர். அந்தப் பெண்ணுக்குக் கை நிறைய ரூபாய் நோட்டுகளை அள்ளி கொடுத்து விட்டு வந்தார்.

நள்ளிரவில் கோழிக்குழம்பு

எம்.ஜி.ஆர். எங்கு சென்றாலும் அவருடைய இரசிகர்கள் எம்.ஜி.ஆரிடம் மிகவும் பாசமாக நடந்துகொள்வர். தான் ஏதாவது எம்.ஜி.ஆருக்குத் தர வேண்டும் என்ற எண்ணத்துடனும் நடந்துகொண்டனர். ஒரு கிராமத்தில்



வசித்த பாட்டி ஒருவர் அங்க்கிருந்த தென்னந்தோப்பில் எம்.ஜி.ஆர். தனது ஆட்களுடன் இரவில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதை அறிந்ததும் நள்ளிரவில் கோழிக்குழம்பு வைத்து எடுத்துக்கொண்டு வந்து எம்.ஜி.ஆரிடம் கொடுத்தார். எம்.ஜி.ஆர். திரும்பி வரும் போது அந்தப் பாட்டிக்கு நல்ல சால்வை ஒன்றைக் கொண்டு வந்து போர்த்திவிட்டார்.

எம்.ஜி.ஆர். இரசிகர்களின் தனித்தன்மை

எம்.ஜி.ஆருக்கு தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பது தான் அவரது ரசிகர்களின் சிறப்புத் தன்மையும் தனித்தன்மையும் ஆகும். அதே எண்ணத்துடன் எம்.ஜி.ஆரும் அவர்களுக்கு தன்னால் ஆன ஏதாவது உதவியைப் பொருளாகவோ கொடுத்து மகிழ்ந்தார். அறிஞர் அண்ணா எம்.ஜி.ஆரைப் பற்றி எழுதிய ஒரு கவிதை இங்கு நினைவுகூரத் தக்கது.

"எனது அருமை தம்பி எம்.ஜி.ஆரின்

உருவம் சிறியது ஆனால்

உள்ளமோ பெரியது

அவர் கழகத்தின் கண்மணி

கலையுலகத்தின் நன்மணி

குணத்தில் தங்கம்

கொதித்தால் சிங்கம்”

எம்.ஜி.ஆர். குணத்தில் தங்கமாக இருந்து தனது இரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்.

\



4. இரசிகர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். கையால் தாலி எடுத்துக் கொடுத்து திருமணம் செய்தால் அதிர்ஷ்டம் என்ற நம்பிக்கை தமிழகத்தில் பரவலாகக் காணப்பட்டது. கண்ணதாசனும் இக்கருத்தைத் தனது நூலில் உறுதி செய்தார். ஆனால் எம்.ஜி.ஆரின் வாழ்வில் நடந்த ஒவ்வொரு திருமணமும் ஒரு வேதனையாகவே இருந்தது. அவருக்குக் குழந்தைகள் இல்லாமல் போனதும் அவரது திருமண வாழ்க்கைக்கு ஒரு குறையாக அமைந்தது என்றாலும் அவரது கட்சியும் அவரது ரசிகர்களும் இன்றும் அவருக்கு பிள்ளைகளாக இருந்து அவரது நினைவைப் போற்றி வருகின்றனர்.

சத்தியபாமா அம்மையார் எம்.ஜி.ஆருக்கு முதலில் பார்கவி என்ற பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்வித்தார். இருவரும் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்தி வந்த சில மாதங்களில் இரண்டாம் உலகப் போர் அச்சம் காரணமாக அவரை எம்.ஜி.ஆர். சென்னையில் இருந்து கேரளாவுக்கு அனுப்பி வைத்தார். அப்போது இங்கிருந்து மக்கள் குடும்பம் குடும்பமாக வெளியேறினர். கேரளா சென்ற பார்கவி நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். எம்.ஜி.ஆருக்கு தகவல் கிடைத்து அவர் அங்கு செல்வதற்குள் இறுதிச் சடங்குகள் முடிந்துவிட்டன. மனைவியை இழந்த எம்.ஜி.ஆர். மிகுந்த வருத்தத்தில் இருப்பதை கண்டு அவர் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு வந்துவிடுவாரோ என்று

அஞ்சிய அவரது அண்ணன் அவரைச் சில காலம் பின்தொடர்ந்தபடியே இருந்தார்.

மீண்டும் சத்தியபாமா அம்மையார் தன் மகனுக்கு சதானந்தவதி என்ற பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தனர். வாழ்க்கை இனிமையாக இருந்தது. சதானந்தவதியும் கருவுற்றார். சில மாதங்களில் கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டார். மருத்துவப் பரிசோதனைக்கு அவரை அழைத்துச் சென்ற போது சதானந்தவதிக்குக் கருக்குழாயில் கரு உற்பத்தியானது தெரிந்தது. அதனால் கருச்சிதைவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் இனி அடுத்து அவர் கருவுறக் கூடாது என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டனர்.

சதானந்தவதி அடுத்து ஒருமுறை கருவுற்றார் அப்போது மருத்துவர்கள் சதானந்தவதி இனி கருவுற்றால் அவருடைய உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்று எம்.ஜி.ஆரிடம் மிகக் கடுமையாகத் தெரிவித்தனர். இதைக் கேட்டு அதிர்ந்து போன எம்.ஜி.ஆர். குடும்பக்கட்டுப்பாடு செய்து கொண்டதாக அவருடைய உறவினர்கள் சொல்கின்றனர்.



அடுத்து சதானந்தவதியை காசநோய் தாக்கியது. காசநோய்க்கு மருத்துவரிடம் காட்டிய எம்.ஜி.ஆர். மருத்துவரின் அறிவுரைப்படி அவருக்கு வேண்டிய சகல சிகிச்சைகளையும் சில முரட்டு வைத்தியங்களையும் செய்து மேலும் பல ஆண்டுகள் உயிரோடு இருக்கும்படி பார்த்துக்கொண்டார்.

போட்டோகிராபர் ஆர் எஸ் நாகராஜ ராவ் தனது மனைவியுடன் காச நோய் மருத்துவரைச் சந்திக்க வரும் போது எம்.ஜி.ஆரும் சதானந்தவதி அம்மையாருடன் ரிக்ஷாவில் வருவார். அப்போது சதானந்தவதி பிழைப்பது அரிது. ஆனால் நாகராஜராவின் மனைவி பிழைத்துக் கொள்வார் என்ற நிலை இருந்தது. ஆனால் பின்னர் சதானந்தவதி பிழைத்துக்கொண்டார். நாகராஜ ராவின் மனைவி இறந்துவிட்டார். இதனை ராவ் தனது நூலில் தெரிவித்துள்ளார்.

சதானந்தவதி நோயுற்றிருந்த காலகட்டத்தில் தன்னுடன் நடித்த பிரபல நடிகை வி என் ஜானகி அவருடைய உறவினரால் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதைப் பார்த்து அவர் மீது பரிதாபப்பட்டு எம்.ஜி.ஆர். அவரிடம் அன்பு செலுத்தினார். தன்னிடம் அன்பும் ஆதரவும் காட்டும் எம்.ஜி.ஆரை ஜானகியும் நேசித்தார். ஆனால் ஜானகி திருமணமானவர். அவருக்கு ஒரு ஆண்குழந்தையும் இருந்தது. அதனால் அவரைத் திருமணம் செய்வதில் எம்.ஜி.ஆருக்குப் பல சிக்கல்கள் தோன்றின. எம்.ஜி.ஆர். வீட்டில் இதற்கு ஆதரவில்லை. எனினும் அமைதியாக இருந்தனர்.

வி. என். ஜானகி தரப்பில் அவருடைய பாதுகாவலராக இருந்த தாய் மாமன் ஜானகி உச்ச நடிகையாக இருப்பதனால் அவருடைய சொத்துக்களுக்காக எம்.ஜி.ஆர். அவர் மீது ஆசைப்படுகிறார் என்று ஐயம் கொண்டார் ஆனால் காலப்போக்கில் சொத்துக்களுக்காகக் காதலிக்கவில்லை என்ற உண்மையை எம்.ஜி.ஆர். உணர்த்திய பின்பு ஜானகியைத் திருமணம் செய்ய அனுமதி கிடைத்தது. ஆனால் அப்போது மறுமணத் தடைச்சட்டம் அமலுக்கு வந்துவிட்டது மறுமணத் தடைச்சட்டம் வரப்போகிறது என்பதை அறிந்தே ஜானகியின் தாய்மாமன் காலதாமதம் செய்தார் என்பது பின்னர்தான் எம்.ஜி.ஆருக்கு புரிந்தது.

மறுமணத் தடைச் சட்டம் வந்ததால் சதானந்தவதி இருக்கும்போது அவரை சட்டப்படி விவாகரத்து செய்யாமல் ஜானகியைத் திருமணம் செய்வது இயலாது. எம்.ஜி.ஆர்.



'மோகினி' – எம்.ஜி.ராம்சந்தர், வி.என்.ஜானகி (1948)

சதானந்தவதியை தன் உயிருக்கும் மேலாக நேசித்தார். இதனால் ஜானகியை எம்.ஜி.ஆர். தன் இல்லத்திற்கு அழைத்து வந்து அவரையும் அவர் மகனையும் தன் அண்ணன் குடும்பத்தாருடன் தன் மனைவியுடன் சேர்த்து வாழ வைத்தார்.

எம்.ஜி.ஆர். 12 ஆண்டுகள் ஜானகி சதானந்தவதி ஆகிய இருவருடனும் இணைந்து வாழ்ந்து வந்தார். 1962இல் சதானந்தவதி காலமானார். அதன் பிறகு எம்.ஜி.ஆரும் ஜானகியும் ஜானகியின் வளர்ப்புத் தந்தை போல விளங்கிய இயக்குனர் கே சுப்பிரமணியத்தின் முன்பு பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். அன்றுமுதல் அவர்களின் ஒவ்வொரு திருமண நாளன்றும் சாண்டோ சின்னப்பா தேவர் அவர்கள் பெரிய நிலை மாலைகளை வாங்கிக்கொண்டு தோட்டத்துக்கு போய் இருவர் கையிலும் கொடுத்து மாலை மாற்றிக் கொள்ளச் செய்து இருவர் கைகளிலும் பெரிய பூச்செண்டும் வழங்குவார் ஆண்டுதோறும் அம்மனுக்கு நடக்கும் திருக்கல்யாணம் போல தேவர் முன்னிலையில் இவர்களுக்குத் திருமணம் நடந்தது.

எம்.ஜி.ஆருக்கு சதானந்தவதி குடும்பத்தார் மீது மிகுந்த அன்பு இருந்தது. அதனால் அவர் சதானந்தவதியின் தங்கையை [சித்தி பெண்ணை] ஜானகியின் சகோதரர்



மணிக்குத் திருமணம் செய்வித்தார். அவர்களின் பெண்கள் சுதா ஜானகி கீதா ஆகிய மூவரை தம் வீட்டில் வைத்து வால்ற்த்தார். இன்றும் அவர்களுக்கு எம்.ஜி.ஆர். வாழ்ந்த இராமாவரம் வீட்டில் பங்கு உண்டு. எம்.ஜி.ஆருக்கும் ஜானகிக்கும் குழந்தை இல்லாத காரணத்தினால் எம்.ஜி.ஆர். தன்னிடம் திருமண உதவி கேட்டு வருபவர்களுக்கும் திருமண அழைப்பு கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கும் பண உதவி செய்யும் போது தன் கையால் கொடுக்காமல் தன் அண்ணன் எம் ஜி சக்கரபாணியின் கையில் கொடுத்து அவர்களிடம் கொடுக்கச் செய்வார்.

துணை இயக்குனர் இடிச்சபுளி செல்வராஜ், கதாசிரியர் ரவீந்திரன் போன்றோர் எம்.ஜி.ஆரிடம் ‘அண்ணே உங்கள் கையால் கொடுப்பீர்கள் என்று வந்தேன். நீங்கள் பெரியவர் கையால் கொடுத்து விட்டீர்களே’ என்று கேட்டனர். அதற்குப் பதிலளித்த எம்.ஜி.ஆர். ‘நான் பிள்ளை குட்டி இல்லாதவன். என் அண்ணன் பிள்ளை குட்டிக்காரரர். அவர் கையால் கொடுத்தால் உங்களுக்கு நல்லது என்றுதான் நான் உள்ளே இருந்து கொண்டு அண்ணனிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பினேன்’ என்றார். இவர்களுடைய மனம் மிகவும் நெகிழ்ந்து விட்டது. தனக்குப் பிள்ளை இல்லை என்றாலும் தன்னிடம் வருபவர்களுக்கும் உதவி பெறுகின்றவர்களுக்கு தனக்கு வேண்டியவர் நெருங்கியவர் என மற்ற எல்லோருக்கும் பிள்ளை பாக்கியம் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டவராக எம்.ஜி.ஆர். இருந்ததை நினைத்து மனம் நெகிழ்ந்து கண்ணீர் விட்டனர். இத்தகைய பெருந்தன்மையான குணம் உடைய எம்.ஜி.ஆர். தன் ரசிகர்களுக்கு திருமணம் செய்து வைப்பதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டினார்.

எங்கிருந்தோ கேட்ட எம்.ஜி.ஆர். பாடல்

எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்குச் செய்து வைத்த திருமணங்கள் பற்றி பலரும் தங்களது பேட்டிகளிலும் நூல்களிலும் தெரிவித்துள்ளனர். ஒரு முறை எம்.ஜி.ஆர். வெளியூருக்குக் காரில் போய்க் கொண்டிருந்தார். அப்போது நள்ளிரவு கடந்து விட்டது. அந்த வேளையில் ஒரு கிராமத்தில் எம்.ஜி.ஆர்.



பாட்டு ஒலிபெருக்கியில் ஒலித்துக்கொண்டிருந்தது. அதைக் கேட்டதும் எம்.ஜி.ஆர். ‘எங்கிருந்து பாட்டு வருகிறதோ அங்கே போங்கள்’ என்று தன் டிரைவரிடம் கூறினார். அங்குப் போய் பார்த்தால் எம்.ஜி.ஆர். ரசிகர் ஒருவருக்கு மறு நாள் திருமணம்.

அதிகாலையில் திருமண வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்த மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் எம்.ஜி.ஆர். கார் வந்து நின்றதும் இன்ப அதிர்ச்சிக்குள்ளாகினர். உடனே ஓடிவந்து எம்.ஜி.ஆரை வரவேற்றனர் எம்.ஜி.ஆர். மணமகனைப் பார்த்து வாழ்த்துத்

தெரிவித்து அவருக்கு பரிசளித்துவிட்டு அறிவுரைகள் சொல்லி விட்டு வந்தார்.

எம்.ஜி.ஆர். திருமணங்களுக்குப் போகும் போது மணமக்களுக்கு குறிப்பாக ஒரு அறிவுரை சொல்வார். ‘இருவரும் உங்களுடைய குடும்பப் பிரச்சினைகளை உங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் குடும்ப விஷயங்களை அடுத்தவரிடம் கொண்டு செல்லாதீர்கள்’ என்பது எம்.ஜி.ஆர். மணமக்களுக்கு சொல்கின்ற அறிவுரையாகும்.

சீர் கொண்டு சென்ற எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். ரசிகர் சாமிகண்ணு திருமணத்திற்கு எம்.ஜி.ஆர். வரவில்லை என்பதால் அவர் தன்னுடைய திருமணத்தை ஒத்தி வைத்து விட்டார் என்று ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. உடனே எம்.ஜி.ஆர். அடுத்த முகூர்த்தத்தில் அவருக்குத் திருமணத்தை நடத்த முடிவு செய்தார். திருமணத்திற்கு முதல் நாளன்றே லாரியில் திருமணத்திற்கு வேண்டிய சீர் பொருள்கள் அனைத்தையும் திருமண வீட்டுக்கு அனுப்பி வைத்தார். மறுநாள் எம்.ஜி.ஆர். திருமண வீட்டுக்குப் போய் திருமணத்தை நடத்தி வைத்தார். அங்கிருந்தவர்கள் எம்.ஜி.ஆர். அனுப்பிய சீர் பொருட்களைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்தனர்.

சாமிக்கண்ணு உலகம் சுற்றும் வாலிபன் படம் வரும்போது அந்தப் படத்தை வெளியிடக் கூடாது என்று திமுகவினர் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளையில் அவர்களால் அடியும் மிதியும் வாங்கி காயம்பட்டு தன் உயிரைப் பணையம் வைத்துப் போராடியவர்.

சாமிக்கண்ணுவின் பாசத்தை உணர்ந்த எம்.ஜி.ஆர். செங்கம் தொகுதியில் அவரை வேட்பாளர் ஆக்கினார். எம்.ஜி.ஆர். அங்குப் பிரச்சாரத்திற்குப் போனபோது ‘இங்கு நிற்பது சாமிகண்ணு கிடையாது; எம் ஜி ராமச்சந்திரன். எனவே இங்கு நான் நிற்பதாக நினைத்து எல்லோரும் அவருக்கு தேர்தல் வேலைகளைப் பார்க்க வேண்டும்.

மக்களின் வாக்குகளை முழுமையாகப் பெற்றுத் தர வேண்டும்' என்று கூறினார் அவரது வார்த்தைக்கு மதிப்பளித்த தேர்தல் பணியாளர்கள் கட்சிக்காரர்கள் தொண்டர்கள் ரசிகர்கள் பொதுமக்கள் என அனைவரும் சாமிக்கண்ணுவை செங்கம் தொகுதியின் எம்எல்ஏ ஆக்கினர்.

வீடு கட்டிய வேங்கை ராஜேந்திரன்

வேங்கை ராஜேந்திரன் என்பவர் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர். இவர் எம்.ஜி.ஆரின் தலைமையில், எம்.ஜி.ஆர். தாலி எடுத்துக் கொடுத்தால் தான் திருமணம் செய்வேன் என்று பிடிவாதமாக இருந்தார். அப்போது அவரது ஊருக்கு எம்எல்ஏ வீட்டு திருமணத்திற்கு எம்.ஜி.ஆர். வருவதாக செய்தி கிடைத்தது. உடனே வேங்கை ராஜேந்திரன் தனக்காக நிச்சயிக்கப்பட்ட பெண்ணை அழைத்துக்கொண்டு தன் உறவினர்களுடன் எம்எல்ஏ வீட்டுத் திருமணம் நடக்கும் திருமண மண்டப வாசலில் போய் நின்று கொண்டார். அங்கு வந்து காரில் இறங்கிய எம்.ஜி.ஆர். வாசலில் ஒரு ரசிகர் மாலையும் கழுத்துமாக நிற்பதைப் பார்த்து அவரை அருகில் அழைத்து 'ஏன் இப்படி ஒரு வீண்பிடிவாதம்?' என்று கண்டித்து 'உள்ளே வா' என்று அழைத்துச் சென்றார்.

எம்.ஜி.ஆர். எம்எல்ஏ வீட்டு கல்யாண மேடையிலேயே தனது ரசிகரையும் மணமகளையும் நிறுத்தி இரு ஜோடிகளுக்கும் ஒரே நேரத்தில் திருமணத்தை நடத்தி வைத்தார். பிறகு வேங்கை ராஜேந்திரனுக்கு ஒரு பரிசுப் பொட்டலத்தை வழங்கினார். வீட்டுக்குச் சென்று பரிசைப் பிரித்துப் பார்த்த வேங்கை ராஜேந்திரன் அதிர்ந்து போனார். அதில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் இருந்தது. உடனே அவர் அந்த பணத்தை எடுத்துக்கொண்டு வந்து எம்எல்ஏவிடம் வந்து 'அண்ணே வாத்தியார் என்னிடம் இந்த பார்சலை தெரியாமல் கொடுத்துவிட்டார் போல் தெரிகிறது. இதில் நிறைய பணம் இருக்கிறது. இது உங்களுக்கு கொடுக்க விரும்பிய பணப்பரிசாக இருக்கலாம். இந்தாருங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று திருப்பிக் கொடுத்தார். உடனே எம் எல் ஏ 'இல்லை வேண்டாம். தலைவர் கொடுத்தார் என்றால் அது உனக்காகத்தான் இருக்கும். எனக்கு

என்றால் அதை என் கையில் தான் கொடுத்திருப்பார். நீ அதை வைத்துக் கொள்' என்று தெரிவித்து விட்டார்.

வேங்கை ராஜேந்திரன் எம்.ஜி.ஆர். தந்த பணப்பரிசைக் கொண்டு தனக்காக ஒரு வீடு கட்டினார். அந்த வீட்டிற்கு 'எம்.ஜி.ஆர். இல்லம்' என்று பெயர் சூட்டினார். இவ்வாறு திருமணத்தை நடத்தி வையுங்கள் என்று கேட்டுக்கொண்ட ரசிகருக்கு வீடு கட்டும் அளவுக்கு பணப் பரிசை எம்.ஜி.ஆர். வழங்கியதும் உண்டு

யாரோ அனுப்பிய அழைப்பிதழ்

எம்.ஜி.ஆருக்கு நிறைய விழா அழைப்பிதழ்களும் பாராட்டுக் கடிதங்களும் உதவி கேட்டுக் கடிதங்களும் வருவதுண்டு உதவியாளர்கள் அவற்றைப் பிரித்து கட்டிவைப்பார்கள். ஓய்வாக இருக்கும் வேளையில் அந்த கடிதங்களை எம்.ஜி.ஆர். பிரித்து படிப்பார். அதற்கு பதில் எழுதச் சொல்வார். உதவி கேட்டவர்களுக்கு பணம் அனுப்ப ஆவன செய்வார். திருமண அழைப்பிதழ்களையும் அவ்வாறு எம்.ஜி.ஆர். எடுத்துப் பார்த்து அவர்களுக்குப் பரிசளிப்பது உண்டு.

ஒரு நாள் அவர் திருமண அழைப்பிதழ்களின் கட்டைப் பிரித்து பார்த்துக் கொண்டு வந்தபோது அவருக்குத் தெரியாத கொஞ்சம் கூட அறிமுகம் இல்லாத ஒருவர் ஒரு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். அவர் யாரென்று தன் உதவியாளர்களிடம் எம்.ஜி.ஆர். கேட்டார் ஒருவருக்கும் தெரியவில்லை. எம்.ஜி.ஆர். அழைப்பிதழில் இருந்த முகவரியைப் பார்த்து அவர் யார் என்று விசாரித்துக் கொண்டு வரும்படி சொல்லி விட்டார். அவர்கள் போய் விசாரித்ததில் அந்த அழைப்பிதழை அனுப்பியவர் ராம் தியேட்டர் வாசலில் செருப்பு தைக்கும் ஒரு தொழிலாளி. அவர் செருப்பு தைக்கும் இடத்தில் ஒரு எம்.ஜி.ஆர். படம் மாட்டி இருந்தது.

செருப்பு தைப்பவரிடம் எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் 'நீங்கள் எம்.ஜி.ஆருக்கு திருமண அழைப்பிதழ் அனுப்பினீர்களா?' என்று கேட்டனர். அவர் 'ஆமாம் நான் அனுப்பினேன்'. 'எம்.ஜி.ஆரை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா?'



என்று கேட்டனர். ‘இல்லை நான் பார்த்ததில்லை. படத்தில் தான் பார்த்திருக்கிறேன். அவர் எனக்கு குல சாமி. எல்லோரும் முதல் பத்திரிகை குலசாமிக்கு வைப்பார்கள். அது போல நான் என் இதய தெய்வம் எம்.ஜி.ஆருக்கு அனுப்பி வைத்தேன்’ என்றார்.

எம்.ஜி.ஆரைப் படங்களில் மட்டும் பார்த்து அவரைத் தெய்வமாக போற்றி வாழும் அந்த மனிதர் அனுப்பிய அழைப்பிதழைக் கண்ட எம்.ஜி.ஆர். மனம் நெகிழ்ந்து அவரே எதிர்பார்க்காத வகையில் அங்கு போய் அவருடைய வீட்டுத் திருமணத்தில் கலந்துகொண்டு அவருக்குப் பரிசளித்துவிட்டு வந்தார். எம்.ஜி.ஆர். தன்னுடைய ரசிகர்கள் தன் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருப்பதால் அவர்களுக்கு அவரும் பதில் மரியாதை செலுத்த தயங்கியதில்லை.

தன் வீட்டுப் பணியாளருக்கு முன்னுரிமை

எம்.ஜி.ஆர். ஒரு அமைச்சர் வீட்டு கல்யாணத்துக்கு கிளம்பிப் போய் கொண்டிருந்தார். வண்ணாரப்பேட்டை அருகே அவருடைய கார் சென்ற போது நேர் பாதையில்



என்.எஸ்.கிருஷ்ணரின் மகன் திருமணத்தில்
எம்.ஜி.ஆர்.

செல்லாமல் திடீரென பேட்டைக்குள் திரும்பி விட்டது. பின்னால் வந்த கார் ஓட்டுனர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'சரி எம்.ஜி.ஆர். செல்லும் காரைத் தொடர்ந்து செல்வோம்' என்று அவர் காருக்கு பின்னால் வந்தனர். அது சலவைத் தொழிலாளர் குடியிருக்கும் பகுதி. அங்கு ஒரு வீட்டில் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அந்தத் திருமண வீட்டிற்கு சென்ற எம்.ஜி.ஆர். அங்கு மணமக்களுக்குத் திருமணத்தை நடத்தி வைத்து விட்டு அவர்களுக்குப் பரிசு கொடுத்து விட்டு பின்பு அமைச்சர் வீட்டு கல்யாணத்திற்குச் சென்றார்.

எம்.ஜி.ஆர். முதலில் சென்ற திருமண வீடு அவர் வீட்டில் சலவைத் தொழில் செய்து வரும் ஒரு பணியாளரின் வீடாகும்.

தன் பணியாளர்கள் வீட்டுத் திருமணத்திற்குப் பொதுவாக ஜானகியம்மா செல்வது வழக்கம். இந்தத் திருமணத்திற்கும் அந்தப் பணியாளர் ஜானகி அம்மாவிடம் பத்திரிகையைக் கொடுத்து பணமும் வாழ்த்தும் பெற்றுக்கொண்டார். எனினும் ‘அம்மா ஐயா கண்படும்படி இந்தப் பத்திரிகையை வைத்து விடுங்கள். ஐயா பத்திரிகையைப் பார்த்து ஆசீர்வாதம் செய்தால் போதும்’ என்று ஜானகியம்மாவிடம் கேட்டுக் கொண்டார். அம்மாவும் அதுபோல அழைப்பிதழை அவரது மேக்கப் பெட்டியின் மேல் திருமணப் அழைப்பிதழை வைத்து விட்டார். பத்திரிகையைப் பார்த்த எம்.ஜி.ஆர். அந்த தேதியை மனதில் குறித்து வைத்துக் கொண்டு குறிப்பிட்ட தேதியில் முதலில் அவரது திருமணத்திற்கு போய் அத்திருமணத்தை நடத்தி வைத்துப் பரிசளித்து விட்டு பிறகு அமைச்சர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றார்.

எம்.ஜி.ஆர். தன் வீட்டுப் பணியாளரின் திருமணத்திற்கு தான் செல்வதே அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியும் மரியாதையும் கொடுக்கும் என்பதை உணர்ந்தவராக இருந்ததால் எம்.ஜி.ஆர். தன் பணியாளர்களின் திருமணத்திற்கு முன்னுரிமை வழங்கினார் எம்.ஜி.ஆர். திருமணங்களுக்கு போவதில் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் பார்ப்பது கிடையாது. எல்லோரிடமும் சம அன்பு கொண்டவராக இருந்தார்.

தாடியை எடுத்துவிட்டு வா

எம்.ஜி.ஆரின் ரசிகர் ஒருவர் ஒரு கடலோரப் பகுதியில் வசித்து வந்தார். அவர் எம்.ஜி.ஆர். வந்து திருமணம் செய்வித்தால் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்த காரணத்தால் அவருடைய திருமணம் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது.

எம்.ஜி.ஆர். வந்து திருமணம் செய்து வைக்கும் வரை தாடியை எடுக்க மாட்டேன் என்று சபதம் செய்து கொண்டு தலை முடியும் தாடியும் வளர்த்தபடி இருந்தார். இவருடைய கோலத்தைப் பார்த்த பெற்றோர்கள் இராமாவரம் தோட்டத்துக்குப் போய் மணமகனின் நிலையை எடுத்துச் சொல்லி எம்.ஜி.ஆரிடம் தேதி கேட்டனர்.

எம்.ஜி.ஆர். பல்வேறு பணிகளில் பரபரப்பாக இருந்த காரணத்தினால் இவருடைய திருமணத்திற்கு தேதி கொடுப்பது அவருக்குச் சிரமமாக இருந்தது. இருந்தாலும் இவருடைய கோலத்தை பற்றி பெற்றோர்கள் கண்ணீர்விட்டு சொன்னதைக் கேட்டதும் எம்.ஜி.ஆர். மனம் கலங்கி 'ஏன் இப்படி செய்கிறான்?' என்று கேட்டுவிட்டு 'சரி நான் வருகிறேன் என்று சொல்லுங்கள்' எனத் தெரிவித்துவிட்டார்.

எம்.ஜி.ஆர். தனது ரசிகரின் திருமணத்தன்று காரில் தனது உதவியாளர்களுடன் புறப்பட்டுச் சென்றார். அந்த ஊரில் ஒரு பகுதி வரை தான் காரில் செல்ல முடிந்தது. அதன்பிறகு கடற்கரை மணல் அதிகமாகிவிட்டதால் கார் சக்கரம் சுற்ற முடியவில்லை. அங்கிருந்த எம்.ஜி.ஆர். ரசிகர்கள் ஆட்களை இறங்கச் சொல்லிவிட்டு மண்ணில் புதைந்த காரை தூக்கி எடுத்து தள்ளிக் கொண்டு போய் வைத்தனர்.

எம்.ஜி.ஆர். மீது இருந்த பாசத்தினால் எம்.ஜி.ஆர். உடைய காருக்கு ஏதும் சேதம் ஏற்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவருடைய காரை அலாக்காக தூக்கிச் சென்று தள்ளிவைத்தனர். வைத்துவிட்டு அவர் நடந்து செல்ல வேண்டிய பாதையில் தென்னை ஓலையை வெட்டிப் போட்டனர். கடற்கரை மணல் வெகு சூடாக இருந்ததனால் எம்.ஜி.ஆரை தென்னை ஓலையின் மீது நடக்க வைத்து மணமகன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்தனர்.

மணமகன் மீசை தாடியோடு தலை நிறைய முடி வளர்த்தபடி இருந்தார். எம்.ஜி.ஆரை கண்டதும் ஒடி வந்து அவரது காலையில் விழுந்து வாங்கினார். எம்.ஜி.ஆர். 'போய் முடியை வெட்டிக் கொண்டு வா' என்றார் மணமகன் கோலத்தில் வந்து சேர் நான் உட்கார்ந்திருக்கிறேன்' என்றார்.

மணமகன் அங்கிருந்த முடிதிருத்துவோர் கடைக்குப் போய் தலை முடியை சீராகக் கத்தரித்து மீசையை ஒதுக்கி தாடியை எடுத்துவிட்டு மணமகன் கோலத்தில் வந்தார். அதன்பிறகு மணமகளை அழைத்து வரச்செய்து எம்.ஜி.ஆர். திருமணத்தை முடித்து வைத்தார். பின்பு மணமக்களுக்குப் பரிசு பொருளை கொடுத்து அறிவுரை வழங்கினார்.

‘சாந்தி என் மகள்’

எம்.ஜி.ஆர். திருமணம் செய்து வைப்பதில் தனது ரசிகர்களுக்கு மட்டுமல்லாது அவருடைய சக கலைஞர்கள், நடிகர், மற்றும் திரையுலகைச் சேர்ந்த எவராக இருந்தாலும் அவர்களுக்கும் திருமணம் பேசிச் சிறப்பாக செய்து வைப்பது வழக்கம். கண்ணதாசன் தன்னுடைய நூலில் எம்.ஜி.ஆர். திருமணம் நடத்தி வைத்தால் அந்தத் தம்பதியர் சிறப்பாக வாழ்வார்கள். அவருக்கு திருமண ராசி உண்டு என்று எழுதி இருக்கிறார்.

ஒரு படத் தயாரிப்பாளர் தன் மகன் தாய் தகப்பன் இல்லாத ஒரு அனாதைப் பெண்ணைக் காதலித்து அந்தப் பெண்ணையே திருமணம் செய்ய வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பதாக எம்.ஜி.ஆரிடம் சொல்லி வருத்தப்பட்டார். அதற்கு எம்.ஜி.ஆர். ‘இதற்கு ஏன் வருத்தப்படுகிறீர்கள்? அந்தப் பெண் நல்ல பெண்ணாக இருந்தால் அவளையே திருமணம் செய்து வைக்கலாம்’ என்றார். தயாரிப்பாளரோ ‘அந்தப் பெண் என்ன ஜாதி என்ன மதம் என்று ஒன்றுமே தெரியவில்லை. யாரோ எவரோ குடும்பப் பின்னணி எதுவும் தெரியவில்லை. ஒரு பாட்டி மட்டும்தான் இருக்கிறாராம் அந்தப் பெண்ணை எப்படி திருமணம் செய்வது? குடும்பப் பின்னணி தெரியாமல் எப்படி பெண் எடுப்பது? என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டார்.

எம்.ஜி.ஆர். அந்தத் தயாரிப்பாளரிடம் ‘ அந்தப் பெண்ணை நான் என் மகளாக தத்து எடுத்துக் கொள்கிறேன். என் மகளை உங்கள் மகனுக்கு திருமணம் செய்து கொடுங்கள்’ என்றார். இதை சற்றும் எதிர்பாராத தயாரிப்பாளர் அதிர்ந்து போய் விட்டார். ‘சரி நான் அந்தப் பெண்ணையே என் மகனுக்கு திருமணம் செய்து வைக்கிறேன்’ என்று தயாரிப்பாளர் திருமணத்துக்கு சம்மதித்தார்.

எம்.ஜி.ஆர். தயாரிப்பாளரின் மகனை அழைத்துப் பேசி ‘அந்தப் பெண் யாராக இருந்தாலும் உன்னை நேசிப்பது உண்மையென்றால் நீ அவளை கடைசிவரை கண்கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்’ என்று அறிவுரை சொல்லி

அந்தப் பெண்ணையே திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார். அந்தப் பெண்ணின் குழந்தைகள் இன்றளவும் எம்.ஜி.ஆரை தாத்தா என்று அழைக்கின்றனர்.

தொழில் செய்பவனுக்கு பெண் தரலாம்

எம்.ஜி.ஆர். ரசிகர்கள், திரையுலகக் கலைஞர்கள் என்று இல்லாமல் வழியில் போகும் போதும் வரும் போதும் கூட கல்யாண ஏற்பாடுகளைச் செய்ததும் உண்டு. ஒருமுறை அவர் தேர்தல் பிரச்சாரத்திற்கு போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது மதுரைக்கு அருகே திருமங்கலம் பகுதியில் தென்னந்தோப்புக்குள் ஒரு இளைஞரைக் கட்டி வைத்து அடிப்பதைப் பார்த்த எம்.ஜி.ஆர். , தன் உதவியாளரை அனுப்பி எதற்காக அந்த இளைஞனை அடிக்கிறார்கள் என்று கேட்டு வரச் செய்தார். உதவியாளர் போய் விசாரித்து விட்டு அவன் இந்த தோட்டத்துக்காரரின் பெண்ணைக் காதலித்து இருக்கிறான். அதற்காக அவனை அடிக்கிறார்கள் என்றார். எம்.ஜி.ஆர். இறங்கிப் போய் தோட்டத்துக்காரர் இருக்கிறாரா என்று கேட்டு அவரிடம் அவனது கட்டை அவிழ்த்து விடுங்கள் என்று சொல்லி அந்த இளைஞரிடம் அந்தப் பெண் உன்னை நேசிக்கிறாளா? அவளை நீ திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாயா? திருமணம் செய்து கொடுத்தால் நீ அவளோடு ஐக்கியமாக வாழ்வாயாக? என்ன தொழில் செய்கிறாய்/ என்ன வருமானம் வருகிறது? என்று விசாரித்து அறிந்தார்.

எம்.ஜி.ஆர். பெண்ணைப் பெற்றவரைப் பார்த்து ‘நீங்கள் எப்படியும் உங்கள் பெண்ணை ஒருவருக்குத் திருமணம் செய்து தரத் தான் போகிறீர்கள். அந்தத் திருமணத்தை அவளுக்கு விருப்பமான இளைஞருடன் செய்து வையுங்களேன் என்றார். மேலும் இவர் போட்டோ ஸ்டுடியோ வைத்து இருக்கிறார். நீங்கள் இன்னும் உதவினால் அவர் தன்னுடைய போட்டோ தொழிலில் மென்மேலும் சிறப்பாக வரக்கூடும். அவரையும் வளர்த்து உங்கள் பெண்ணையும் மகிழ்ச்சியோடு வாழ வையுங்கள். அவர்கள் இருவருக்கும் விருப்பம் இல்லாத இன்னொருவரைத் திருமணம் செய்து வைத்தால் அவர்களுடைய திருமண

வாழ்வு சிறப்பாக அமையாது. எனவே விருப்பப்பட்ட இருவருக்கும் திருமணம் செய்து வையுங்கள்' என்றார்

எம்.ஜி.ஆரின் அறிவுரையைக் கேட்ட பெண்ணின் தந்தை அவருடைய அறிவுரைக்குக் கட்டுப்பட்டு அந்தக் காதலர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். எம்.ஜி.ஆருக்கும் திருமண அழைப்பிதழை அனுப்பி வைத்தார்கள். எம்.ஜி.ஆரும் பரிசுகளை அனுப்பி வைத்தார்.

திருமணப் பரிசு

எம்.ஜி.ஆர். திருமணங்களுக்குச் செல்லும் போது பொதுவாக ஆறு வெள்ளி பால் தம்ளர்கள் பரிசளிப்பது வழக்கம். வீட்டில் இருக்கும் மாமனார் மாமியார் கணவன் மனைவி மற்றும் இரு குழந்தைகளுக்கும் என ஆறு தம்ளர்கள் எம்.ஜி.ஆர். பரிசளிப்பார். இந்தப் பரிசுப் பொருட்களின் எண்ணிக்கையே ஒரு குடும்பத்தில் இரண்டு பெரியவர்கள் ஆலோசனை சொல்லவும் வழி காட்டவும் இருக்க வேண்டும். ஒரு மகன் தனது பெற்றோர்களைத் தன்னுடன் வைத்து பாதுக்காக்க வேண்டும் அப்போது தான் அவனது பிள்ளைகள் அவனுக்கு முன்னுரிமை கொடுத்து பிற்காலத்தில் கவனித்துக் கொள்வர். இது தனது பிள்ளைகளுக்கு ஒரு இளைஞன் தான் வாழ்ந்து காட்டி வழிகாட்டும் பாடம் ஆகும். அவனது முதல் கடமை ஆகும். அடுத்தது, ஒரு தம்பதி இரண்டு குழந்தைகளே பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான அன்பையும் அக்கறையையும் பெற்றோரால் தர இயலும் என்பதும் விளங்குகிறது. மூன்றாவதாகக் குடும்பத்தில் இருக்கும் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதால் அவர்களுக்கு ஒரே மாதிரியான தம்ளர்களை எம்.ஜி.ஆர். பரிசளித்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. எம்.ஜி.ஆர். அளிக்கும் பரிசுப் பொருள் ஒரு குடும்பத்தின் தத்துவத்தைக் கற்று தருகிறது. எனவே அவரை வாத்தியார் என்று ரசிகர்கள் அழைத்தது சாலப் பொருத்தம்.

திருமணம் என்பதை வாழ்க்கையில் நடக்கும் முக்கிய நிகழ்வாக மதித்த எம்.ஜி.ஆர். மிகுந்த மரியாதையுடனும் கருத்துடனும் அக்கறையுடனும் சம்பந்தப்பட்ட இருவரின்

விருப்பங்களுக்கும் இடமளித்து இரண்டு குடும்பத்தினரையும் உடன்படச் செய்து அந்நிகழ்வை மறக்கமுடியாத நிகழ்வாக மாற்றிக்காட்டினார். தன் மீது அன்பு கொண்டிருந்த ரசிகர்களுக்கும் மற்றவர்களுக்கும் எம்.ஜி.ஆர். நடத்தி வைத்த திருமணங்கள் வெற்றிகரமாக அமைந்தன.



5. வள்ளலாக வாழ்ந்து வானுறையும் தெய்வமான எம்.ஜி.ஆர்.

உலகத்தில் பல கொடை வள்ளல்கள் இருந்திருக்கின்றனர். ஆனால் எம்.ஜி.ஆரைப் போல எவரும் இருந்தது கிடையாது. அவர் தன்னிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு எண்ணி கொடுத்ததோ எடுத்துக் கொடுத்ததோ கிடையாது. ரூபாய் நோட்டு கட்டு என்றால் பிய்த்து கொடுப்பார் அல்லது உதிரி ரூபாய் நோட்டுகளை அள்ளிக் கொடுப்பார் என்று அவரிடம் பண உதவி பெற்றவர்கள் தங்களுடைய பேட்டிகளில் மகிழ்ச்சியோடு தெரிவித்து இருக்கின்றனர். பொருளாகவும் ஆதரவாகவும் உடல் பொருள் ஆவி என அனைத்தாலும் மக்களுக்கு உதவிகளைச் செய்திருக்கிறார்.

பொருளால் வழங்கும் உதவி மட்டுமல்ல வேறு வழிகளிலும் உதவியதுண்டு. என் டி ராமராவ் எம்.ஜி.ஆரின் இரசிகர் மட்டுமல்ல அவரின் உடன்பிறவா தம்பி. ஒரு முறை என் டி ராமராவ் சென்னையில் புது வீடு வாங்கிய போது அங்குக் குடியிருந்தவர்கள் பல மாதங்களாகியும் காலி செய்யாமல் இழுத்தடித்தனர். போலிசுக்குப் போக விரும்பாத என் டி ஆர் தனது அண்ணனாகக் கருதும் எம்.ஜி.ஆரை அணுகி உதவி கேட்டார். உடனே எம்.ஜி.ஆர். அந்த வீட்டுக்காரரிடம் பேசி அவர் காலி செய்வதற்கு தனது ஆட்களை அனுப்பி உதவி செய்து வீட்டை என் டி ஆரிடம் ஒப்படைத்தார். என் டி ஆர் கட்சி தொடங்கப் போவதாக எம்.ஜி.ஆரிடம் தெரிவித்து



வாழ்த்துப் பெற வந்தார். அப்போது எம்.ஜி.ஆர். கட்சியின் பெயர் என்னவென்று கேட்டார் தெலுங்கு ராஜ்ஜியம் என்றார் என் டி ஆர். எம்.ஜி.ஆர். ராஜ்யம் வேண்டாம் தேசம் என்று வைத்துக்கொள்ளுங்கள் தேசப்பற்று முக்கியம் என்றார் என் டி ஆர் எம்.ஜி.ஆரின் அறிவுரையை ஏற்றுக் கொண்டார்.

என் டி ஆர் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பதவி ஏற்கப் போகும் முன்பு சென்னை ராமாவரம் தோட்டத்துக்கு வந்து எம்.ஜி.ஆரை தன் அமைச்சர்களுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். எம்.ஜி.ஆர். இறந்ததும் அவர் உடலை மெரீனா கடற்கரையில் அடக்கம் செய்து முடிக்கும் வரை என் டி ஆர் அங்கு இருந்து அஞ்சலி செலுத்தினார். இவ்வாறு எம்.ஜி.ஆர். உடல் பொருள் ஆவி என அனைத்து வகையிலும் மற்றவர்களுக்கு உதவி செய்தார்.

இன்று எம்.ஜி.ஆருக்குக் கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடத்தி உற்சவர் உலா நடத்துகின்றனர். அங்குக் குழந்தை வரம் வேண்டல், கடன் தீர்தல் போன்ற வேண்டுதல்களையும் எம்.ஜி.ஆர். பக்தர்கள் முன் வைக்கின்றனர். அவர்களின் குறை தீர்கிறது. எம்.ஜி.ஆரின் இறந்த நாளான டிசம்பர் 24 அன்று விரதம் தொடங்கி எம்.ஜி.ஆரின் பிறந்த நாளன்று ஜனவரி 17 அன்று முடிக்கின்றனர். அவர் கோயிலுக்கு இரு முடி கட்டி பாத யாத்திரை

செல்கின்றனர். அவர் இன்று தெய்வமாக இருந்து தனது அன்பர்களைக் காக்கின்றார் என்ற நம்பிக்கை தமிழ் நாடெங்கும் வளர்ந்துவிட்டது. மலேசியா போன்ற நாடுகளிலும் அவருக்குக் கோயில் வளாகத்தில் சிலை எழுப்பத் தொடங்கி விட்டனர்.

அள்ளிக் கொடுத்த வள்ளல் எம்.ஜி.ஆர்.

ஸ்டண்ட் நடிகர் ஷாகுல் எம்.ஜி.ஆரிடம் தான் ஒரு வீட்டு மனை வாங்குவதற்கு முன்பணம் கொடுத்திருப்பதாகவும் தற்போது மீதி பணம் கொடுக்க கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டபோது எம்.ஜி.ஆர். பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டை எடுத்து அதை பிய்த்துக் கொடுத்ததாகத் தெரிவித்தார். எப்போதும் எம்.ஜி.ஆர். எண்ணிக் கொடுக்க மாட்டார். அள்ளி தான் கொடுப்பார் என்றார்.

எம்.ஜி.ஆர். தை பொங்கல் அன்று தன்னை சந்திக்க வருவோருக்கு எம்.ஜி.ஆர். கை நிறைய பணம் அளிப்பது வழக்கம். தன் வீட்டுப் பணியாளர்களுக்கும் தந்து நாடக மன்றத்தைச் சேர்ந்த நடிகர்களுக்கும் ‘கவரில்’ போட்டு தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் கொடுப்பார். வீடு வாங்க, கல்யாணம் நடத்த, பிள்ளைகளின் கல்வி செலவுக்கென தன்னிடம் வருவோரின் தேவைக்கு ஏற்ப எம்.ஜி.ஆர். பண உதவிகள் செய்தார்.

எம்.ஜி.ஆர். தான் உதவி செய்தவர்களுக்கு அந்த உதவி முறையாகப் பயன்பட்டுள்ளதா என்பதையும் கேட்டறிவார். உதவி பெற்றவர்களுக்கு அந்த உதவி பயன்பட்ட விதத்தை அவர்களே மீண்டும் வந்து எம்.ஜி.ஆரைச் சந்தித்து விவரங்களைக் கூற வேண்டும் என்று எம்.ஜி.ஆர். அவர்களிடம் சொல்லுவார். அவர் உதவி முறையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதை அறிந்து கொள்வார்.

வழியில் கண்டவருக்கும் உதவுதல்

எம்.ஜி.ஆர். ஒரு முறை வழியில் வண்டிக் குதிரை செத்துவிட்டதென்று அழுது கொண்டிருந்த குதிரை வண்டிக்காரருக்கு குதிரை வாங்கவும் வீட்டு செலவுக்கும் பணம் கொடுத்துவிட்டு குதிரை வாங்கிப் பழக்கியதும் அதை வண்டியில் பூட்டி என்னிடம் கொண்டு வந்து காட்ட

வேண்டும் என்றார். அது போல அந்தக் குதிரை வண்டிக்காரர் செய்தார்.

எம்.ஜி.ஆர். தன்னைப் பற்றி தவறாக எழுதி வந்தவர்களுக்கும் எதிரணியில் இருந்து தனக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கும் உதவி என்று கேட்டு வந்த நேரத்தில் அவர்களின் மனம் கோணாத வகையில் எதிர்பார்த்ததை விட இரட்டிப்பு மடங்கு பணத்தை அள்ளிக் கொடுத்திருக்கிறார். எனவே ஒரு காலத்தில் பகையாளியாக இருந்தவர்கள் கூட பிற்காலத்தில் எம்.ஜி.ஆரிடம் நன்றி விசுவாசம் உள்ளவர்களாக மாறிவிட்டனர். அவர்களின் பெயர்களை இங்குக் குறிப்பிடுவது நாகரிகமாக இருக்காது.

வாழ்ந்து கெட்டவர்களுக்கு வலியப் போய் உதவுதல்

வாழ்ந்து கெட்டவர்கள் அல்லது எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் உதவி கேட்டு வரும் பொழுது எம்.ஜி.ஆர். அவர்களை வாய் திறந்து உதவி வேண்டும் என்று கேட்கட்டும் என எதிர்பார்க்க மாட்டார். இவரே விரைந்து போய் அவர்களுக்கு உதவியைச் செய்து விடுவார். அவர்கள் வாய் திறந்து கேட்பதை அவமானமாகக் கருதுவார்கள் என்ற எண்ணத்தில் இவர் அவர்கள் கேட்கும் முன்னரே அவர்கள் எதிர்பார்த்ததைவிட கூடுதலான உதவியை அளிப்பார். மேலும் வாழ்ந்து கெட்டவர்கள் அல்லது எதிர் அணியை சேர்ந்தவர்கள் தன்னிடம் வந்து உதவி கேட்டு நிற்பது காலத்தின் கட்டாயமாக மாறிவிட்டதால் அவர்களை மேலும் அவமானப்படுத்துவதோ வருத்தமடையச் செய்வதோ கூடாது. அது மனித நேயமற்ற செயல் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர். அவர்களை அருகில் அழைத்து சட்டைப்பையில் பணத்தை வைத்து விடுவார் அல்லது உதவியாளரிடம் கொடுத்து அவரிடம் கொண்டு போய்க் கொடுத்து விடு என்று சொல்வார். அவர்கள் தன்னிடம் வந்து பணிவாக நின்று உதவியைக் கேட்டு கண்கலங்கி கைநீட்டி நிற்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை. மனித நேயம் மிக்கவர் என்பதற்கு இந்த ஒரு பண்பே நமக்கு நற்சான்றாக அமைகின்றது.

எம்.ஜி.ஆர். ஏ. வி. எம். படப்பிடிப்பில் இருக்கும் போது அங்குப் படப்பிடிப்பு நிலையத்தில் சாதாரணக் கூலியாக ஒருவர் வேலை செய்து கொண்டிருந்ததை பார்த்து கொண்டிருந்தவர் மெல்ல எழுந்து அவரருகில் சென்று அவரை எழுப்பி விசாரித்தார். மறு நாள் முதல் அவர் வேலைக்கு வரவில்லை. அவருடைய வறுமை துடைக்கப்பட்டது. அவர் ஒரு காலத்தில் மிகப் பெரிய தயாரிப்பாளராக இருந்தவர். தயாரிப்பில் நஷ்டம் ஏற்பட்டதால் சொத்துக்களை இழந்து கூலி வேலைக்கு வந்துவிட்டார். அவர் யார் என்பதை அங்கிருந்தவர்களுக்கு சொல்லாமேலேயே அவரை அழைத்துப் பேசி அவரது துயர நிலையை எம்.ஜி.ஆர். போக்கினார்.

எம்.ஜி.ஆரின் கொடைப் பண்பில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய இன்னொரு சிறப்பம்சம் அவர் தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கு மட்டும் உதவுவதில்லை. யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவர்களுக்கு அவரே



வலியப்போய் உதவுவார். உதவி தேவைப்படும் சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு இவரே முன் வந்து உதவுவார். உதவி என்று இவரிடம் கேட்காதவர்களுக்கும் அவர்களிடம் இவரே முந்திச் சென்று உதவுவார்.

மருத்துவ உதவி

1959ஆம் ஆண்டு அவர் காலில் அடிபட்டு சிகிச்சை முடிந்து படப்பிடிப்புக்கு வரத் தொடங்கிய பின்னர் ஒரு நாள் படப்பிடிப்புத் தளத்தில் ஒருவர் சற்று காலை நொண்டியபடி நடந்ததைப் பார்த்து அவரை அழைத்து அவருக்கு வேண்டிய சகல சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்தார். அப்போது அவர் அருகில் இருந்தவரிடம் 'எனக்குப் பண வசதி இருந்ததால் நல்ல சிகிச்சை கிடைத்தது. அவருக்குப் பணம் இல்லாததால் அவர் இந்தக் காலோடு வேலைக்கு வருகிறார். அதனால் அவருக்கு நல்ல சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்தேன்' என்றார்.

இன்னொரு முறை எம்.ஜி.ஆர். ஒரு படப்பிடிப்பில் இருந்தபோது அங்கெ இருந்த ஸ்டில் போட்டோகிராபர் சங்கர் ராவை ஒருவர் உள்ளே அழைத்துப் போய் மருத்துவரிடம் காட்டினார். மருத்துவர் பி ஆர் எஸ். அவருக்கு 'ஹிரண்யா' இருப்பதால் உடனே அறுவை சிகிச்சை வேண்டும் என்றார். சங்கர் ராவுக்கு ஒன்றும் புரியவில்லை.



எம்.ஜி.ஆர். அங்கு வந்தார். 'நீ ஏதோ வலியால் கஷ்டப்படுகிறாய் என்பது உன்னைப் பார்க்கும் போது தெரிந்தது. அதனால் தான் டாக்டரை வரவழைத்தேன் நீ டாகடர் சொல்லும் மருத்துவமனையில் சேர். நான் செலவை பார்த்துக்கொள்கிறேன். அறுவை சிகிச்சை முடிந்து உடம்பு சுகமாகட்டும். அப்புறம் 'செட்டுக்கு' வரலாம்' என்று அனுப்பி வைத்தார். சங்கர் ராவின் நோய் குணமாயிற்று. இவ்வாறு ஒருவர் முகம் வாடுவதைப் பார்த்து அவருக்குரிய கவலைகளை விசாரித்து தீர்த்து வைப்பார். இன்னும் பல நிகழ்ச்சிகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

மனித நேய உதவிகளை அவர் தனி நபருக்கும் செய்திருக்கிறார். வெள்ளம் பூகம்பம் வறட்சி போன்ற இயற்கை பாதிப்புகளால் அவதிப்படும் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, பிற மாநில மக்களுக்கும் இவர் தானே முன் வந்து உதவி செய்திருக்கிறார். இன்னொரு கட்டுரையில் இவ்வுதவிகள் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

செய்ந்நன்றி மறவாமை

எம்.ஜி.ஆர். தன்னுடைய சிறுவயதில் தான் பசித்திருக்கும் போதும் தாயைப் பிரிந்து தனித்து இருக்கும் போதும் தனக்கு ஆதரவு காட்டிய நல்ல உள்ளங்களுக்குப் பிற்காலத்தில் உதவி தேவைப்பட்ட போது இவரிடம் வந்து அவர்கள் கேட்காத சூழ்நிலையிலும் அவர்களின் கஷ்ட நிலை இவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது இவரே முன்வந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தது உண்டு. ஏழ்மையில் வருந்தி வாடும் அவர்கள் எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்கத் தயங்குவது பற்றி எம்.ஜி.ஆர். கேள்விப்பட்ட போது அவர்களுக்கு இவரே முன்வந்து பல்வேறு உதவிகளைச் செய்திருக்கிறார்.

ஒரு முறை நாடக நடிகர் ஒருவரின் மரணம் பற்றிய செய்தி எம்.ஜி.ஆரின் செவிக்கு எட்டியது. அவர் எம்.ஜி.ஆரை வைத்து படம் எடுத்தவரும் இல்லை எம்.ஜி.ஆர். படத்தை இயக்கியவரும் இல்லை. எம்.ஜி.ஆரோடு நடித்தவரும் இல்லை. அவர் யாரென்று கேட்டால். எம்.ஜி.ஆர். சிறுவனாக இருந்த போது ஒரு

நாடகக் கம்பெனியினர் அவர் அண்ணன் சக்கரபாணியை மட்டும் சேர்த்துக்கொள்ள தயாராக இருந்தனர். இவன் சிறுவன் இவன் என்ன செய்வான் என்று எம்.ஜி.ஆரைச் சேர்க்க மறுத்துவிட்டனர். அப்போது இவர் [மரணம் அடைந்த நாடக நடிகர்] அங்கிருந்த நாடக வாத்தியாரிடம் 'அட விடுய்யா இவன் ஒரு உருண்டை சாப்பிடுவானா. இவனையும் சேர்த்துக்க' என்று சொல்லிவிட்டு 'உள்ளே போடா' என்றார்.

அன்று முதல் எம்.ஜி.ஆருக்கும் அந்த நாடகக் கம்பெனியில் வேலையும் சாப்பாடும் கிடைத்தது. ஒரு வேளை சோறு என்பது எம்.ஜி.ஆர். எட்டாக் கனியாக இருந்த காலம் அது. தனக்கு சாப்பாட்டுக்கு வழி ஏற்படுத்தித் தந்தவர் என்பதால் அந்த நாடக நடிகரின் மரணத்துக்கு எம்.ஜி.ஆர். நேரில் வந்து அஞ்சலி செலுத்திவிட்டு அவர் குடும்பத்துக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தார்.

ஆதரவும் ஆறுதலும்

வள்ளல் என்று எம்.ஜி.ஆரைப் பாராட்டும் போது அவர் கொடுத்த பணத்தை மட்டுமல்ல; அவர் செய்த வேறு பிற உதவிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆதரவில்லாமல் இருப்போருக்கு ஆதரவளிப்பதும், அவர்களுக்குத் துணையாக நிற்பதும், கூட எம்.ஜி.ஆர். செய்த மாபெரும் உதவி ஆகும். நடிகைகள் தங்களைப் பாதுகாக்க ஆளின்றித் தவித்தபோது தங்களைப் பற்றி அவதூறான செய்திகளை பத்திரிகைகள் வெளியிட்ட போது ஒரு குறிப்பிட்ட எல்லை வரை பொறுமை காத்து விட்டு பின்பு எம்.ஜி.ஆரிடம் வந்து முறையிடுவர்.

எம்.ஜி.ஆர். நடிகைகளைப் பற்றி அவதூறாக செய்தி எழுதிய பத்திரிகைக்காரர்களை அழைத்து கண்டித்தார். நடிகை இலட்சுமி நடிகை மனோரமா ஆகியோர் இச்சம்பவங்களை தங்களின் பேட்டியில் தெரிவித்துள்ளனர். நடிகைகளிடமும் பொது வாழ்வில் இருக்கும்போது இதுபோன்ற விமர்சனங்களைக் கண்டு அஞ்சக்கூடாது' இதற்காக மனம் கலங்கக்கூடாது. துணிவோடு இருங்கள்' என்று அறிவுரை கூறி அவர்களுக்கும் ஆறுதல் கூறுவார்.

ஜப்தியான வீடுகளை மீட்டுத் தருதல்

எம்.ஜி.ஆருடன் பணிபுரிந்த கலைஞர்கள், அவரோடு அல்லது அவருடைய படத்தில் பணிபுரியாத இயக்குனர், நடிகர், துணை நடிகர், தயாரிப்பாளர் என எந்தக் கலைஞராக இருந்தாலும் அவர்களுக்கு கடன் அதிகமாகி அவர்களின் வீடுகள் ஜப்திக்கு வரும்போது எம்.ஜி.ஆர். அந்த வீடுகளை மீட்டுக் கொடுத்திருக்கிறார். சிலருடைய வீடுகளை அவரே பணம் செலுத்தி மீட்டுக் கொடுத்து இருக்கிறார்.

வேறு சிலருக்கு அவர்களிடம் பணத்தை கொடுத்து போய் மீட்டுக்கொண்டு வந்து தன்னிடம் பத்திரத்தைக் காட்டும்படி சொல்லியிருக்கிறார். நடிகர் நடிகைகள், தொழில் நுட்பக் கலைஞர்கள் படம் தயாரிக்கும் போது கடன்பட்டு வீடு ஜப்திக்கு வரும் போது அவர் இவ்வாறு வீட்டை மீட்டுத் தருவது உண்டு. நடிகர் டி ஆர் மகாலிங்கம், என் எஸ் கிருஷ்ணன், கண்ணதாசன், கண்ணாம்பாள், போன்றோருக்கு ஜப்தியில் இருந்து மீட்டு தந்தார்.

டி ஆர் ராஜகுமாரிக்கு ஜப்திக்கு வராமல் கடன்காரரிடம் இருந்து அவரது வீட்டுப் பத்திரத்தை வாங்கித் தந்தார். வீடு ஜப்திக்கு வரும் நிலைமை எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்டிருக்கிறது உலகம் சுற்றும் வாலிபன் படம் எடுத்த



பிறகு அவருடைய வீடும் ஜப்தி வர இருந்தது. ஆனால் நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றுவிட்டதால் ஜப்தி செய்யப்படவில்லை.

வீடு வாங்கவும் மீட்கவும் உதவுதல்

எம்.ஜி.ஆர். பலருக்கு வீடு வாங்குவதற்கு உதவியிருக்கிறார். நடநீ இயக்குனரான புலியூர் சரோஜா விடு வாங்க முயன்போது அவருக்கு பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது எம்.ஜி.ஆரிடம் சரோஜா உதவி கேட்டார். எம்.ஜி.ஆர். அவருக்குத் தேவையான பணத்தைக் கொடுத்தார்.

விஜயகுமாரிக்கு வீடு வாங்கப் பணம் தேவைப்பட்ட போது சாண்டோ சின்னப்பா தேவரை அணுகினார். அவ்வேளையில் அங்கு வந்த எம்.ஜி.ஆர். சின்னப்பா தேவரிடம் 'விஜிக்கு இப்போது பணத்தைக் கொடுத்து விடுங்கள். இரண்டு படங்களில் வாய்ப்புத் தந்து அவரது சம்பளத்தில் கொடுத்த கடனை கழித்து கொள்ளுங்கள்' என்றார். தேவரிடம் தான் நடிக்கும் விவசாயி படத்தில் விஜயகுமாரிக்கு வாய்ப்புத் தரும்படி சிபாரிசு செய்தார்.

கவிஞர் புலமைப்பித்தனின் பூர்வீக வீடு கடனில் மூழ்க இருந்தபோது அதை அறிந்த எம்.ஜி.ஆர். 'ஏன் என்னிடம் இது பற்றி சொல்லவில்லை' என்று கோபித்துக்கொண்டு 'நான் உங்கள் சகோதரன் இல்லையா?' என்று உரிமையுடன் கேட்டார் பிறகு பணத்தை அளித்து 'போய் உங்களின் பூர்விக வீட்டை மீட்டு அந்தப் பத்திரத்தை என்னிடம் கொண்டு வந்து காட்டுங்கள்' என்றார். அப்போது முதல்வரானதும் அரசு வீடுகளை ஒதுக்கி தருவதில் உதவியிருக்கிறார்.

வெளிப்புறப் படைப்பில் உதவி

வெளி மாநிலங்கள் அல்லது வெளிநாடுகளுக்குப் படப்பிடிப்புகளுக்கு நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களை அழைத்துச் செல்லும்போது எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அங்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை காட்டுவார். இதுவும் அவர் சக கலைஞர்களுக்குச் செய்த மாபெரும் உதவியாகும். இந்த உதவியை நாம் பணத்தால் மட்டும்

மதிப்பிட இயலாது. இத்தகைய உதவிகள் பணத்தை விட அதிக மதிப்புடையவை. வெளிப்புறப் படப்பிடிப்பில் நடிகைகளை யாரும் கேலி செய்தால் உடனே கண்டிப்பார். வெளிப்புறப் படப்பிடிப்புக்குக் கொண்டு வந்த பணம் செலவாகிவிட்டது என்றாலோ, களவு போய் விட்டாலோ உடனே இவர் தன்னுடைய பணத்தைக் கொடுத்து அந்தப் படப்பிடிப்பு தொடர்ந்து நடக்க உதவி செய்வார்.

வெளிப்புறப் படப்பிடிப்பின்போது தன்னிடம் உதவி கேட்டு வருகின்றவர்களை இவர் சென்னைக்கு வரச்செய்து உதவி அளிப்பாரே தவிர அங்கேயே தயாரிப்பாளரிடம் பணம் வாங்கி அவர்களுக்கு கொடுக்கும் பழக்கம் கிடையாது. இதய வீணை படப்பிடிப்பு காஷ்மீரில் நடந்த போது அங்கு தனக்கு வரவேற்பு அளித்த இராணுவ வீரர்கல் விழாவில் நல நிதி வசூல் செய்யப்பட்டது. அங்கு வசூலான அதே அளவு நிதியை



எம்.ஜி.ஆர். வழங்கினார். . தயாரிப்பாளர் மணியன் 'ஏன் இவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள்' என்று கேட்ட போது 'இவர்களால் தான் நாம் நிம்மதியாக தூங்கி எழுந்து தொழில் செய்கிறோம்' என்று பதில் அளித்தார் எம்.ஜி.ஆர்.

சக கலைஞர்களுக்குப் பரிசுப் பொருட்கள்

வெளி மாநிலங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்குப் போகும்போது எம்.ஜி.ஆர். தன்னுடன் இருக்கும் திரையுலகக் கலைஞர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் விரும்பிய பொருட்களை வாங்கி தருவார். அவர்களுக்கு ஸ்வெட்டர், சாக்ஸ், ஷால் போன்றவற்றை வாங்கித் தருவார். அடிமைப் பெண் படப்பிடிப்பு இராஜஸ்தானில் நடந்த போது ஆர் எஸ் மனோகரிடம் 'இங்கு உங்கள் நாடகங்களுக்கு வேண்டிய நகைகளை வாங்கி கொள்ளுங்கள் நான் தான் பணம் கொடுப்பேன்' என்றார். அவ்வாறு கொடுத்து மகிழ்ந்தார்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்காக வெளிநாடுகளுக்கு நடிகர்களை அழைத்துச் செல்லும்போது அவர்களுக்கான கோட் சூட், உடைகளை இவரே தைத்துக் கொடுத்தார். படப்பிடிப்பு முடிந்து திரும்பும் பொது ஹாங்காங்கிலும் இவர்களுக்காக ஒரே மாதிரி துணி எடுத்து அளவெடுத்து தைத்துத் தந்தார். இங்கிருந்து போகும் போது ஆழ்ந்த நீல நிறத்திலும் அங்கிருந்து வரும் போது பொன் வண்ணத்திலும் கோட்டு சூட் அணிந்து அந்த குழுவினர் வந்தனர்.

படப்பிடிப்பு குழுவினர் விரும்பிய கேமரா, சென்ட் பாட்டில், பொம்மை, சாக்லேட் போன்ற பொருட்களை தன்னுடன் அழைத்துச் சென்ற அனைவருக்கும் வாங்கிக் கொடுத்தார். தனக்கும் தனது அண்ணனுக்கும் சங்கர் ராவுக்கும் என மூன்று கேமரா வாங்கினார். அப்போது அங்கு இயக்குனர் ப. நீலகண்டன் வந்ததும் தனது அண்ணனுக்கு வாங்கியதை அவரிடம் கொடுத்துவிட்டார்.

ஒரு தகப்பன் தன் குழந்தைகளை அழைத்துச் சென்றால் அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தருவாரோ அது போல ஒரு தந்தையின் ஸ்தானத்திலிருந்து எம்.ஜி.ஆர்.



தன்னுடைய சகக் கலைஞர்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார்.

பணம் பொருள், பாதுகாப்பு மட்டுமல்லாது திருமணங்கள் நடத்தி வைப்பதிலும் எம்.ஜி.ஆர். பரந்த மனப்பான்மை உடையவராகக் இருந்து வந்தார். எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்ற கொள்கைகளைப் பின்பற்றுவதில் தயங்கியதில்லை. ஜாதி மறுப்பு திருமணம், விதவை மறுமணம், ஏழை பணக்காரர்கள் இடையே நடக்கும் திருமணங்கள் போன்றவற்றை எம்.ஜி.ஆர். ஆதரித்தார்.

எம்.ஜி.ஆர். தன்னுடைய குடும்பத்திலும் தனக்குத் தெரிந்தவர்களின் குடும்பத்திலும் அல்லது தான் போகும் போது வழியில் சந்தித்தவர்களின் குடும்பத்திலும் இதுபோன்ற காதல் கலப்புத் திருமணங்கள் நடக்க வாய்ப்பு இருக்கும்போது அந்த திருமணங்களை இவர் ஆதரித்து நடத்தி வைத்தார். திருமணமான தம்பதிகளுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து அவர்களின் பெற்றோர்களுக்கும் உரிய அறிவுரைகளை வழங்கி மணமக்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கி அவர்கள் சிறப்பாக வாழ்கின்றார்களா என்பதை அவ்வப்போது கவனித்து கொண்டு வந்தார். எனவே இவர் சொல் ஒன்று செயல் ஒன்றாக வாழ்ந்து காட்டியவர் கிடையாது.

எம்.ஜி.ஆர். பலருக்கும் இன்ன உதவி என்றிலாமல் அனைத்து உதவிகளும் செய்திருப்பதை அறிந்த அவரது ரசிகர்கள் அவரைத் தெய்வமாகப் போற்றி வந்தனர். இன்றும் அவரைத் தமது பிள்ளைகளுக்கும் நல்லவர் என அறிமுகம் செய்து வைத்து பரம்பரை பரம்பரையாக எம்.ஜி.ஆர். பக்தி வளரக் காரணமாக இருகின்றனர்.



6. முன்பின் தெரியாதவருக்கும் உதவிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். அறிந்தவர் தெரிந்தவர் மட்டுமல்லாது முன்பின் தெரியாதவருக்கும் மனதார உதவி செய்வார் என்பது கொடைப் பண்பின் தனித்தன்மை ஆகும். அவர். இந்த அறிய பண்பைக் கேட்டறிந்த ரசிகர்கள் அவர் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டனர். பொதுமக்களும் எம்.ஜி.ஆரின் உதவிகளைக் கேட்டறிந்த போது அவருடைய கொடை பண்பின் விசாலத்தைத் தெரிந்து கொண்டனர். எம்.ஜி.ஆர். முன்பின் தெரியாதவர்களுக்கும் உதவிய சம்பவங்கள் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

எம்.ஜி.ஆர். சைக்கிள் கடை

எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்றபோது அவருடைய கார் பழுதாகி நின்று விட்டது. அப்போது கார் ரிப்பேர் செய்ய வந்த இளைஞர் ஒருவர் சுறுசுறுப்பாக மதிநுட்பத்தோடு செயல்பட்டதையும், கவனித்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். கார் சரியானதும் அவரை அழைத்து கை நிறைய பணம் கொடுத்து விட்டு 'நீ என்ன தொழில் செய்கிறாய்?' என்று கேட்டார். அப்போது அந்த இளைஞர் 'நான் வேலை வெட்டி எதுவும் இல்லாமல் சும்மா தான் இருக்கிறேன்' என்றார். எம்.ஜி.ஆர். அவருக்கு 30 சைக்கிள்கள் வாங்கிக் கொடுத்து சைக்கிள் கடை வைக்க உதவினார். அவரும்



‘எம்.ஜி.ஆர். சைக்கிள் கடை’ என்ற பெயரில் சைக்கிள் கடை ஆரம்பித்து நடத்தினார்.

மறுமுறை அவ்வழியே வந்த எம்.ஜி.ஆர். அவரைப் பார்த்து ‘எம்.ஜி.ஆர். என்ற பெயரில் கடை வைத்தால் உன்னிடம் எதிர்கட்சியினர் காங்கிரஸ்காரர்கள் வந்து சைக்கிளை எடுக்க மாட்டார்கள் அதனால் நீ எம்.ஜி.ஆர். என்ற பெயரை எடுத்துவிடு அப்போது தான் உனக்கு தொழில் லாபகரமாக நடக்கும்’ என்றார். ஆனால் அந்த இளைஞரோ ‘எனக்கு வாழ்வளித்த வள்ளல் நீங்கள். உங்கள் பெயரில் தான் நான் கடை வைத்தேன். வந்து எடுக்கிறவர்கள் எடுக்கட்டும் இதுவே எனக்கு லாபம் ஆகத்தான் இருக்கிறது ஐயா’ என்று அவரை வணங்கி நன்றி தெரிவித்தார்.


திலகர் சிலைக்கு ஐம்பதாயிரம்

மகராஷ்ட்டிரா மாநிலத்தை சேர்ந்த இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும் லோகமான்யர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவருமான பாலகங்காதர திலகர் ஆங்கிலேயர்கள் இந்தியர்கள் அரசியல் கூட்டம் நடத்தக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்ததும் வினயாகர் சதுர்த்தியை ஊர்வலமாக நடத்தி சுதந்திர வேட்கையுள்ள இந்தியர்களை

ஒன்றினைத்தார். அன்று முதல் இன்று வரை விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் மெல்ல மெல்ல மற்ற மாநிலங்களுக்கும் பரவி மக்களின் ஒற்றுமைக்கு ஒரு நற்சான்றாக விளங்குகிறது.

லோகமான்ய பாலகங்காதர திலகருக்கு அவரது பேரன் பூனே நகரில் சிலை வைக்க வேண்டும் என்று விரும்பினார். தமிழக அரசின் உதவியை நாடி சென்னை வந்த அவர் மா பொ சிவஞானம் ஐயா அவர்களைச் சந்தித்து பேசினார். ம.பொ.சி. எம்.ஜி.ஆரிடம் அவரை அழைத்து வந்தார். எம்.ஜி.ஆர். திலகர் சிலை செய்வதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டு அதற்குரிய 50,000 ரூபாயை தன் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்துவிட்டார்.

திலகரின் பேரன் ‘ஐயா இவ்வளவு தொகையை நீங்கள் உங்கள் கையிலிருந்து கொடுக்க வேண்டாம் உங்கள் அரசின் மூலமாக ஏதாவது உதவி செய்தால் போதும்’ என்றார். அதற்கு எம்.ஜி.ஆர். அரசின் மூலமாக செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஒரு கோப்பு தயாரித்து அந்த கோப்பு முறையாக கையெழுத்துப் பெற்று வரவேண்டும். அதற்குப் பல நாட்கள் ஆகும் ஒரு நல்ல காரியத்தை ஏன் நாம் தாமதப்படுத்த வேண்டும். எனவே நான் என் கையிலிருந்து தருகிறேன். நீங்கள் திலகரின் சிலையை சிறப்பாக செய்து வையுங்கள்’ என்று கூறி பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.



சுதந்திரப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகர்

திலகர் காங்கிரஸ்காரர்; அவருக்கு சிலை செய்ய எம்.ஜி.ஆர். பணம் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. அவர் பணம் கொடுத்ததும் வெளியே யாருக்கும் தெரியாது இதை ஒரு விளம்பரமாக்கவும் இல்லை. ம.பொ.சி அவர்கள் எம்.ஜி.ஆரைப் பற்றி எழுதிய நூலில் இச் சம்பவத்தை குறிப்பிட்டுள்ளார்.

ப. ஜீவானந்தத்துக்கு சிலை

பொதுவுடைமைக் கட்சியின் மிகப்பெரிய தலைவரான ஜீவாவுக்கு சிலை எடுப்பது என்று அக்கட்சி முடிவு செய்தது. அக்கட்சியில் பொதுவாக தனிநபர் வழிபாடு கூடாது தனிநபருக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடாது என்பது ஒரு கொள்கையாக இருந்தது. அதையும் மீறி அவர்கள் அனைவரும் கட்சியினர் கூடிப்பேசி ஜீவானந்தம் அவர்களுக்கு சிலை வைப்பது என்ற முடிவுக்கு வந்தனர். அதன்பிறகு சிலை எடுப்பதற்கான செலவுகளைச் சந்திப்பதற்கு நன்கொடை திரட்டுவது என்று முடிவாயிற்று.



கம்யூனிஸ்ட் தலைவர் பா.ஜீவானந்தம்

எம்.ஜி.ஆரிடம் கம்யுநிஸ்ட்காரரர்கள் நன்கொடை கேட்டு வந்தார்கள். எம்.ஜி.ஆர். இச்சிலை செய்வதற்கு ஆகும் செலவு எவ்வளவு? என்று கேட்டார். அவர்கள் ஐயாயிரம் ரூபாய் ஆகும் என்று கணக்கிட்டு இருக்கிறோம் என்றனர். இதைக் கேட்ட எம்.ஜி.ஆர். 'நானும் கம்யூனிஸ்ட் கொள்கைகளை என் படத்தில் கூறுகிறேன். எனக்கும் அவரை மிகவும் பிடிக்கும்' என்று கூறிவிட்டு 'சிலைக்கான செலவு முழுவதையும் நானே ஏற்றுக் கொள்கிறேன்' என்று ஐயாயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டார். நன்கொடை வசூலிக்கப் போன கம்யுனிஸ்ட் ஆட்கள் நெகிழ்ந்து போயினர்.

எம்.ஜி.ஆரின் கொடைப் பண்பு பற்றி கேள்விப்பட்டிருந்தாலும் தன் கட்சியினர் தன் ரசிகர் தனக்கு வேண்டியவர்கள் என்றில்லாமல் மற்றவர்கள் அல்லது எதிர்க்கட்சியினர் வந்து உதவி கேட்டாலும் அவர்களுக்கும் மனம் உவந்து உதவக்கூடியவர் எம்.ஜி.ஆர். என்பதை அப்போது புரிந்துகொண்டனர்.

எம்.ஜி.ஆர். விளம்பரத்துக்காக உதவினாரா?

எம்.ஜி.ஆரின் எதிர் அணியை சேர்ந்தவர்கள் அவர் விளம்பரத்திற்காக உதவி செய்கிறார் அல்லது உதவி செய்துவிட்டு அதை விளம்பரம் செய்து தனக்கு புகழ் தேடிக் கொள்கிறார் என்று எம்.ஜி.ஆர். மீது குற்றம் சாட்டுவதுண்டு. அவர் விளம்பரத்திற்காக உதவி செய்பவர் கிடையாது. ஆனால் அவர் உதவி செய்வதால் கிடைக்கும் மகிழ்ச்சியை பலரோடும் பகிர்ந்து கொள்கிறார்.

நாளிதழில் இவரது கொடை பற்றிய செய்தியைப் பார்த்துவிட்டு இன்னும் பலர் வந்து நம்மிடம் பணம் கேட்பார்களே என்று அவர் அஞ்சுவது கிடையாது. எத்தனை பேர் வந்தாலும் இருக்கின்றவரை கொடுப்போம் என்ற நல்லெண்ணத்தில் அவர் தான் கொடுத்ததில் சிலவற்றைச் செய்தித் தாளுக்கு தெரிவித்தார். அவர் கொடுத்ததை அறிந்து மேலும் பலர் வந்து அவரிடம் உதவி பெற்று சென்றனர். அவரும் கொடுத்துக்கொண்டே இருந்தார். மேலும் அவர் ஆங்காங்கே கொடுத்து உதவிய அனைத்தையும் அவர் கணக்கு வைக்கவும் இல்லை செய்தித்தாளில் வெளியிடவும் இல்லை.

இரயிலில் பேருந்தில் பயணிக்கும் போது பலர் என்னிடம் எம்.ஜி.ஆர். தன் பகுதியில் தனக்குத் தெரிந்தவர்களுக்குத் தங்கள் குடும்பத்தினருக்குச் செய்த உதவிகளைப் பற்றிச் சொல்வதுண்டு. அவற்றை நான் என் நூல்களில் தெரிவித்துள்ளேன். அவை இது வரை வெளிவராத செய்திகளே ஆகும்.

இருபத்தோரு ஜோடிகளுக்குப் பரிசுப் பொருட்கள்

தயாரிப்பாளர் ஏவி மெய்யப்ப செட்டியார் தன் மகனின் திருமணத்துடன் இருபத்தொரு ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்க முடிவு செய்தார் இத்திருமான விழாவுக்கு எம்.ஜி.ஆரையும் அழைத்திருந்தார். பந்தலுக்கு வந்த எம்.ஜி.ஆர். திடீரென்று காரை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். பிறகு சிறிது நேரத்தில் திரும்பி வந்தவர்

ஏ.வி.எம் இலவசத் திருமணம் செய்து வைத்த இருபத்தொரு ஜோடிக்கும் எம்.ஜி.ஆர். தனித்தனியாக பட்டுச்சேலை, பட்டு வேட்டி, சட்டை தங்கச்சங்கிலி என்று பரிசளித்தார். தான் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட திருமணம்தானே என்று அவர் கலந்து கொண்டதோடு வாழ்த்தி அட்சதை போட்ட கையோடு திரும்பவில்லை. அந்த இருபத்தொரு ஜோடிக்கும் சிறந்த விலைமிகுந்த பரிசுகளையும் எம்.ஜி.ஆர். வழங்கினார். எம்.ஜி.ஆர். நடத்தி வைத்த திருமணம் அல்லது எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட திருமணம் என்றால் எம்.ஜி.ஆரின் பரிசுகள் அந்த திருமண ஜோடிக்கு நினைவில் நிற்கும் வகையில் வழங்கப்படும்.



இருபது ரூபாய்க்கு இரு நூறு ருபாய்

எம்.ஜி.ஆர். சென்னையிலிருந்து கிளம்பி மற்ற ஊர்களுக்குச் செல்லும் போது விழுப்புரத்தில் உள்ள பெட்ரோல் பங்குக்கு அருகே ஒரு பாட்டியிடம் வடை வாங்குவது வழக்கம். ஒவ்வொரு முறையும் எம்.ஜி.ஆர். வடை வாங்கிய பின்பு பணத்தை அந்த பாட்டியின் தட்டில் போட்டு விட்டு வந்து விடு என்பார். இது பல காலம் நடந்து கொண்டிருந்தது.

ஒரு முறை காரிலிருந்து ஒருவர் இறங்கி வந்து 20 ரூபாய்க்கு வடை வாங்கி விட்டு 200 ரூபாயை அந்த தட்டில் வைத்து விட்டு திரும்பும் போது அந்த பாட்டி அவரின் கையைப் பிடித்துக் கொண்டார். 'ஐயா நீங்கள் யார்? அடிக்கடி இது போல் நடக்கின்றது' என்று கேட்டபோது, 'அம்மா எம்.ஜி.ஆர். அந்த காரில் இருக்கிறார். அவர்தான் ஒவ்வொரு முறையும் உங்களிடம் வடை வாங்கும் போது உங்கள் கையில் பணத்தைக் கொடுத்தால் நீங்கள் மீதி பணத்தைத் திரும்ப தருவீர்கள் என்று சொல்லி உங்கள் தட்டில் இரு நூறு ரூபாயைப் போட்டு விட்டு வரச் சொல்லுவார்' என்று பதில் கூறினார்.

பாட்டி எழுந்து வந்து காரில் இருந்து எம்.ஜி.ஆரை பார்த்து வாழ்த்தி வணங்கி விடைபெற்றுச் சென்றார். எம்.ஜி.ஆர். உழைப்பாளிகளுக்கு மதிப்பளிப்பவர். உழைப்பின் உயர்வை போற்றுகின்றனர்.

எதுவுமே கொடுக்காத எம்.ஜி.ஆர்.

கேட்டவருக்கும் கேளாதவருக்கும் கொடுக்கும் எம்.ஜி.ஆர். ஒரு பெரியவருக்கு மட்டும் எதுவுமே கொடுக்காமல் அவர் கொடுத்த பழங்களைப் பெற்றுக்கொண்டு தானே அவற்றை சாப்பிட்டார்.

ஊட்டி வழியாக ஒரு மலைப் பிரதேசத்திற்குப் படப்பிடிப்புக்குப் போய் விட்டு வரும் பொழுது அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்த ஒரு வயதானவரை எம்.ஜி.ஆர். தனது ஓட்டுனரிடம் சொல்லி காரில்

ஏற்றிக்கொள்ளும்படி செய்தார் எம்.ஜி.ஆர். அவரிடம் 'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்?' என்று கேட்டார். 'எனக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள், நான் விறகுவெட்டி பிழைக்கிறேன்' என்றார். 'அவர்களிடம் போய் நீங்கள் இருக்கலாமே' என்று எம்.ஜி.ஆர். கேட்டதற்கு, 'அவர்களுக்கும் குடும்பம் இருக்கிறதல்லவா' என்று பெரியவர் பதிலளித்தார்.

பெரியவர் தான் இறங்கும் இடம் வந்ததும் இறங்கிக்கொண்டு காரில் இருப்பவர்களைப் பார்த்து 'ஐயா ஒரு நிமிடம் இருங்கள். நான் இதோ வந்து விடுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போய் கை நிறைய பழங்களைக் கொண்டுவந்து கொடுத்து 'இதை ஒரு மிஷ்கின் [யாசகன்] கொடுப்பதாக நினைத்து பெற்றுக் கொள்ளுங்கள். நான் உங்கள் படத்தைப் பார்த்ததில்லை. ஆனால் போஸ்டர் பார்த்திருக்கிறேன் உங்களைப் பற்றி என்னுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பேசுவதைக் கேட்டிருக்கிறேன்' என்று கூறிப் பழங்களை எம்.ஜி.ஆரிடம் கொடுத்தார்.

பெரியவரிடம் இருந்த எம்.ஜி.ஆர். பழங்களைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்ததும் கார் கிளம்பியது. ஜானகி அம்மையார் 'அவருக்கு நீங்கள் பணம் கொடுத்து இருக்கலாமே' என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டார். எம்.ஜி.ஆர். 'அவர் தன் உழைப்பை நம்பி வாழ்கின்றவர். தன் பிள்ளைகளின் வருமானத்தைக் கூட அவர் எதிர்பார்க்கவில்லை. தன்மானம் மிக்கவரிடம் நாம் பணம் கொடுத்தால் அவர் பெற்றுக் கொள்ள மாட்டார் அவருடைய தன்மானத்துக்கு இழுக்கு எனக் கருதுவார். . அவர் கொடுத்த பழங்களை நாம் பெற்றுக் கொள்வதே அவருக்கு நாம் காட்டும் மரியாதை. அந்த பழங்களை நானே சாப்பிடுவேன்' என்று பதில் கூறினார்.

முதியவர் நலத்திட்டத்துக்கு முக்கிய காரணம்

ஏழை முதியவர்களோடு எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அவர் முதல்வரானதும் முதியோர் உதவித் தொகை, மதிய வேளையில் சத்துணவு, இலவச வேட்டி



சேலை ஆகியவற்றை முதியவர்களுக்கு வழங்குவதற்கு அவருக்கு மூல காரணமாக இருந்தது. இதனால் முதியவர்கள் ஆரோக்கியமாக வாழ முடிந்தது. ஓய்வூதியம் அவர்களுடைய கைச்செலவுக்குப் பயன்பட்டது. எனவே தனக்கு தெரிந்தவர் தெரியாதவர் என்று இல்லாமல் எல்லா முதியவர்களுக்கும் எல்லா குழந்தைகளுக்கும் அவர் நல்ல திட்டங்களை கொண்டு வந்தார்.

சர்க்கசுக்கு உதவி

பறக்கும் பாவை படம் எடுக்கப்பட்ட போது நேஷனல் சர்க்கஸ் நிறுவனத்தை அறுபது நாட்களுக்கு ஒப்பந்தம் செய்து அந்த சர்க்கஸ் கூடாரத்துக்கு உள்ளேயும் சுற்றி இருந்த விலங்குக் கூண்டுகளுக்கு இடையிலும் பல காட்சிகள் படம் பிடிக்கப்பட்டன. அப்போது அவர்களின் வாழ்க்கை சிரமங்களை நேரில் கண்டறிந்த எம்.ஜி.ஆர். அவர்கள் மீது அன்பும் பற்றும் கொண்டிருந்தார். 1963 ஆம் ஆண்டு சென்னையில் முகாமிட்டு இருந்த கமலா த்ரி ரிங் சர்க்கஸ் கூடாரத்தில் திடீரென தீப்பிடித்து கூடாரம் முழுவதுமாக எரிந்து சாம்பலாயிற்று. இத் தீ விபத்தால் அந்த சர்க்கஸுக்குப்



பேரிழப்பு ஏற்பட்டது. இதனை அறிந்த எம்.ஜி.ஆர். உடனே சர்க்கஸ் உரிமையாளரிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து மீண்டும் கூடாரத்தையும் ‘கேலரி’யையும் சீர் செய்யும்படி கூறினார்.

வேறு மாநிலங்களுக்கும் உதவிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். உதவி செய்வதில் தனது ஊர் தனது நாடு தனது மொழி பேசுவோர் தனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்று பிரித்துப் பார்ப்பது கிடையாது. தமிழ் தெரிந்தவருக்கு உதவினால் நம்முடைய படங்களை பார்ப்பார். நமக்கு பேரும் புகழும் கிடைக்கும். தமிழ் தெரியாதவருக்கு உதவினால் நமக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது என்று நன்மை தீமை கணக்குப்பார்த்து உதவும் பண்பு எம்.ஜி.ஆரிடம் கிடையாது.

தண்ணீரின் கடமை பருகுவோர் யாராக இருந்தாலும் அவருடைய தாகத்தைத் தீர்ப்பது என்பது போல எம்.ஜி.ஆருடைய பண்பு தேவைப்பட்டவர்களுக்கு உதவி செய்வது; அவர்களின் துன்பத்தைத் தீர்ப்பதுஆகும். . இதனால் அவரை வெளிநாடுகளில் அவரிடம் உதவி கேட்டவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவினார்.

வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அவரை நேரில் சந்தித்து உதவி பெற்றனர். இவர் வெளிமாநிலங்களுக்கு

சென்ற போது அங்கு இருக்கும் நிலைமையை அறிந்து நம் மக்களுக்கு உதவி செய்ததும் உண்டு. ஆக எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்டாலும் கிடைக்கும்; கேட்காவிட்டாலும் கிடைக்கும்.

தென் மாநிலங்களில் வெள்ள நிவாரண உதவி

1961இல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திமுக எதிர்க்கட்சியாக இருந்தபோது கம்யூனிஸ்ட் வலுவான கட்சியாக இருந்த போது எம்.ஜி.ஆர். உடைய படங்கள் அவருடைய ஹீரோயிசத்துக்காக வெற்றி நடை போட்டன. அந்தக் காலத்திலும் எம்.ஜி.ஆர். பிறருக்கு அளித்த உதவி சிறிதும் குறைவுபடவில்லை. அவர் கேட்டவருக்கு எல்லாம் வாரி வழங்கிக் கொண்டே இருந்தார்.

தென் மாநிலங்களான தமிழகம், கேரளா, கர்நாடகா ஆகியவற்றில் கன மழை பெய்து வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். தான் நடித்த சபாஷ் மாப்பிள்ளை சென்னையில் பிளாசா, பாரத், மகாலட்சுமி, ராம் என்ற நான்கு திரையரங்குகளில் வெளியானது. இப்படத்தின் முதல் மூன்று நாள் வசூலை எம்.ஜி.ஆர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணமாக அளித்தார். சபாஷ் மாப்பிள்ளை படம் அவர் நடித்த முழு நீள நகைச்சுவை படம் படத்தின் பல காட்சிகள் மும்பையில் எடுக்கப்பட்டன.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நன்கொடை

எம்.ஜி.ஆர். தன்னுடைய எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் சார்பிலும் தென் மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கு 17 ஆயிரத்து 500 ரூபாயை வழங்கினார். இதில் தமிழ்நாட்டுக்கு 10,000 ரூபாயும், கேரளாவுக்கு 5,000 ரூபாயும், கர்நாடக மாநிலத்திற்கு 2,500 ரூபாயும் பிரித்து அளிக்கும்படி தெரிவித்து அப்போது முதல்வராக இருந்த காமராஜரிடம் கொண்டுபோய் 17 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

அக்காலகட்டத்தில் கேரளாவில் தமிழர்கள் வாழும் பீர்மேடு, இடுக்கி, குமுளி மாவட்டங்களில் எம்.ஜி.ஆர். படம் விரும்பிப் பார்த்தனர். மற்ற பகுதிகளில் அவர்கள் மலையாளத்தில் எடுக்கப்பட்ட சோகப் படங்களையே

விரும்பிப் பார்த்தனர். கர்நாடகா மாநிலத்தில் எம்.ஜி.ஆர். படங்கள் பெங்களூர், கோலார் போன்ற பகுதிகளில் வெற்றி நடை போடும். ஆனாலும் அவர் வேறுபாடு பார்க்காமல் வெள்ளம் பாதிக்கப்பட்ட அனைத்து மாநிலங்களுக்கும் அவர் தன்னாலான உதவிகளைத் தாராளமாகச் செய்தார்.

பம்பாயில் நிலநடுக்கம்

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பம்பாய் பகுதியில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது வீடுகள் கட்டிடங்கள் எல்லாம் இடிந்து விழுந்தன. மக்கள் வீடுகளை இழந்து தவித்து நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இதனை அறிந்த எம்.ஜி.ஆர். உடனே நகரில் வீடுகள் அந்த குடும்பங்களுக்காக பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் மீண்டும் வீடுகள் கட்டிக்கொண்டனர்.

கர்நாடகா மாநிலத்துக்கு உதவி

1959 ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். கர்நாடக மாநிலத்தில் பெங்களூர் நகரில் உள்ள அனாதைகள் விடுதிக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கினார். அங்கு மருத்துவமனை கட்டவும் வாசகசாலை, நூலகம் அமைக்கவும் மூன்று லட்சம் ரூபாய் வழங்கினார். இந்த உதவியை அவர் வழங்கிய ஆண்டு 1959 ஆகும். அந்த ஆண்டு அவர் நாடக மேடையில் குண்டு கருப்பையா தன் மீது விழுந்ததால் கால் எலும்பு முறிந்து பிறகு தக்க மருத்துவ சிகிச்சையின் மூலம் அதை சரி செய்து படப்பிடிப்பில் கலந்து கொண்டு மீண்டும் திரையுலகப் பிரவேசம் நடத்தி இருந்த நேரம்


எம்.ஜி.ஆர். மீண்டும் நடிக்கத் தொடங்கி இருந்தார். அந்த காலகட்டத்தில் அவருக்கு தாய் மகளுக்கு கட்டிய தாலி வெளிவந்து பெரிய வெற்றியைத் தரவில்லை. நாடோடி மன்னன் எடுத்த வகையிலும் அவருக்கு கடன் அதிகமாக இருந்தது. விநியோகஸ்தர்களுக்கு நல்ல லாபம் கிடைத்தது. ஆனால் தயாரிப்பாளர் என்ற முறையில் இவருக்குக் கடன் அதிகமாக இருந்தது. மருத்துவச் சிகிச்சையிலும் பணம் அதிகமாகச் செலவழிந்து இருந்தது. மூன்று மாத காலமாக

அவர் நடிக்க வராததால் வருமானம் இல்லை. அதற்குப் பிறகு வந்த படமும் பெரிய வெற்றியை தரவில்லை. இத்தகைய சோதனையான சூழ்நிலையிலும் கூட அவர் மற்றவர்களுக்கு செய்யும் உதவியில் இருந்து பின்வாங்கவில்லை.

நூலகம் கட்ட கொடுத்த மூன்று லட்சம் இன்றைக்கு 3 கோடிக்கு சமமாகும். அத்தகைய பெரிய தொகையை அவர் தாராள மனதுடன் கர்நாடகாவில் வாழ்ந்த மக்களுக்குப் படிப்பறிவு பெருக்குவதற்காக வழங்கினார்.

ஆந்திர மாநிலத்துக்கு உதவி

தென்மாநிலங்களில் கர்நாடகாவில் எம்.ஜி.ஆருக்கு ரசிகர்கள் அதிகம். அதுபோல ஆந்திராவில் அவருடைய படங்கள் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியாகும். மேலும் இவருடைய படங்களில் என்டிஆர் நடித்தும் மறு படைப்பாகவும் அந்த படங்கள் வெளியாவது உண்டு. இந்நிலையில் ஆந்திராவிலும் எம்.ஜி.ஆருக்கு நல்ல பெயரும் புகழும் இருந்தது. அங்கு கை கால் இழந்த சிறுவர்களுக்காக அவர் பத்தாயிரம் ரூபாய் வழங்கி அவர்களுக்குத் தொழில் கல்வி அளிக்க ஏற்பாடுகள் செய்தார். இது மட்டும் தான் அவர் உதவினார் என்பதல்ல. இது மட்டும் தான் நூல்களில் வெளிவந்துள்ளது. எம்.ஜி.ஆர். செய்த உதவிகளை எவரும் குறித்து வைக்கவில்லை என்பதால் முக்கால்வாசி உதவிகள் பற்றிய தகவல்கள் கூட கிடைக்கவில்லை.



இராஜஸ்தானுக்கு உதவி

எம்.ஜி.ஆர். அடிமைப்பெண் படம் எடுப்பதற்காக இராஜஸ்தான் சென்று இருந்தார். அங்கு ஜெய்ப்பூர் மாளிகையிலும் பாலைவனத்திலும் படமெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்நாட்களில் இராஜஸ்தானில் கடும் வறட்சி நிலவியது. அங்கிருந்த தண்ணீர்ப் பஞ்சத்தை கேட்டறிந்த எம்.ஜி.ஆர். உடனடியாக முதலமைச்சர் சந்தித்துப் பத்தாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கி தண்ணீர்ப் பஞ்சத்தை தீர்க்கும் முயற்சியில் தானும் பங்கேற்றார்.

மறுநாள் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளிவந்ததும் ராஜஸ்தான் மாநில மக்கள் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டனர் . தென்னிந்திய நடிகர் ஒருவர் தங்களுடைய தண்ணீர் பஞ்சம் தீர்ப்பதற்காக பத்தாயிரம் ரூபாய் வழங்கி இருக்கிறார் என்பது அவர்களுக்கு வியப்பாக இருந்தது. அங்குப் பாலைவனத்தில் படப்பிடிப்பில் இருந்த ஒட்டக ஓட்டிகளுக்கு தாகம் தீர்க்க தண்ணீருடன் எம்.ஜி.ஆர். கொக்கோ கோலாவையும் லாரியில் வரவழைத்துக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆரின் கோட்டைப் பண்பு பற்றிய செய்திகள் நாளிதழில் வந்த போது இராஜஸ்தான் மக்கள் பிரமித்துப் போயினர். இத்தகைய இரக்க குணம் உள்ளவர்கள் இந்த உலகத்தில் அதுவும் நம் நாட்டில் தமிழகத்தில் இருக்கின்றாரே என்பதை நினைத்து பெருமிதம் கொண்டனர்.



பிற நாடுகளுக்கு உதவி

தென்னாப்பிரிக்க குழந்தைகளுக்கு உதவி

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த பொது தென்னாப்பிரிக்காவில் குழந்தை நலம் பாதிக்கப்பட்டு அவர்கள் உணவின்றி நோய்வாய்ப்பட்டு மரணிக்கின்றனர் என்ற தகவல் பரவியது. இது கேட்டு மனம் வருந்திய எம்.ஜி.ஆர். பதினெட்டு இலட்சம் ருபாய் நிதி திரட்டி மத்திய அரசு அதிகாரியிடம் வழங்கினார்.

இலங்கைக்கு வெள்ள நிவாரண உதவி

1982 இல் எம்.ஜி.ஆர். வெள்நாட்டு சுற்றுப்பயணத்தில் இருந்த போது இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் மட்டக்களப்பு என்ற பகுதியில் புயல் வெள்ளத்தால் அதிக பாதிப்பு ஏற்பட்டதாகத் தகவல் கிடைத்தது. உடனே அவர் புயல் பாதிக்கப்பட்ட பகுதிக்கு வந்து தமிழர்களை நேரில் கண்டு வேண்டிய உதவிகளைச் செய்வதாககத் தெரிவித்தார், தெரிவித்ததோடு இல்லாமல் தமிழக அரசு மூலமாக முப்பது இலட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவு பிறப்பித்தார்.

யாழ் நூலகம்

சிங்கள ராணுவத்தால் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்த மிகப் பெரிய நூலகம் தீ வைத்து கொளுத்தப்பட்டது. அங்கிருந்த லட்சக்கணக்கான நூல்கள் எரிந்து கரிந்து போயின. பின்னர் பல ஆண்டுகள் கழித்து அந்த நூலகம் புனரமைக்கப்பட்ட போது தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். நூலகத்திற்கு நான்கு லட்சம் மதிப்புள்ள நூல்களை இங்கிருந்து அனுப்பி வைத்தார்.

சிங்கப்பூர் நகரமைப்புக்கு உதவி

எம்.ஜி.ஆர். 1960களில் ஒரு முறை சிங்கப்பூர் அரசின் அழைப்பை ஏற்று அங்கு சென்றபோது அவருக்கு கார்கள் அணிவகுப்புடன் கூடிய வரவேற்பு வழங்கப்பட்டது. இத்தகைய சிறப்பான வரவேற்பு எலிசபெத் மகாராணிக்கு

அடுத்தபடியாக எம்.ஜி.ஆருக்கு தான் அந்நாட்டில் வழங்கப்பட்டது. வரிசையாகக் கார்கள் அணிவகுத்து வந்தபோது சிங்கப்பூர் மக்கள் தெருவோரங்களில் நின்று எம்.ஜி.ஆரைப் பார்த்து மகிழ்ந்தனர்.

எம்.ஜி.ஆர். சிங்கப்பூர் சென்ற போது சிங்கப்பூர் நகரமைப்பு திட்டப் பணிகள் நடந்து கொண்டிருந்தன. எம்.ஜி.ஆர். அந்த நகரமைப்புத் திட்டப் பணிகள் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து பத்தாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கினார். இன்றைக்கு இருக்கக்கூடிய அழகான சிங்கப்பூர் கட்டமைப்புக்கு எம்.ஜி.ஆருடைய பங்கும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் யாரோ ஒரு பெண்

எம்.ஜி.ஆர். அமெரிக்கா சென்றிருந்த போது அவர் சாலையோரமாக நண்பர்களுடன் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு ஓர் இளம்பெண் சிறு குழந்தையுடன் அவரை அணுகி ‘நீங்கள் எம்.ஜி.ஆர். தானே’ என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டு தன்னிடம் இருந்த பணம் செலவாகி விட்டதாகவும் தான் மிகுந்த பண நெருக்கடியில் இருப்பதாக எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார். உடனே எம்.ஜி.ஆர். அவருக்கு தன் பாக்கெட்டில் இருந்து இரு நூறு டாலர் நோட்டுகளை எடுத்து கொடுத்தார். அவர் நன்றி தெரிவித்து விட்டு போன பிறகு எம்.ஜி.ஆர். அருகில் இருந்த நண்பர்கள் என்ன ஏது என்று உண்மையை தெரிந்து கொள்ளாமல் 200 டாலர்களைக் கொடுத்து விட்டீர்களே. நமக்கு இங்கு 200 டாலர்கள் கிடைப்பது என்பது மிகவும் கடினமான காரியம் ஆயிற்றே என்றனர். அதற்கு எம்.ஜி.ஆர். ‘பாவம் ஒரு பெண் அடுத்த நாட்டில் வந்து பணமில்லாமல் தவிக்கின்றார்’ என்பதைக் கேட்கும்போது மனம் பதைபதைக்கிறது. அவர் சொன்னது உண்மையாக இருந்தால் கொடுத்தது நல்லது. அவர் சொன்னது பொய்யாக இருந்தாலும் அவருக்கு அந்த பணம் பயன்படட்டும்’ என்றார்.


ஜப்பானில் முன் பின் தெரியாத ஒருவருக்கு இரண்டாயிரம் யென்கள் வழங்கினார். ஜப்பானிய செலாவணியில் இரண்டாயிரம் என்றாலும் இந்திய மதிப்பில் பல்லாயிரம் பெறும். அப்போதும் உடனிருந்தவர்கள் இத்தொகை அதிகம் என உணர்த்தினர் ஆனால் எம்.ஜி.ஆர். அவ்வாறு கருதவில்லை. மனதார வழங்கி மகிழ்ந்தார்.

எம்.ஜி.ஆருக்கு இருக்கும் அருங்குணங்களில் ஒன்று, அவர் உதவி செய்யும் எவரிடமும் அவரது சோகக்கதையைக் கேட்க விரும்பாதது ஆகும். அவர்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்டு தர்மம் செய்வது அவருக்கு மனம் ஒப்பாத விஷயமாகும். உதவி கேட்டு வருவோரிடம் இருந்து உண்மையை அறிகிறோம் என்ற பெயரில் அவருடைய சோகக் கதையைக் கேட்பது வந்தவருக்கு மிகுந்த மன வேதனையை உருவாக்கும் என்பதால் அவர்களின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச விரும்பாத எம்.ஜி.ஆர். மிகுந்த கருணையோடும் அன்போடும் உதவி கேட்டு வந்தவரிடம் மேற்கொண்டு ஒரு கேள்வியும் கேட்காமல் பணத்தைக் கொடுத்து விடுவார். எம்.ஜி.ஆரிடம் இருக்கும் தனிப்பெரும் பண்புகளில் இதுவும் ஒன்று.

தேசிய அளவில் உதவிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். தமிழகம், பிற மாநிலங்கள் என்ற அளவில் மட்டும் உதவிகளைச் செய்யாமல் தேசிய அளவிலும் பல நன்கொடைகளை வழங்கி இருக்கின்றார். 1963 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போர் மூண்டபோது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு போர் நிதி கேட்டு பொது மக்களிடம் வானொலியில் உரையாற்றினார். இதனை அறிந்த எம்.ஜி.ஆர். காமராஜர் நேருவை சந்திக்கப் போகிறார் என்பதை அறிந்து உடனடியாக 25,000 ரூபாய்க்கான காசோலையை எடுத்துக்கொண்டு இரயில் நிலையத்திற்குச் சென்று அங்கு இரயிலடியில் காமராஜரைச் சந்தித்து முதல் தவணையைக் கொடுத்தார். பின்பு மீதி ஐம்பதாயிரத்தையும் வழங்கினார். 75,000 ரூபாயையும் பெற்றுக் கொண்ட பிரதமர் ஜவகர்லால் நேரு எம்.ஜி.ஆருக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் அனுப்பினார்.

புரட்சி நடிகர் அன்பளிப்பு!



எல்லையில் போர் நடத்தியுள்ள சீனர்களை எதிர்த்துப் போரிடும் ராணுவ வீரர்கள் நலனுக்காக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். 75 ஆயிரம் ரூபாய் அளிக்க முன் வந்துள்ளார்.

பாரத் ரத்னா எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆருக்கு ஜவகர்லால் நேரு , அவரது மகள் இந்திரா காந்தி அம்மையார் அவரது பேரன் ராஜீவ் காந்தி ஆகிய மூவர் மீதும் நல்ல அன்பும் மரியாதையும் இருந்தது. இந்திரா காந்தி அம்மையாரும் ராஜீவ் காந்தியும் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். எம்.ஜி.ஆர். இலங்கை இந்திய நட்புறவுக்கான தேசிய ஒப்பந்தத்திற்கு உறுதுணையாக இருந்ததனால் அவரைத் தேசியத் தலைவராக அங்கீகரித்து ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த காலத்தில் நாட்டின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது எம்.ஜி.ஆருக்கு வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர். மறைந்துவிட்ட காரணத்தால் இவ்விருதை ஜானகி அம்மையார் குடியரசுத் தலைவரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். இவ்விருது ராஜீவ்காந்தி எம்.ஜி.ஆர். மீது கொண்டிருந்த அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்துகிறது.

பாகிஸ்தான் போர் நிதி

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூண்டபோது எம்.ஜி.ஆர். புதுடில்லியில் அரசாங்க அதிகாரியை சந்தித்து போர் நிதியாக 2000 ரூபாய் வழங்கினார். அதன் பிறகு மற்றொரு சந்தர்ப்பத்தில் மத்திய அமைச்சர் ஆர் வெங்கட்ராமன் கையில் பத்தாயிரம் கொடுத்தார். தமிழக முதல்வராக இருந்த காமராஜர் மற்றும் பக்தவச்சலம் அவர்களிடம் 25000, 25000 என இரண்டு முறை தனித்தனியாக போர் நிதி வழங்கினார். அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த போது 25000 ரூபாய் வழங்கினார்.



தலைவர்கள் நினைவு நிதி

1964 ஆம் ஆண்டு நேரு மறைந்த பின்னர் அவர் பெயரால் அமைக்கப்பட்ட நேரு நினைவு நிதிக்கு எம்.ஜி.ஆர். 25000 ரூபாய் வழங்கினார். எம்.ஜி.ஆர். ஆரம்பத்தில் காங்கிரஸ்காரராக இருந்து கதராடை உடுத்தி கழுத்தில் தாமரை மணி மாலை அணிந்து காந்தியின் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றி வந்தார். அப்போது அவர் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்ததார்.

1952இல் கதர் பக்தி என்ற நாடகத்தில் நடித்து வந்தார். அக்காலகட்டத்தில் அவர் கதர் உடுத்துவது தான் வழக்கம். எம்.ஜி.ஆர். அண்ணாவின் கொள்கைகளால் அவருடைய மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு திமுகவில் சேர்ந்த பிறகும் கூட காமராஜர் மேல் இருந்த பற்றும் பாசமும் அவருக்கு சிறிதும் குறையவில்லை. எனவே ஒரு கூட்டத்தில் அவர் காமராஜர் என் தலைவர் என்று பகிரங்கமாக கூறினார்.

காமராஜர் என் தலைவர்; அண்ணா என் வழிகாட்டி என்று கூட்டத்தில் பேசியதைக் கேட்ட திமுகவினர் அவர் படத்துக்கு அளித்து வந்த வரவேற்பைக் குறைத்து விட்டனர். எம்.ஜி.ஆர். தன எம் எல் சி பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்தார். வெற்றிகரமாக ஓட வேண்டிய என் கடமை என்ற படத்துக்கு வந்த திமுகவினர் திரும்பி போயினர். திரையரங்கில் கூட்டம் இல்லாமல் இருக்கும் நிலை தோன்றியது. எனினும் எம்.ஜி.ஆருக்கு அதற்கெல்லாம் அஞ்சவில்லை.

காமராஜர் பிறந்த நாள் விழாவுக்கு நிதி

எம்.ஜி.ஆர். 1963, 1964, 1965 எனத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் காமராஜருடைய பிறந்த நாள் விழாவுக்கு 5504 ரூபாய் நன்கொடை அளித்து வந்தார். 1967இல் அண்ணா முதல்வரான பிறகும்கூட எம்.ஜி.ஆர். காமராஜர் விழாவிற்கு அளிக்கும் நன்கொடையை நிறுத்தவில்லை. அடுத்த ஆண்டும் அவர் அதே 5500 ரூபாய் வழங்கினார். இதுபோல ஆண்டுதோறும் அண்ணா பிறந்த நாள் விழா கொண்டாடுவதற்கும் எம்.ஜி.ஆர். பணம் வழங்கி வந்தார்.

இதய தெய்வத்துக்குக் கோயில்

எம்.ஜி.ஆர். எல்லோருக்கும் உதவியதால் மனித நேயம் மிக்கவராகக் மதிக்கப்பெற்று இன்று மனிதக் கடவுளாகக் மாறியுள்ளார். சென்னைக்கு அருகே திருவெறும்பூரில் அவருக்குக் கலைவாணர் என்பவரால் கோயில் கட்டப்பட்டு அவரது மகள் சங்கீதாவால் அங்கு அனைத்து பூஜைகளும் நடத்தப்படுகின்றன. இன்றைக்கும் எம்.ஜி.ஆரை எந்த எதிர்க் கட்சியினரும் கெட்டவர் என்று சொல்வதில். யாரும் அவரை விமர்சிப்பதில்லை.

அறிவு ஜீவிகள் எங்கே போயினர்?

சினிமாவில் நடித்த போது எம்.ஜி.ஆரை விமர்சிப்பவர்கள் அறிவுஜீவிகள் என்றும் அவரைப் பாராட்டுகிறவர் படிக்காத அறிவிலிகள், பாமரர்கள் என்ற கருத்து ஒரு சாராரால் வளர்க்கப்பட்டது. அவரது கொடைக்குணம் வெற்று விளம்பரம் என்று விமர்சிக்கப்பட்டது. நடிப்பை விட்டு அரசியலுக்கு வரவும் மக்கள் ஆதரவு பெருகியது.

எம்.ஜி.ஆர். மீதான விமர்சனங்கள் குறைந்து அறிவுஜீவிகள் வரிசையை சேர்ந்த டாக்டர் ருத்ரய்யா ஜெய மோகன் போன்றோர் கூட எம்.ஜி.ஆர். பாடங்களை இன்றளவும் எங்களால் ரசிக்க முடிகிறது. மற்ற பழைய படங்களை எங்களால் முழுதாகப் பார்க்க முடியவில்லை என்கின்றனர். எம்.ஜி.ஆர். மீதான வியப்பு வளர்ந்துகொண்டிருக்கிறதே தவிர இன்னும் குறையவில்லை எனபதை மாறாத உண்மை.

நடிகனுக்கு நாடாளத் தெரியுமா என்று கேள்வி எழுப்பியவரும் அப்பனுக்கு சாராயம் பிள்ளைக்கு சத்துணவா என்று கேலி பேசியவர்களும் கூட அடங்கிவிட்டனர். சத்துணவுத் திட்டம் தொடங்கும் போது கேலி செய்த துக்ளக் ஆசிரியர் சோ ‘அதன் பலனை நான் பின்னர் தான் உணர்ந்தேன். ஆரம்பத்தில் அவசரப்பட்டு விமர்சித்துவிட்டேன்’ என்றார்.

எம்.ஜி.ஆரின் மனித நேயம்

எம்.ஜி.ஆரின் மனித நேயத்தால் தொடங்கப்பட்ட பல நலத் திட்டங்கள் மக்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்ற ன. அவர் மக்களின் துன்பத்தை உணர்ந்திருந்தார். அவர்களின் துன்பத்தைப் போக்குவதை தன து கடமையாக எண்ணிச் செயல்பட்டார். எம்.ஜி.ஆர். சினிமாவில் நடித்த காலத்தில் அவரது கதாபாத்திரங்களைக் கடுமையாக எதிர்த்த பொதுவுடமை வாதிகள் அவர் அரசியலுக்கு வந்ததும் அவரது கட்சிக்கு முழு ஆதரவு அளித்தனர். ஏழை மக்களுக்கு உழைப்பதில் கம்யுனிஸ்ட்களும் எம்.ஜி.ஆரும் இணைந்து செயல்பட்டனர். எம்.ஜி.ஆரின் கட்சிக்கு ஏழைகளின் கட்சி என்ற எஎன்ற பெயர் இருந்தாலும் அது மக்கள் கட்சியாகக இருந்து வலிமையாக செயல்பட்டது. மக்களின் ஏகோபித்த ஆதரவையும் பெற்றது, இன்றைக்கும் தமிழகத்தில் அதிக வாக்கு வங்கி உடைய கட்சியாக அண்ணாதிமுக இருந்து வருகிறது.



ஆசிரியர் அவர்களின் நூல்கள்

